# சிறுவர்க்கான சிந்தனைச் சிறுகதைகள்



பேராசிரியர்:
முனைவர் பொன். சௌரிராசன் எம்.ஏ., பிஎச்.டி.

# சிறுவர்க்கான சிந்தனைச் சிறு கதைகள்

பேராசிரியர்
பொன். சௌரிராசன்

வெளியீடு :
தேனகம்
நீகரிகா அபார்ட்மெண்ட்சு
காயத்ரி நகர்
திருப்பதி—517502

# நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| புத்தகத்தின் பெயர் | சிறுவர்க்கான சிந்தனைச் சிறு கதைகள் |
| ஆசிரியர் | பொன். சௌரிராசன் |
| முதற் பதிப்பு | மே, 1999 |
| மொழி | தமிழ் |
| உரிமை | எஸ். சந்திரா |
| நூல் வெளியீடு | தேனகம்<br>நீகரிகா அபார்ட் மெண்ட்ஸ்<br>காயத்ரி நகர்<br>திருப்பதி—517502. |
| நூல் கிடைக்கும் இடம்: | பாரி நிலையம்<br>எண். 184 பிரகாசம் ரோடு<br>சென்னை—600 001. |
| தாள் | 10.5 kg ஷேசாய்த்தாள் |
| நூலின் அளவு | கிரவுன் 1×8 |
| எழுத்து | 12 புள்ளி |
| பக்கங்கள் | 136 |
| பைண்டிங் | சாதா அட்டை பைண்டு |

**விலை : ரூ. 30-00 (2 டாலர்)**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | வெற்றி அச்சகம்<br>91, டாக்டர் பெசன்ட் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

# அணிந்துரை

பாவேந்தர் பாரதிதாசன் சிறுவர்களை,

“இன்று குழந்தைகள் நீங்கள்—எனினும்
இந்த உலகினை ஆளப்பிறந்தீர்”

என உயர்த்திச் சிறப்பிக்கிறார். இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். ஒரு நாடு பெருமைபெற வேண்டும் எனின் அந்நாட்டின் இளைஞர்கள் பண்பாட்டுடன் வளர்க்கப் பெற வேண்டும். நாடு பெருமை பெறுவது அதன் இயற்கை அமைப்பினால் அன்று; அங்குள்ள மக்களின் சிறந்த ஒழுக்கத்தினாலேயாம் என்பார் ஔவையார்.

“எவ்வழி ஆடவர் நல்லவர்
அவ்வழி நல்லை:”

இளைஞர் உயர்வு பெறச் செம்மையான கருத்துகளை மனதில் பதிக்கச் சிறுகதை மிகச் சிறந்த சாதனம் ஆகும்.

சிறுகதை பல்வகையினவாக எழுதப்பெறு கின்றன. வாழ்க்கை நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளவாறே எழுதுவோர் சிலர். சமுதாயச் சிக்கல்களைச் சாடும் கதைகளும் உண்டு. பண்டைய நாட்களில் அறிவுரைக் கதைகளே மிகுதியாக அமைந்திருந்தன. பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப் நீதிக் கதைகள் போன்றவை நீதிக் களஞ்சியங்களாக விளங்குகின்றன.

பேராசிரியர் சௌரிராஜன் அவர்கள் சிறுவர் களை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து மனத்தில் கொள்ளத்தக்க அருமை

யான நீதிகள் அடங்கிய பதினாறு கதைகளை இந்நூலில் தந்துள்ளார். பலவற்றைச் சொல்லும்போது எண்ணம் சிதறுமாதலால் ஒரு பொருளை மையப்படுத்தி அதனை விரிவாக்கிச் சிறந்ததொரு நீதியோடு கதையை முடித்திருக்கும் திறன் போற்றத்தக்கதாய் உள்ளது.

பெரும்பாலும் இயற்கைச் சூழலே அவருடைய கதைக் களமாக அமைந்துள்ளது. ஒன்றைச் சொல்லும் போது அதை நேரிலே பார்ப்பது போன்ற உணர்வை அவருடைய அழகிய நடை உண்டாக்குகிறது.

வரலாறு, அறிவியல், சமூகவியல் கருத்துகள் மிகச் சிறப்பாகக் கதை இடையிடையே கொடுக்கப்பட்டுள்ளன. வேதாரண்யத்தில் கதை தொடங்குகிறது என்றால், அவ்வூரைப் பற்றிய முக்கியமான குறிப்புகளையும் தந்து செல்கிறார். கதையில் 'புரையேறுதல்' என்று சொல்ல வருபவர் புரையேறுதல் பற்றிய அறிவியல் கருத்துக்களை மாணவர்கள் செம்மையாக அறியத்தக்க வகையில் விளக்கிச் செல்கிறார். ஆப்பிளை வருணிக்கும் போது அது அருகே இருப்பது போலத் தோற்றி எடுத்து உண்ணலாம் என நினைக்கத் தோன்றுகிறது. ஆனாலும் அந்த அழகிய நடையின் ஊடே ஆப்பிளை உண்பதைவிட ஆப்பிள் பழம் நியூட்டனுக்கு உணர்த்திய புவியீர்ப்புச் சக்தியை இளைஞர்க்கு ஊட்டும் திறனை எண்ணி வியக்காமல் இருக்கமுடியாது.

கதை ஆசிரியர் ஒரு சிறந்த தமிழ்ப் பேராசிரியர் என்பதை அவருடைய எழுத்து நடையும் எண்ணப் போக்கும் உணர்த்துகின்றன; திருக்குறள் பாக்கள், ஆழ்வார் பாசுரங்கள், தாயுமானவர் பாடல்கள் கதைகளாக உருப் பெற்றுள்ளன. செம்பட்டைச் சிறகுள்ள செம் போத்து, நீலவண்ணச் சிறகுகள் உள்ள மரங் கொத்தி, தங்கக்காசு மாலைகள் தொங்குவன போலக் காட்சி தரும் ஆவாரம் பூக்கள் போன்ற எண்ணற்ற தொடர்கள் ஆசிரியருடைய இலக்கிய பயிற்சியின் செறிவைக் காட்டுகின்றன.

பொன். சௌரிராஜன் அவர்கள் பேரறிஞர். மு. வ. அவர்களுடைய மனதில் நீங்கா இடம் பெற்ற முதன்மை மாணவர். 'தந்தை அறிவு மகன் அறிவு' என்ற முதுமொழிக்கு ஏற்ப மு. வ. அவர்கள் எழுத்து நடையும் எண்ணக் குவியலு மாகவே இச்சிறுகதை நூல் அமைந்திருக்கிறது.

இக்காலச் சிறுகதைக்கு இலக்கணம் வேறு வகையில் கூறுவார் எனினும் பேராசிரியர் சௌரிராஜன் அவர்களுடைய கதைகள்தான் இன்றைய நிலையில் நாட்டுக்குத் தேவை யானவை என்பதை அழுத்தமாக உணர்கிறேன்.

ஆசிரியர் பல்லாண்டு வாழ்ந்து பயன்மிக்க இது போன்ற இன்னும் பல நூல்களைத் தர வேண்டும் என விழைகிறேன்.

அன்புடன்,
சு. செல்லப்பன்

# முன்னுரை

வாழ்வு ஆரம்பப் பள்ளி ஆசிரியனாகத் தொடங்கியது! ஆசிரியப் பணியோடு கல்விப் பட்டப் பயிற்சியிலும் முயன்று பேராசிரியர் மு. வ. அன்புணர்வால் பேராசிரியன் ஆகும் அளவு வளரும் வாய்ப்புப் பெற்றேன். இடையில் சென்னை, அமைந்தகரை திரு. வி. க. பள்ளியிலும் பணி புரிய நேர்ந்தது. அப்போதெல்லாம் சிறுவர்களோடு பழகிய போது பெற்ற உணர்வனுபவமும் பள்ளி அமைந்த இயற்கைச் சூழலும் சிறுவர் பாடல் சில எழுதத் தூண்டின.

இளமையில் உருசிய எழுத்தாளர் சான்றோர் லியோ தால்ஸ்தாய் சிறுவர்க்காக எழுதிய கதை பலவற்றைக் கற்கும் பேறு பெற்றேன்! அவர் அணுகுமுறை, குழந்தைகள் பால் அவர் கொண்ட ஈடுபாடு, சமுதாயச் சிந்தனை ஆகியன என்னைத் தன் வயப்படுத்திவிட்டன. அவர் போல முடியாவிட்டாலும் அவர் வழியில் குழந்தை வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் சிறுவர்க்காகப் பாடல், சிறுகதை அவ்வப்போது எழுதி வரலானேன். அந்தக் கதைகளில் சில இப்போது "சிறுவர்க்கான சிந்தனைச் சிறு கதைகள்" என்ற பெயரில் வெளி வருகின்றன.

நல்ல வாழ்வும், வளர்ப்பும், கல்வியும் இல்லாமைதான், அதாவது வாழ்வு நெறிகளைவிட மூளைத் திறத்தை மட்டுமே மதித்துப் போற்றும் சமுதாயப் போக்குதான் இன்றைய சமுதாய, சமய, அரசியல் சிக்கல்கள் பலவற்றுக்கு அடிப்படை என உணர்ந்தேன். அந்த உணர்வும் சில சிறுவர் கதைகளாக உருவாகக் காரணம் ஆயின.

இத்தகு உணர்வைப் பாராட்டிப் போற்றி ஊக்கி வளர்த்த சான்றோர் பேராசிரியர் மு, வரதராசனார் ஆவர். அவரை இன்று பணிவார்ந்த அன்போடு எண்ணிப் பார்த்து வணங்குகிறேன்.

தொடர்ந்து தன் குடும்பத்தில் பதினைந்து நாட் களுக்குள் மூன்று உறவுகளை, தன் சிறிய தாயார், தன் தம்பி மகனார், தன் மகள் வயிற்றுப் பேரன் ஆகிய மூன்று அன்புக்கு உரிய ஆதரவாக இருந்த உறவினர்களை இழந்த நிலையிலும் இந்தச் ‘சிறுவர்க்கான சிந்தனைச் சிறுகதைகள்’ என்னும் நூலுக்கு அரிய அணிந்துரை ஒன்று சான்றோர் இலம்பொலி சு. செல்லப்பனார் வழங்கி அருளியுள்ளார். அவர்க்குப் பெரிதும் நன்றியுடையேன்.

இப்போது இந்த முதுமையில், அயல் மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் என் கருத்துக்கள், உணர்வுகள் நூலுருவம் பெற்றுத் திகழப் பெரிதும் காரணமாக இருப்பவர் தணிகை செ. உலகநாதன் அவர்கள். அவர்க்கு கைம்மாறு அறியேன்.

‘வெற்றி அச்சகம் விரைவு அச்சகமாக’ நூல் நன்கு வெளிவர உதவியது. தேனகம் பதிப்பகத்தார் பதிப்பித்து அளித்தனர். பாரிநிலைய செல்லப்பனார் என் நூல் விற்பனைக்கு என்றும் உதவி வருபவர். இவர்கள் அனைவர்க்கும் என் நன்றி.

பொன். சௌரிராசன்

# பொருளடக்கம்


1. இறைவனும் இயற்கை நியதியும் 9
2. வண்ணத்துப் பூச்சியை வதைக்காதே 17
3. குரங்கின் விரதம் 24
4. மூன்று பார்வைகள் 31
5. தாத்தா! அப்பாவுக்குத் தெரியாதே! 39
6. அக இருள் நீக்கும் ஆய்ச்சியர் அடிப்பொடி 47
7. சொர்க்கம்—நரகம் 58
8. முருங்கை மரம் 69
9. முள்ளும் மலரும் 77
10. அருளால் எவையும் பார் என்றான் 84
11. முகவரி எது? 93
12. ஒரு மாணவர் 100
13. விளையாடறப்போ விளையாடு 104
14. இயற்கை சிரித்தது 111
15. வெள்ளம் வந்து விட்டது 119
16. "இன்னும் வாழணும்; இன்னும் படிக்கணும்" 124

# சிறுவர்க்கான சிந்தனைச் சிறுகதைகள்

## 1. இறைவனும் இயற்கை நியதியும்

மிகப் பழங்காலம். மிக மிகப் பழங்காலம். பல ஆயிரம், ஏன் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் எல்லாமே வெட்ட வெளியாக, தீப்பிழம்பாக இருந்த காலம். வெட்ட வெளியில் தீப்பிழம்புகள் தீக் கோளங்களாகச் சுழலத் தொடங்கிய காலம்.

கடவுள் கருணை கொண்டார். உயிர்களை உண்டாக்க எண்ணினார். ஒரு தீக்கோளத்தைத் தேர்ந்து எடுத்தார். அதில் பல ஆண்டுகள் தொடர்ந்து மழை பெய்வித்தார். அந்தத்

தீக்கோளம் குளிர்ந்தது. மலைகளாய்ப் பாறைகளாய்க் குளிர்ந்தது.

மழைநீர் அருவிகளாய்ப் பாய்ந்தது; ஆறாய்ப் பெருகி ஓடியது. அதனால் மலைகள் அறுக்கப்பெற்றன. பாறைகள் உடைக்கப் பட்டன. கற்கள் எல்லாம் மலை அருவியோடு ஆற்று வெள்ளத்தோடு ஓடி ஓடி மணலாய் மாறின; மண்ணாய்த் திரண்டன. பள்ளத்தாக்குகளில் ஏரிகள் உருவாயின. பெரும் பெரும் பள்ளத்தாக்குகள் கடலாய்ப் பெருகின.

கடலில் அமீபா என்னும் ஒரு செல் உயிர் உருவாயிற்று. அதன் வழியே பல செல் உள்ள உயிர்கள் பல தோன்றின. மீன் திமிங்கலம் முதலிய உயிர்கள் பல தோன்றின.

மண்ணில் புல்பூண்டு தாவரங்கள் தோன்றின. தாவரங்கள் இடையே புழு பூச்சிகள் தோன்றின. பறவைகள் தோன்றின. குரங்கு, புலி, சிங்கம் முதலிய காட்டு விலங்குகள் தோன்றின.

இப்படி அமைதியாகக் கடவுள் படைப்பு நிகழ்ந்து கொண்டிருக்கையில், தாவரங்களில் ஒன்றுமட்டும் மிகக் கவலையாக இருந்தது. அதற்குக் காரணம் அதிலிருந்த இலைகள் அந்தத் தாவரத்திற்குக் கொடுத்த தொல்லை தான். அந்த இலைகள் எல்லாம் அந்தத் தாவரத்தைப் பார்த்து இப்படிப் பேசின.

"ஏ தாவரமே! இந்தக் கொடுமையைப் பார்த்தாயா? நாங்கள் எல்லாம் ஒரே பச்சை நிறமாய் இருக்கிறோம். மலர்கள் மட்டும் சிவப்பு, மஞ்சள், நீலம் இப்படிப் பலப்பல வண்ணத்தில் இருக்கின்றன. கண்ணுக்கு அழகாக இருக்கிறது. எங்களுக்கும் அப்படிப் பல நிறங்கள் வேண்டும் என்று அடிக்கடி கேட்டுத் தொல்லை கொடுத்தன.

அதற்குப் பதிலாக அந்தத் தாவரம் சொல்லிற்று. "கடவுள் உங்களை எல்லாம் ஒரே பச்சையாகவும் மலர்களைப் பல வண்ணத்துடனும் படைத்துள்ளார். அதற்கு ஏதேனும் காரணம் இருக்கும். கடவுள் ஒவ்வொரு நோக்கத்தோடுதான் ஒவ்வொன்றையும் படைத்துள்ளார். அவர் நோக்கத்திற்கு மாறாக நாம் நடக்கக் கூடாது. அதனால் கேடு தான் விளையும்" என்று சொல்லிற்று.

அந்தப் பதிலில் அந்த இலைகள் திருப்தி அடையவில்லை. பக்கத்தில் இருந்த தாவரங்களிலுள்ள இலைகளிடம் அவை பேசின.

"இந்த அநியாயத்தைப் பார்த்தீர்களா? நாம் மட்டும் ஒரே பச்சை நிறத்தில் இருக்க வேண்டுமாம். மலர்களுக்கு மட்டும் பல நிறமாம். அவை பகட்டாக இருக்கலாம். இது கடவுள் படைப்பாம். நாங்கள் சொல்லிப் பார்த்தோம். கேட்கமாட்டேன் என்கிறது. கடவுள் படைப்புக்கு

எல்லாம் ஒரு நோக்கம் உண்டாம். அது புரியா விட்டாலும் அதன்படிதான் நடக்கவேண்டுமாம். இல்லாவிடில் கெடுதல் வருமாம். வருவது வரட்டும். நாம் எல்லாம் வற்புறுத்தி நம் தாவரங்களைக் கடவுளிடம் கேட்கச் சொல் வோம்; 'இலைகளுக்கும் பல வண்ணங்கள் வேண்டும்' என்று கேட்கச் சொல்வோம்.'' என்று பொறாமையோடு பேசின.

கேட்டுக் கொண்டிருந்த இலைகளில் சில அதற்கு உடன்பட்டன. 'நாம் கடவுளிடம் சென்று போராடுவோம். நியாயம் கேட்போம்' என்று கூக்குரலிட்டன.

பல தாவரங்கள் அவற்றோடு சேர மறுத்தன. நாங்கள் வரமாட்டோம். எங்களுக்குக் கடவுள் படைப்பில் நம்பிக்கை உள்ளது. நம்மை எல்லாம் பச்சையாய்ப் படைத்தலில் கடவுளுக்கு ஒரு நோக்கம் இருக்கும். மாறாக நாம் நடக்கக் கூடாது-என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தன. ஆனால் அவை கேட்காமல் போராட்டத்திற்குத் தயாராயின.

போராடத் தயாரான அந்தத் தாவரங் களின் இலைகள் எல்லாம் கடவுளிடம் கேட்டன. ''கடவுளே! எங்களை எல்லாம் படைத்த கடவுளே! உங்களுக்கு ஏன் இந்த ஓர வஞ்சகம். எங்களை மட்டும் பச்சையாய்ப் படைத்துவிட்டு மலர்களை எல்லாம் வண்ண வண்ணமாய்ப்

படைத்துள்ளீர்களே, இது நியாயமா?'' என்று முறையிட்டன.

கடவுள் திருவாய் மலர்ந்தருளினார்.

'இலைகளே! தாவரங்களே! உங்களுக்கு எல்லாம் நலம் உண்டாகட்டும். நீங்கள் எல்லாம் முறையாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களை எல்லாம் நிலைத்திருக்கச் செய்யும் வேர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் புதைந்து இருக்கின்றன. உங்களைத் தாங்கு வதற்கு அடிமரம், கிளைகள் உள்ளன. நீங்கள் எல்லாம் சூரிய ஒளியை வாங்கி மாவுச் சத்தை உருவாக்கி உங்கள் இனத்தை வளர்க்கவும் வாழ்விக்கவும் உதவுகிறீர்கள்; மலர்கள் பல வண்ணங்களாய் வண்டுகளை ஈர்த்துப் பிஞ்சு களை உண்டாக்கிப் பழங்களின் மூலம் விதை களை உண்டாக்கி இனம் வளரத் துணை செய் கின்றன. எல்லாவற்றிற்கும் நீங்கள் உங்கள் பச்சை நிறத்தால் உண்டாக்கும் மாவுச்சத்தே உணவாகிறது. நீங்கள்தான் தாவரங்களின் வாய். உங்கள் வழியாகத்தான், நீங்கள் சேர்க்கும் மாவுச்சத்தால்தான் தாவரங்கள் வாழ்கின்றன. இந்த நிறம், பச்சை நிறம் இல்லை என்றால் உங்களால் தாவரத்திற்கு உதவ இயலாது; காய், கனி தோன்றாது; உங்கள் இனம் வளராது'' என்று கடவுள் எவ்வளவோ அறிவுரை சொன்னார். அவை


எதுவும் கேட்பதாக இல்லை. மீண்டும் கூக்குர லிட்டன.

"அதைப்பற்றி எல்லாம் எங்களுக்குக் கவலை இல்லை. மலர்களுக்குக் கொடுத்தது போல் எங் களுக்கும் பல நிறங்கள் வழங்குங்கள். அதுவரை நாங்கள் போகமாட்டோம்" என்று அடம் பிடித்தன.

"சரி உங்கள் விருப்பம். பிறகு உங்கள் முட்டாள் தனத்தை நினைத்து வருத்தப்படுவீர் கள். உங்கள் பொறாமையின் விளைவை நினைத்து வருந்துவீர்கள். நீங்கள் பலவண்ணம் பெறுவீர்கள். பச்சையம் உங்களை விட்டுப் போய் விடும். உங்களால் மாவுச் சத்தை உண் டாக்க இயலாது. அதனால் காய் கனி வராது. விதைகள் உண்டாகாது. உங்களை வெட்டி வெட்டி நட்டால்தான் மீண்டும் உண்டாவீர்கள். மறுபடி வந்து வருந்தினால் மாற்ற முடியாது. இன்னொரு முறை நன்றாக எண்ணிப் பாருங் கள். உங்களுக்கு இன்னும் கொஞ்சம் நேரம் தருகிறேன்" என்றார் கடவுள்.

ஆனால் அந்தத் தாவரங்கள் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் பிடித்தன. "இறைவா! நீங்கள் எத்தனை நேரம் கொடுத்தாலும் எங்கள் முடிவு ஒன்றேதான். அது மாறாது. எங்களுக்குப் பலநிறம் வேண்டும். மலர், காய், கனி இல்லாவிட்டாலும் அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை" என்றன.

"சரி, அப்படியே ஆகட்டும்" என்று சொல்லிக் கடவுள் மறைந்து விட்டார்.





அந்தத் தாவரங்களின் இலைகளுக்கு எல்லாம் கருப்பு, வெள்ளை, சிவப்பு, நீலம் இப்படிப் பல நிறங்கள் வந்து சேர்ந்தன. பச்சை நிறம் போய்விட்டது. அவை குரோட்டன்கள் என்று புதுப் பெயர் பெற்றன.

இளவேனில் காலம் வந்தது. மற்ற செடிகளில் எல்லாம் மலர்கள் தோன்றின; மணங்

கமழ்ந்தன. வண்டுகள், தேனீக்கள் வந்து ரீங்காரம் இட்டுச் சுற்றி, சுழன்று மகிழ்ந்தன.

ஆனால் இந்தக் குரோட்டன்கள் மட்டும் மலடுகளாய் நின்றன. பூவும் இல்லை; பிஞ்சு காய்களும் இல்லை; பழங்களும் இல்லை; விதைகளும் இல்லை. நாளடைவில் தங்கள் மலட்டுத் தன்மையை நினைந்து அவை எல்லாம் வருந்தின. கடவுள் கட்டளையை மீறியதற்காக வருத்தப்பட்டுக் கொண்டே 'உம்' என்று மௌனமாகத் தங்கள் காலத்தைக் கழித்தன.

# 2. வண்ணத்துப்பூச்சியை வதைக்காதே!

முத்தப்பன் பட்டி ஒரு சிறு கிராமம். நாற்பது ஐம்பது வீடுகள் தாம் அந்தக் கிராமத்தில் இருந்தன. சுற்றிலும் மாந்தோப்பு, தென்னந்தோப்பு, இலுப்பைத் தோப்புக்கள். ஊருக்குள் முல்லை, மல்லிகைத் தோட்டங்கள். ஒவ்வொரு வீட்டாரும் வீட்டின் பின்புறம் கத்தரி, மிளகாய், சுண்டைக்காய், வெண்டைக்காய்ச் செடிகளை நட்டு நீர் ஊற்றி வளர்த்து வந்தனர்.

தோப்புக்களில் செம்பட்டைச் சிறகுள்ள செம்போத்து, பச்சை நீலவண்ணச் சிறகுள்ள மரங்கொத்தி, உமி நிறமுள்ள உமிக் குருவி, கரிய வண்ணம் உள்ள கரிச்சான் குருவி முதலிய பல பறவைகள் வாழ்ந்து வந்தன. கூடுகட்டிச் சில பறவைகள் முட்டை இட்டுக் குஞ்சு பொறித்து அவற்றுக்குத் தீனி தேடிக் கொண்டு வந்து ஊட்டி வளர்த்து வந்தன. கிளிகள் எல்லாம் இலுப்பைத் தோப்பில் இலுப்ப மரப்பொந்தில் வாழ்ந்து வந்தன.

முல்லை, மல்லிகைத் தோட்டங்களிலும் வீட்டுக்குப் பின் புறமுள்ள செடிகளிலும் வண்ணத்துப் பூச்சிகள் வந்து தங்கள் பல வண்ணச் சிறகுகளை அசைத்துப் பறந்து கொண்டே தேன் உண்ணும்; நீல நிற வண்டுகள் ரீங்காரம் இட்டுக் கொண்டே அந்தச் செடிகளில் பூத்த மலர்களில் உள்ள மகரந்தப்பொடிகளைத் தின்னும். வண்ணத்துப் பூச்சி சிறகுகளை அசைத்து ஆடிக்கொண்டே ஒவ்வொரு செடிக்கும் செல்வது கண்ணுக்கு மிக அழகாக இருக்கும். நீல வண்டுகளின் ரீங்கார ஓசை செவிக்கு இனிமை யாக இருக்கும்.

அந்தக் கிராமத்தில் கோபு, பாலு சீனு என்னும் மூன்று சிறுவர்கள் பக்கத்துப் பக்கத்து வீட்டில் வழ்ந்து வந்தார்கள். மூன்று பேரும் நண்பர்கள். இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் காலையில் வீட்டுத் தோட்டத் திற்கு வரும் வண்ணத்துப் பூச்சியைப் பிடித்துக் காலி டப்பாவில் அடைத்துவைத்து விளை யாடுவர். மலர்களைச் சுற்றும் வண்டுகளை அடித்துத் துரத்துவர்.

சாயங்காலத்தில் தோப்புகளுக்குப் போய் அங்கு மரங்களில் உள்ள கூடுகளைப் பார்ப்பர். பறவைகள் முட்டை இட்டிருக்கும். அவற்றை எடுத்து உடைப்பர். மரப்பொந்துகளில் உள்ள

கிளிக் குஞ்சுகளைப் பிடித்துத் துன்புறுத்துவர் அவை படுகின்ற பாட்டைப் பார்த்துச் சிரிப்பர்.

ஒருநாள் கோபு, பாலு, சீனு மூன்று பேரும் தெருக்கூத்துப் பார்க்கப் பக்கத்து ஊருக்குத் தங்கள் தாத்தாக்களுடன் போனார்கள். அரிச்சந்திரன் கதை கூத்தாக நடந்தது. இரவு இரண்டு மணி வரை நடந்தது. அங்கேயே மூன்று பேரும் தம் தாத்தாக்களுடன் படுத்துத் தூங்கி விட்டனர்.

அப்பொழுது ஒரு வன தேவதை வந்தது. அது கோபுவை ஒரு வண்ணத்துப் பூச்சியாகவும் பாலுவை ஒரு நீல வண்டாகவும் சீனுவை ஒரு கிளிக்குஞ்சாகவும் மாற்றிவிட்டது.

மூன்றுபேரும் பக்கத்திலுள்ள தோட்டங்களுக்கும் தோப்புகளுக்கும் பறந்து போனார்கள். கோபு வண்ணத்துப்பூச்சியாக அங்கும் இங்கும் பறந்து கொண்டிருந்தான். மலருக்கு மலர் தாவி மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தான். அழகான வண்ணத்துப்பூச்சியைப் பார்த்ததும் அங்கிருந்த சிறுவரில் ஒருவன் அதைப் பிடித்துக் காலி 'டப்பா' ஒன்றில் அடைத்து வைத்து விட்டுப் பள்ளிக்கூடம் போய்விட்டான். இருண்ட அந்த டப்பாக்குள் வண்ணத்துப் பூச்சியாக இருந்த கோபு மிகவும் வருத்தப்பட்டான். தான் பல வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்துத் துன்பம் தந்ததை நினைத்துக் கொண்டு அழுதான்.


வண்டாக மாறிப் போன பாலு பூந்தோட்டம் ஒன்றிற்குப் போனான். 'உம் உம்' என்று ரீங் காரம் இட்டுக்கொண்டு பறந்து பறந்து மலர் களில் உள்ள மகரந்தப்பொடியைத் தின்று கொண்டிருந்தான். அந்த அழகான நீல வண்டைப் பூந்தோட்டக்காரனுடைய மகன் பார்த்தான். 'அடே! என்ன அழகாக இந்த வண்டு இருக்கிறது! நீலமாய்ப் பளபளப்பாய் இருக்கிறது. இதைப் பிடித்துக் கொண்டு பள்ளிக் கூடத்துக்குப் போவோம். அங்கு நண்பர்களிடம் எல்லாம் காட்டுவோம்' என்று நினைத்தான். உடனே கைக்குட்டையை வீசி அதைப் பிடித் தான். காலி நெருப்புக் குச்சிப் பெட்டியுள் போட்டு மூடி எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போனான். அங்கு எல்லோருக்கும் காண்பித் தான். ஒரு பையன் அதன் சின்னஞ்சிறு சிறகை இப்படியும் அப்படியும் அசைத்து அசைத்து ஆராய்ந்தான். மற்றொருவன் அதன் கால்களை இழுத்து நீட்டி முடக்கிப் பார்த்தான். வண்டாக இருந்த பாலு 'ஐயோ! வலிக்கிறதே!' என்று கத் தினான். அது யார் காதிலும் விழவில்லை. 'ஐயோ! அம்மா! என்று அழுதான். அந்தக் கண்ணீர் யாருக்கும் தெரிய வில்லை. அவர்கள் தொல்லை கொடுத்து அதில் மகிழ்ந்தார்கள். 'ஐயோ நாம் எத்தனை வண்டுகளைப் பிடித்து வதைத் திருக்கிறோம். அவை எல்லாங்கூட இப்படித்தானே துன்பப்பட்டிருக்கும்' என்று தான் செய்ததை எண்ணி வருந்தினான்.

கிளிக்குஞ்சாக இருந்த சீனு தத்தி தத்திப் பறந்து இலுப்பைத் தோப்பை அடைந்தான். வெறுமையாய் இருந்த ஒரு பொந்திற்குள் போய்ப் பதுங்கிக் கொண்டான். ஆனால் யாரோ ஒரு முரட்டுச் சிறுவன் அந்த இலுப்பை மரத்தில் ஏறிப் பொந்துகளை எல்லாம் பார்த்தான், கிளிக்குஞ்சாக இருந்த சீனுவைப் பிடித்து விட்டான்; சீனு கையாலும் மூக்காலும் குத்திப் பார்த்தது. அந்த முரட்டுப்பையன் அதற்கு எல்லாம் பயப்படவில்லை. பிடித்த பிடியை விடாமல் கீழே கொண்டு போனான்; அங்கு அவன் தோழர் பலர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாம் ஆளுக்கு ஒருவராகக் கிளிக் குஞ்சின் கால்களை, சிறகுகளை, மூக்கைப் பிடித்து இழுத்து இழுத்து வேடிக்கை பார்த் தனர். சீனுவுக்கு ஒரே வலியாக இருந்தது. தான் செய்த தவற்றை நினைத்துக் கொண்டான். 'ஐயோ! நாமும் கூட கோபு, பாலுவுடன் சேர்ந்துகொண்டு வண்ணத்துப்பூச்சி, வண்டு, பறவைகளின் குஞ்சுகளுக்கு நிறையத் தொல்லை கொடுத்தோமே. அப்போது அவை எல்லாம் இப்படித்தானே துன்பப்பட்டிருக்கும் என நினைத்து நினைத்து வருந்தினான்? அப்படியே மயக்கம் வந்தது: அந்தச் சிறுவர்கள் கையில் மயங்கி விழுந்துவிட்டான்.

மீண்டும் வனதேவதை அவர்கள் கண்கள் முன் தோன்றிற்று. கோபு, பாலு, சீனு வாருங்

கள். உங்களை மறுபடியும் பழையபடி மாற்றி விடுகிறேன். இனிமேல் சின்னஞ்சிறு பறவை களுக்கு, வண்டுகளுக்கு எல்லாம் தொல்லை தரக் கூடாது. அவை தோட்டக்காரனுடைய நண்பர் கள். உங்களுக்குத் தோழர்கள். அவற்றின் அழகைப் பார்த்து மகிழுங்கள். இனிய குரலைக் கேட்டு மகிழுங்கள். அழகு அழகான வண்ணங் களை, பல விதமான இனிய குரல்களை அவற்றிற்கு அளித்த கடவுளை நினைத்து நன்றி செலுத்துங்கள். அவற்றிற்குத் துன்பம் செய்வது அவற்றைப் படைத்த கடவுளுக்கே துன்பம் செய்வது போல ஆகும். என்று சொல்லி மறைந்தது.

திடீர் என்று 'சுள்ளென்று' உடம்பு சுட்டது கோபு. பாலு, சீனு கண்விழித்தனர். பொழுது விடிந்து சூரியன் எழுந்து எரிக்கத் துவங்கி விட்டது. பக்கத்துக் கிராமத்துக்குக் கூத்துப் பார்க்க வந்தது நினைவுக்கு வந்தது. அவர்களு டைய தாத்தாக்களும் எழுந்து மூவரையும் தங்கள் மூத்தப்பன்பட்டிக்கு மீண்டனர். வழியெல் லாம் தாங்கள் இரவில் வண்ணத்துப் பூச்சியாய், நீலவண்டாய், கிளிக்குஞ்சாய் மாறிச் சிறு பிள்ளைகளிடம் பட்ட வேதனைகளைக் கோபு, பாலு, சீனு மூவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டே வந்தனர். இனிமேல் எந்தப் பறவைக்கும், வண்டுக்கும், வண்ணத்துப் பூச்சிக்கும் தொல்லை தருவதில்லை என்று உறுதி செய்து கொண்டனர்.



# 3. குரங்கின் விரதம்

குழந்தைகள் எல்லாம் அரச மரத்தடியில் கூடி இருந்தார்கள். கதை கேட்க ஆவலாய் இருந்தார்கள். ஆசிரியரும் கதை சொல்லத் தொடங்கினார்.

வேதாரண்யம் என்ற ஊர் பற்றித் தெரியுமா உங்களுக்கு? தென் தமிழ் நாட்டில் அது உள்ளது; கீழ்க்கடற்கரை ஓரத்தில் அமைந் துள்ளது. கடற்கரைக்கும் ஊருக்கும் இடையே முன்னொரு காலத்தில் காடு சூழ்ந்திருந்தது. வாகை, மருதம், தென்னை, புன்னை மரங்கள் நிறைந்த காடு அது. கிழக்குப் பகுதியில் எப்போதும் கடல் 'ஓ' என அலை ஓசையை எழுப்பிக் கொண்டிருக்கும். மேற்குப் பக்கம் ஊர். இடையில் தெற்கு வடக்காக அந்தக் காடு நீண்டிருந்தது.

ஊரில் வேத புரீசுவரர் திருக்கோயில், திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் என்னும் சைவ சமயச் சான்றோர்கள் வந்து திறவாத திருக்கோயில் கதவைத் திறந்து மூட, தேவாரப்

பதிகம் பாடினர். அப்படிச் சிறப்புப் பெற்றது அந்தக் கோயில், எனவே ஊர் மக்கள் எல்லாம் வந்து நாள்தோறும் வணங்கித் தொழுது செல்வர். அந்தக் காட்டில் வசித்து வந்த ஒரு குரங்கும் இப்படியே நாள்தோறும் வந்து கோயிலைப் பக்தியோடு சுற்றி விட்டுச் செல்லும்.

சிவராத்திரி வந்தது. ஊர் மக்கள் எல்லாம் சிவராத்திரி விரதம் இருக்க முடிவு செய்தனர். இது அந்தக் குரங்குக்கும் தெரிந்தது. அதுவும் விரதம் இருக்க முடிவு செய்தது.

யாருடைய தொல்லையும் இல்லாத தனி இடத்தில் இருந்து அமைதியாக விரதம் இருக்க வேண்டும் என்று எண்ணியது. காடு முழுவதும் சுற்றிப் பார்த்தது. ஓரிடத்தில் கழுகுகள் 'கீழ்ச்சு கீழ்ச்சு' என்று ஒலி எழுப்பின. இன்னோர் இடத்தில் காக்கைகள் கரைந்து கொண்டிருந் தன; மற்றோர் இடத்தில் கிளிகள் 'கீச்சு கீச்சு' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தன. பிறிதோர் இடத்தில் ஒரே நரிகளின் ஊளைச் சத்தம். ஓநாய்களின் குரைப்பு. இப்படிக் காடு எல்லாம் சுற்றிவிட்டுக் கடைசியாகக் கடற்கரைத் தென்பக்க மூலைக்கு வந்து சேர்ந்தது. அங்கு அமைதியாக இருந்தது. கடல் அலை எழுந்து அடங்கி 'ஓம்' எனும் ஒலியை மெல்ல எழுப்பிக் கொண்டிருந்தது. விரதம் இருக்க அதுதான் தக்க இடம் என்று நினைத்தது.

உடனே பத்மாசனம் இட்டு அமர்ந்தது. கைகளைத் தொடை மேல் வைத்துக் கொண்டது; முதுகை நிமிர்த்திக் கூனல் இல்லாமல் சரி செய்து கொண்டது. வாயால், 'ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய' என்று ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கியது.

அப்படித் தியானத்தில் இருக்கும் போது திடீரென்று அந்தக் குரங்கு மனத்தில் ஓர் எண்ணம் வந்தது.

'இப்படி இன்று இரவு முழுவதும் விரதம் இருந்தால் பொழுது விடிந்தவுடன் பசிக்குமே. உடம்பு வேறு ஒருநாள் பட்டினியால் மிகவும் சோர்ந்து போய் விடுமே. அப்போது அங்கும் இங்கும் சுற்றி உணவு கண்டு பிடிப்பது மிகவும் துன்பமாய் இருக்கும். எங்காவது ஏதாவது பழம் இருக்கிறதா என்று பார்த்து வருவோம். விரதம் முடிந்ததும் நேரே சென்று பசி தீர்த்துக் கொள்ளலாம்' என்று எண்ணியது.

உடனே கண்களைத் திறந்தது. ஓம் நமசிவாய மந்திரத்தை மறந்தது, பத்மாசனத்திலிருந்து எழுந்து நாலுகால் பாய்ச்சலில் கடற்கரை எல்லாம் சுற்றியது. பழமரம் ஒன்றும் அங்கு இல்லை. மீனவர்கள் கட்டு மரங்களும் வலைகளுமே எங்கும் காணப்பட்டன.

காட்டுப் பக்கம் போய்ப் பார்த்தது; அங்கிருந்த வாகை, புன்னை மர நெற்றுக்கள்

தின்னத் தகுந்தன அல்ல. தேங்காய்களையும் ஒன்றுகூட விடாமல் சிறுவர்கள் பறித்து விட்டிருந்தனர்.

அலுத்துப் போய் ஊர்ப்பக்கம் போனது. ஒரு குடியானவன் தன் வீட்டுத் தோட்டத்தில் வாழை மரங்கள் பயிர் செய்திருந்தான். ஒரு வாழை மரம் குலை தள்ளியிருந்தது. அதில் சில கொஞ்சம் பழுத்திருந்தன. அதைக் கண்டதும் குரங்குக்கு மிக மகிழ்ச்சி.

"சரி! விரதம் முடிந்ததும் நேரே வந்து தின்று பசி தீர்த்துக் கொள்ளலாம். இனிக் கவலை இல்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

மீண்டும் காட்டைக் கடந்தது. தென்கரை ஓரமாகக் கடற்கரை மூலைக்கு வந்தது. பழைய இடத்தில் பத்மாசனம் இட்டு அமர்ந்தது. கைகளைத் தொடையின் மேல் வைத்துக் கொண்டது. முதுகை நிமிர்த்தி 'ஓம் நமசிவாய' மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கியது. கண்களை மூடித் தியானத்தில் ஈடுபட்டது.


சிறிது நேரம் இப்படித் தியானம் செய்திருக்கும் போது உடனே அதன் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது.

விரதம் முடிந்ததும் இவ்வளவு தூரம் கடற்கரையில் போக வேண்டும். பிறகு காட்டைக் கடக்க வேண்டும். அதன் பிறகு ஊருக்குள்

நுழைய வேண்டும்: அந்தக் குடியானவன் வாழைத் தோட்டத்தைக் கண்டு பிடித்துப் பழங் களைத் தின்ன வேண்டும். சரி இப்படியே இவ்வளவு கஷ்டப்பட்டுச் செல்லலாம். ஆனால் அதற்குள் அந்தக் குடியானவன் வாழைக் குலையை வெட்டி விட்டால் ஏமாந்து போய் விடுவோம். இப்பவே போய் அந்தப் பழுத்த பழங்களைப் பிய்த்துக் கொண்டு வந்து பக்கத் தில் வைத்துக் கொள்வோம். விரதம் முடிந்ததும் உடனே உரித்துத் தின்று பசி ஆறலாம்' என்று கருதியது.

உடனே மறுபடியும் பத்மாசனத்திலிருந்து எழுந்தது. கடற்கரையைத் தாண்டி, காட்டைக் கடந்து ஊருக்குள் நுழைந்து அந்தக் குடி யானவன் தோட்டத்தை அடைந்தது. ஒரு சீப்புப் பழத்தைப் பிய்த்து எடுத்துக் கொண்டது. பழைய கடற்கரை மூலைக்கு வந்தது. பத்மா சனத்தில் அமர்ந்தது. பழத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டது. கைகள் இரண்டையும் தொடையின்மேல் வைக்கப்போனது. திடீரென்று ஓர் எண்ணம். தியானத்தில் இருக்கும்போது ஏதாவது வந்து பழத்தைத் தின்று விடுமோ? இவ்வளவு கஷ்டப்பட்டு ஏமாந்துவிடக் கூடாது! என்று ஒரு கையை வாழைப்பழச் சீப்பின் மேலும் இன்னொரு கையைத் தொடையிலும் வைத்து மந்திரம் ஓதித தியானத்தில் ஈடு பட்டது.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். அதன் மனம் மறுபடியும் இப்படி நினைக்கத் தொடங்கியது.



சரி! இந்தப் பழத்தைப் பிய்த்துக் கொண்டு வந்து விட்டோம். அந்தக் குடியானவன் இப்படிப் பழுக்கிறவரை ஏன் வெட்டாமல் வைத்திருந்தான்? ஒரு சமயம் கசக்குமோ? அல்லது கல்வாழையாய் இருக்குமோ? கடைசியில் விரதம் முடிந்ததும் தின்னமுடியாமல் போய்விடுமோ? அப்புறம் எங்கே போய்த் தேடுவது? எதைத் தின்பது? இப்போதே இதில் ஒரு பழத்தைப் பிய்த்து உரித்து நல்லது தானா என்று தின்று சரி பார்த்துக் கொள்ளலாம்' என்று திட்டமிட்டு

ஒரு பழத்தைப் பிய்த்து எடுத்தது. தோலை உரித்தது; மெல்லத் தின்று பார்த்து 'ஆஹா! ஆஹா!' எவ்வளவு இனிப்பாக உள்ளது! சுவையாக உள்ளது என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

'அய்யய்யோ! வாழைப் பழத்தைத் தின்று விட்டோமே! விரதம் போய்விட்டதே! சரி. மீதிப் பழத்தையும் தின்று விடுவோம் அடுத்த ஆண்டு ஒழுங்காகச் சிவராத்திரி விரதம் இருப்போம்' என்று சொல்லிக் கொண்டே காட்டுக்குள் ஓடிப் போய்விட்டது.

இப்படி சஞ்சல புத்தி உள்ளவர்கள் பக்தர்களாக இருந்தாலும் அந்தப் பக்தி பயன்படாது. நல்லது ஒன்றைச் செய்வதில் மனதில் உறுதி வேண்டும். அதனால்தான் நம் முன்னோர்கள் 'பக்தி வைராக்கியம்' என்று சொல்லி உள்ளனர் என்று ஆசிரியர் கதையை முடித்தார். இது வரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த குழந்தைகளும் 'பக்தி வைராக்கியம்' என்று சொல்லிக் கொண்டே தங்கள் தங்கள் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

# 4. மூன்று பார்வைகள்

அலைகள் வந்து வந்து மோதும் கீழ்க் கடற்கரை ஓரம். மேற்கிலிருந்து வந்து பாயும் காவிரி ஆற்றுப் புகுமுக வாயில். அந்த ஆற்றுப் படுகையில் ஒரு பெரிய நாவல் மரம். மரத்திலிருந்து ஒரு பெரிய நாவல் பழம் 'தொப்' என்று கடற்கரைக்கும் ஆற்றங்கரைக்கும் இடையே விழுந்தது. இதைக் கடற்கரை மணல் பொந்திலிருந்து தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்த செங்கால் நண்டு ஒன்று பார்த்தது. திருகாணி போன்ற தன் கண்களை மேலும் கீழும் உயர்த்தியும் தாழ்த்தியும் அக்கம் பக்கம் நகர்த்தியும் பார்த்துக் கொண்டது. யாரும் இல்லை. மெல்ல அந்த நாவல் பழத்தை நோக்கிப் பக்க வாட்டில் அசைந்து அசைந்து நகர்ந்து வந்தது.

அந்த நாவல் பழம் விழுந்ததை ஆற்றுப் படுகைப் பொந்திலிருந்த கருங்கால் நண்டு ஒன்றும் பார்த்தது. கடற்கரை நண்டு அந்தப் பழத்தை நோக்கி வருவதையும் பார்த்தது. அதுவும் விழுந்து கிடந்த நாவல் பழம் அருகே ஓடி வந்தது. இரண்டும் ஒரே சமயத்தில் தங்கள்

இடுக்கிக் கைகளால் நாவல் பழத்தைப் பிடித்துக் கொண்டன. தனக்குத்தான் தனக்குத்தான் என்று அந்த இரண்டு நண்டுகளும் நாவல் பழத்தை இழுத்துக் கொண்டிருந்தன. இடையில் நாவல் பழம் நசிந்து கொண்டிருந்தது.

பள்ளி விளையாட்டுத் திடல். அதன் வாயில் அருகில் ஒரு பெரிய மாமரம். மிக உயரமானது. கைகளால் கட்டிப்பிடித்து ஏற முடியாத அளவு அகண்டு திரண்ட அடிமரம் உடையது. கிளி கொத்தி, அதிலிருந்து ஒரு மாம்பழம் கீழே விழுந்தது.

அருகில் விளையாடிக் கொண்டிருந்த மாண வர் சிலர் மாம்பழத்தை எடுக்க ஓடிவந்தனர். ஒரு சிறுவன் முன்னே ஓடிவந்து அந்த மாம் பழத்தை எடுத்து விட்டான். அருகில் சென்ற இன்னொருவன், "டேய் சோமு! கீழே விழுந் ததை நான் தான் முதலில் பார்த்தேன். 'டேய் மாம்பழம் விழுதுடா!' என்று உங்களுக்கு எல்லாம் நான்தான் முதலில் காட்டினேன். அதனால் மாம்பழம் எனக்குத்தாண்டா சொந்தம்" என் றான். அப்போது அருகில் நின்றுகொண்டிருந்த வள்ளியப்பனும் இசுமாயிலும் "டேய்! டேய்! நான்கைந்து நாட்களாக இந்தப் பழத்தை மரத்தில் நாங்கள் இரண்டுபேரும் பார்த்து வைத்திருக்கிறோம். 'எப்பொ விழும்' 'எப்பொ விழும்' என்று இரண்டு மூன்று நாட்களாய் இங்கே வந்து பார்த்துவிட்டுப் போயிருக்

கிறோம் இல்லையாடா இசுமாயில்? நீசொல்லு' என வள்ளியப்பன் கேட்டான். 'ஆமாம்' என்பது போல் இசுமாயிலும் தன் தலையை ஆட்டினான். 'சரிடா' தன் கையிலிருந்த மாம்பழத்தை பென்சில் சீவும் கத்தியில் துண்டுகள் செய்து மற்றவர்க்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்டான் சோமு.

இந்த இரண்டு காட்சிகளையும், நிகழ்ச்சி களையும் கவிதை இயற்றும் மாணவன் இன்னொருவன் பார்த்தான். கரிய நாவல்பழம், செங்கால் நண்டு, மஞ்சள் மாம்பழம் இந்த அழகுக் காட்சிகள் அவன் கண்முன் தோன்றின; இப்படி ஒரு கவிதை எழுதினான்.

"நாவல் பழமே! நாவல் பழமே!
கருங்கண் குயிலின் கண்ணினைப்போலக்
கருத்துச் சிவந்த நாவல் பழமே!
நண்டுகள் கையில் நன்றகப் பட்டு
நசிந்து போன நாவல் பழமே!
தேர்வுப் படிப்பு ஒருபுறம் இழுக்க
ஆர்வக் கிரிக்கட் மறுபுறம் இழுக்க
நசியுதே நெஞ்சம்! நசியுதே உன்போல்!

நால்வர் கண்ட மாம்பழம் போல
இருபேர் ஆசையும் இடைஇடை வந்து
ஈர்த்தே நெஞ்சை என்செய்வேன் அம்மா!

என்று கிரிக்கட் விளையாட்டைக் காண வேண்டும் என்ற ஆவலுக்கும் தேர்வுக்குப்


படித்து முன்னணியில் தேற வேண்டும் என்ற ஆர்வத்துக்கும் இடையே தன் மனம் தடுமாறு வதை ஒரு கவிதையாக எழுதினான்.

இப்படித்தான் ஆப்பிள்பழம் ஒன்று பழுத்துக் கீழே விழுந்தது. நம் நாட்டில் அல்ல; வெளி நாட்டில். இளைஞன் ஒருவன் அதனைப் பார்த்தான். அவன் நாவில் அதனைத் தின்ன வேண்டும் என்ற ஆசையில் உமிழ்நீர் ஊற வில்லை. அவன் கால்கள் அந்த ஆப்பிளை வேறு எவரும் எடுப்பதற்கு முன் தான் எடுக்க வேண் டும் என்று விரைந்து ஓடவில்லை; கைகள் ஆர்வத்தோடு அதனைக் கவரவில்லை; பற்கள் கடிக்கவில்லை; நா சுவைக்கவில்லை.

'வழுவழுப்பான ஆப்பிள்; குழந்தைக் கன்னம் போல் செவ்வண்ண ஆப்பிள்; அழகாக உருண்டு திரண்ட ஆப்பிள்; உதடுகளில் பட்டால் குளிர்ச்சி தரும் ஆப்பிள்; வெண்ணையும் பாகும் இயைந் தாற்போல் மென்மையான இனிமையான ஆப்பிள்' — என்று அதன் அழகில் ஈடுபட்டுக் கவிதை அவன் எழுதவில்லை.

கண்முன்னே விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்டான் — ஆசையோடு அல்ல. அந்த நண்டு கள் நாவல் பழத்துக்காக, அந்தச் சிறுவர்கள் மாம்பழத்துக்காக ஆசைப்பட்டது போல இவன் ஆசைப்படவில்லை.

அந்த நாவல் பழத்தை அந்த நண்டுகளும், மாம்பழத்தைச் சிறுவர்களும் உண்ண வேண்டும் என்று ஆசை வைத்ததுபோல இவன் ஆசைப்பட வில்லை. அந்தக் காட்சிகளை—நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கவும் விழையவில்லை.



ஆசையிலும், காட்சி அழகிலும் ஈடுபடாது அந்த இளைஞன் மனம் அறிவில் ஈடுபட்டது.

விழுந்த ஆப்பிளைப் பார்த்தான். அது சாய்த்த மரக்கிளைகளைப் பார்த்தான். கிளைகளுக்கு அப்பால் மேலே, மிக மிக மேலே தோன்றும் வானத்தைப் பார்த்தான். அவன் மனம் சிந்தித்தது — அறிவோடு எண்ணியது.

இந்த ஆப்பிள் கீழ்நோக்கி ஏன் வந்து விழுந்தது? அப்படியே மேலே போகாதது ஏன்? என்று எண்ணமிடலானான். "புவி ஈர்ப்பு ஆற்றல்" என்னும் இயற்பியல் உண்மை ஒன்றைக் கண்டான். அவன்தான் நியூடன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்திருந்த அந்த உண்மை அவனது அறிவுப் பார்வையில் அகப்பட்டது.

அவன் அன்று கண்ட அந்த உண்மையின் அடிப்படையில்தான் இன்று வான்வெளிப் பயணம் கைகூடியது. 'சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்று பாரதி பாடியது. செயல்பெறல் ஆயிற்று. மனிதன் சந்திர மண்டலத்தில் கால் வைத்தான். அதனால்தான் பூமி, செவ்வாய் முதலிய கோள்களைச் சுற்றி விண்வெளிக் கலங்கள் உலாவர முடிகிறது. வானிலையை, கடலில் தோன்றும் காற்று அழுத்தத்தை, புயலை, பெருமழையைத் துல்லிய மாக அறிந்து கொள்ள முடிகிறது. உலககெங்கும் நிகழும் நிகழ்ச்சிகள் பேசும் பேச்சுகள் உடனுக்கு உடனே இருந்த இடத்தில் இருந்த படியே தொலைக்காட்சி வழி காண முடிகிறது;

கேட்க இயல்கிறது. இதற்கெல்லாம் காரணம், அந்த இளைஞன் அன்று, ஆப்பிள் பழம் மரத்திலிருந்து மண்ணை நோக்கிக் கீழே விழுந்த பொழுது ஆசைப்படாமல், அழகு வயப் படாமல் அறிவோடு எண்ணி எண்ணிப் பார்த்து வெளியிட்ட 'புவி ஈர்ப்பு ஆற்றல்' என்னும் அறிவியல் உண்மையே ஆகும்.

மனிதர்கள், ஒரு பொருளை, ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும் பார்வைகள் மூன்று வகையின. ஆசையோடு எல்லாம் தனக்கே என்று தன்னலத்தோடு பார்க்கும் பார்வை ஒன்று. இது ஆசைப் பார்வை; இதுதான் பல மக்களிடம் உள்ளது. ஆனால் இதை விட உயர்ந்தது அழகுப் பார்வை. மக்கள் சிலரிடம் இப்பார்வை அமைந்துள்ளது. ஆனால் இவற்றினும் உயர்ந்தது, மிக மிக உயர்ந்த ஒரு பார்வை உண்டு. அதுதான் அறிவுப் பார்வை; அருட்பார்வை என்றும் சொல்லலாம். தன்னலம் கருதாமல் தன் பல உணர்ச்சிகளுக்கு வயப் படாமல், இயற்கை உண்மையை எண்ணி எண்ணிக் கண்டு பிடிக்கும், பற்றற்ற பார்வை; உலகுக்கு எல்லாம் பயன்தரும் பார்வை— அறிவுப் பார்வை.

ஆலுக்கு ஏன் விழுது? அரசுக்கு ஏன் இல்லை? மாலை மலர்களுக்கு மணம் மிகுதி; காலை மலர்களுக்கு வண்ணம் மிகுதி— ஏன்?

ஆட்டுக்கு வால்நேர் கீழ் நோக்கிவீழ்வதும் மேல் நோக்கி எழுவதும் எதற்காக? இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு கைகள் பெற்றுள்ள உடம்பு; ஏன் ஒரே ஒரு வாய், ஓரே ஓரு நா மட்டும் பெற்றுள்ளது? இப்படி எல்லாம் பார்க்கும் பார்வை அறிவுப்பார்வை— மூன்றாவதான உயர்ந்த பார்வை. அப்பார்வையால் உலகம் உயரும்; உண்மை பல புலப்படும்.

# 5. தாத்தா! அப்பாவுக்குத் தெரியாதே!

தாத்தா! எப்போ ஊரிலிருந்து வந்தீங்க! என்று கேட்டுக் கொண்டே என் முதல் மகன் செந்திலின் மகன் கண்ணபிரான் ஓடோடி வந்து என்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

என் இடுப்பளவு உயரமே இருந்த அவனைக் குனிந்து தழுவிக்கொண்டு முத்தமிட்டு மகிழ்ந்தேன். தோளில் தொங்கிக் கொண்டிருந்த பள்ளிப் பையை வாங்கிக் கீழே வைத்துவிட்டு ஊரிலிருந்து கொண்டு வந்திருந்த என் பையைத் திறந்து துழாவினான். அவனுக்கு நான் வாங்கி வந்திருந்த பேரீச்சம்பழம், மாதுளம் பழம், திராட்சை, எள்ளுருண்டை, வெண்ணெய் ரொட்டி எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான்; மீண்டும் அடுக்கிவைத்திருந்த என் சட்டை, வேட்டிகளின் கீழ் ஏதாவது இருக்கிறதா? என்று தேடினான். அதற்குள் என் மருமகள் கோதை "டேய்! கால் கை கழுவிக்காமே அங்கே என்ன செய்யறே! வாடா

வந்து மொதல்ல கால், கை, முகம் கழுவிக்கோ! தாத்தா இருப்பாங்க; அவுங்க கொண்டுவந்ததை ஒண்ணும் நாங்க தின்னுட மாட்டோம்''... என்று அதட்டல் கேட்டு என்னவோ போல் ஏக்கத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டே புழக்கடைப் பக்கம் போனான். கோதை என்னிடம் வந்து, ''அவனுக்குச் சாக்லைட் எதுவும் கொடுக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கார். அவருக்கு— ஒங்க மகனுக்குத் தெரிந்தால் நீங்க வாங்கிவந்தது எல்லாத்தையும் தூக்கி வெளியே வீசி எறிந்து விடுவார்.'' என்று தயக்கத்தோடு, பயத்தோடு, தடுமாற்றத்தோடு சொன்னார்.

''நான் வாங்கிவரலம்மா! எனக்குத் தெரியாதா? அதான் எல்லாத்தையும் பார்த்துட்டு எடுத்து எடுத்து ஒதுக்கிவைத்துட்டு ஏக்கத்தோடு போயிட்டான்.'' என்று வருத்தத்துடன் சொன்னேன்.

அதற்குள் கண்ணபிரான் முகம் கை கால் கழுவிக்கொண்டு என்னிடம் வந்தான். தொட்டியில் தொங்கிய துண்டு ஒன்றை எடுத்து அவன் முகம், கை, கால் எல்லாம் துடைத்து விட்டேன். மருமகள் எங்கள் இருவருக்கும் காம்ப்ளான் கொண்டு வந்து கொடுத்தாள்; பையை எடுத்துக்கொண்டு காய்கறி வாங்கப் புறப்பட்டாள்.

"கோதை! இரு அம்மா! நான் வாங்கி வருகிறேன்" என்று பையை வாங்கிக் கொண்டு புறப்பட்டேன்.

"தாத்தா! நானும் வர்ரேன்!" என்று தன் பள்ளிச் சீருடைகளைக் கழட்டி வைத்து விட்டு வேறுடை உடுத்திக்கொண்டு அம்மாவைப் பார்த்தபடியே அவனும் என்னுடன் புறப் பட்டான்.

முதல் மாடி எங்கள் குடுத்தனத்தை விட்டுப் படி இறங்கிக் கீழே வந்து சாலையில் இறங்கிச் சந்து திரும்பினோம்.

"தாத்தா!"

"என்ன கண்ணா?"

"சாக்லைட் ஏன் தாத்தா வாங்கி வரலெ?"

ஒனக்கு உடம்புக்கு ஒத்துக்காதுடா! இருமல் வரும்—சளி வரும்—மூச்சுத் திணறும்லெ!

"ஒண்ணே ஒண்ணு தாத்தா! பிளீஸ் தாத்தா!"—குழைந்தான்.

நான் நெகிழ்ந்து போனேன். என்றாலும் மூர்க்கத்தனமான என் மகனின் தோற்றம் ஒரு கணம் கண்ணில் தோன்றி மறைந்தது.

"அப்பா அடிக்கும் கண்ணு! வேறு எதுவேணும்னாலும் வாங்கித் தர்ரேன்!" நான் கெஞ்சினேன்.

"போ தாத்தா! அப்பாவுக்குத் தெரியாது தாத்தா! ஒண்ணே ஒண்ணு—பிளீஸ்!" மீண்டும் என் கையைப் பற்றிக்கொண்டு கெஞ்சினான்.



நானும் வாங்கிக் கொடுத்தேன். கடையிலேயே அவசர அவசரமாக மென்று தின்றான். நான் காய்கறி வாங்கிக் கொண்டேன். இருவரும் வீட்டுக்கு வந்தோம்.

அன்று இரவு வயிற்று வலி என்று கண்ணன் கத்திய அழுகை ஒலி கேட்டது. படுக்கை அறைக்

கதவைத் திறந்து கொண்டு வராந்தாவில் படுத்துக் கொண்டிருந்த என்னிடம் செந்தில் வந்தான்.

'ஏம்பா, இவனுக்குச் சாக்லைட் வாங்கிக் கொடுத்தீங்களா?... திடீர்னு வயித்து வலின்னு கத்துறான்—மூச்சு வேறு திணறுது...' சி.பி.ஐ. பார்வை ஒன்றை என்மேல் படரவிட்டான்.

நான் ஏதும் சொல்லாமல் விழித்தேன்.

கண்டபடி ஏதேதோ சொல்லி நான் வருந்து மாறு வைதான். கண்ணன் வயிற்று வலியோடு தன் அப்பன் என்னைத் திட்டியதைப் பார்த்துப் பயந்துகொண்டிருந்தான். அவனை அடிக்கக் கையை ஓங்கினான்.

உடனே, "ஒன்னும் வாங்கித் தரலேடா'—அவனைத் தொட்டே... இப்பவே ஊருக்குப் போயிடுவேன்னு."

"கண்ணன் என்னோடு படுத்துக்குவான்—அவனெ என்கிட்டே விட்டுட்டுப் போ"—என்று ஒருபுறம் ஒடுங்கி நின்று கொண்டிருந்த அவனை அணைத்தபடியே சமையல் அறைக்குள் போய், கொஞ்சம் ஓமம் எடுத்து வெந்நீரில் கொதிக்க வைத்து ஓம கஷாயம் கொடுத்தேன். குடித்து விட்டு ஒரு முறை சிறுநீர் கழிக்க வெளியே போனான். கொஞ்சம் வலி குறைந்திருக்க வேண்டும். என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு என்னோடு படுத்து உறங்கிவிட்டான்.

அந்தச் சாக்லைட் சம்பவத்தை இன்றும் நினைவில் வைத்துக்கொண்டு இருபதாண்டு களுக்குப் பிறகு அமெரிக்காவில் எம். டெக் படிக் கும் கண்ணன் எழுதிய கடிதம் முன்பு சொன்ன நினைவுகளுக்கு என்னை அழைத்துச் சென்றது.

"அன்புள்ள தாத்தாவுக்கு! அன்று தங்க ளிடம் 'அப்பாவுக்குத் தெரியாது' என்று சொல்லி, சாக்லைட் வாங்கித் தின்று அவதிப் பட்டதை இன்றும் மறக்கவில்லை. அது எனக்கு அப்போதே ஒரு பாடமாக அமைந்து விட்டது. இப்போது இங்கே இந்த நியூயார்க் நகரில் நான் சாக்லைட் தின்றதுபோல், "அரசுக்கு எப்படித் தெரியும்! ஆண்டவனுக்கு எப்படித் தெரியும்" என்று தவறுகள் செய்துவிட்டு உடல் நோயால், மன நோயால் இங்குப் பலர் அவதிப் படுவதைப் பார்க்கிறேன்.

என் நண்பன், ஒங்க நண்பர் சுவாமிநாத ருடைய பேரன். தமிழரசு 'அப்பாவுக்குத் தெரி யாது—ஆண்டவனுக்குத் தெரியாது'—என்று சில கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகி அவதிப் படுகிறான். இங்கே நேற்று மாலை மருத்துவ மனைக்குச் சென்று பார்த்தேன்.

'ஐயோ! கண்ணா!' என்று கையைப் பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டான். "என் கிட்னி கெட்டு விட்டதாம்! ஒன்றுக்குப் போக முடியவில்லை—ஒரே வலி—மயக்க மாத்

திரை தின்றாலும் உறக்கம் வரமாட்டேங்குது—கனவுகள்—கனவுகள்—அப்பாவுக்குத் தெரியாமல், அம்மாவுக்குத் தெரியாமல், ஆண்டவனுக்குத் தெரியாமல் செய்த குற்றங்கள் ஒவ்வொன்றும் கனவில் வருகின்றன—தூக்கமே இல்லை'' என்று அழுதான்.

''கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய்
கச்சி ஏகம்பனே!''

என்று பட்டினத்தார் பாடலை மனனம் செய்து கொண்டிருக்கச் சொல்லிவிட்டு நண்பர்களைக் கண்டு பேசித் தமிழ்ச் சங்கத்தின் வழி அவனுக்கு உடனடி மருத்துவ உதவிக்கு வேண்டிய பணம் சேகரித்துத் தந்தேன். இப்போது ஓரளவு நலமாக உள்ளான்.

தாத்தா! அப்பா—ஆண்டவன்—எல்லாரும் நம்முள்ளே நம்மை உடல் வடிவில், மன உருவில் நம்மை எப்போதும் கண்காணித்து வருகின்றனர். நாம் செய்யும் ஒவ்வொரு பிழையையும், ஒவ்வொரு குற்றத்தையும் நம் உடல், நம் மனம் தவறாமல் கணக்கு வைத்துக் கொண்டு வந்து தண்டிக்க ஆரம்பித்து விடுகிறது. 'அப்பா அன்று இரவு உடனே தண்டித்தார். கோபமாக வருத்தமாக இருந்தாலும், வயிற்று வலி அன்று இரவே போய்விட்டது. ஆனால் ஆண்டவன் மிகப் பொறுத்துப் பொறுத்

துப் பார்த்து—ஆனால், மிகக் கடுமையாக—கொடுமையாகத் தண்டித்து விடுகிறார்.

இப்போதெல்லாம் தமிழரசு அறையில் சான்றோர் படங்கள், திருக்குறள், மணிவாசகர், விவேகாநந்தர் நூல்கள்தான்; பழைய போதை நண்பர்கள் மெல்ல மெல்லப் போய்விட்டார்கள். என் அறைக்குப் பக்கத்திலேயே தானும் அறை எடுத்துக்கொண்டு எங்களோடு மட்டும் பழகி வருகிறான்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அப்பன் கணக்கில்— அந்த ஆண்டவன் கணக்கில் கணிணியில் இடம் பெறும் நினைவுகள் போல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன—தாத்தா! ஒவ்வொரு காரியம் செய்யும்போதும் ஆண்டவன் கண்கள் எனக்குத் தெரிகின்றன—அப்பாவின் மனம் எனக்குத் தெரிகிறது.

உங்கள் கண்ணன்

# 6. அக இருள் நீக்கும் ஆய்ச்சியர் அடிப்பொடி

வீதியில் அழுக்கு சேர்கிறது; தண்ணீர் தெளித்து, கூட்டி பெருக்கிக் கோலமிட்டுத் தூய்மை செய்து அழகு செய்கிறோம்.

வீட்டில் அழுக்கு சேர்கிறது. மண் வீடா யின் மெழுகி அழுக்கு நீக்குகிறோம். சிமெண்ட் தரையாயின் நீரிட்டுத் தேய்த்துக் கழுவி ஒழுங்கு செய்கிறோம்.

உடம்பிலும் வியர்வை தோன்றுகிறது; புழுதி படிந்து அழுக்கு சேர்கிறது. வாசனைப் பொடியிட்டு மணங்கமழும் சோப்பிட்டு அவ்வப் போது குளித்து அழுக்கு நீக்கி அழகு செய்து கொள்கிறோம்.

இவையெல்லாம் வெளியே தோன்றும் அழுக்குகள்; கண்ணுக்குத் தெரியுமாறு புறத்தில் தோன்றும் அழுக்குகள்.

இப்படிப் புறத்தில் அழுக்குகள் சேர்வது போல அகத்திலும், அதாவது நம் மனத்திலும்

அழுக்கு சூழ்கிறது. அந்தப்புற அழுக்குகளைக் கூட்டி, பெருக்கி, நீக்கியது போல, மெழுகிக் கழுவி அகற்றியது போல, தேய்த்துக் குளித்துப் போக்கியது போல, இந்த அழுக்கை - மனத்தினில் சூழும் அழுக்கை - அகற்றுதல் அவ்வளவு எளிமை அன்று: ஏனெனில் மனத்தில் தோன்றும் அழுக்கு மிகவும் நுட்பமானது; கண்ணுக்குப் புலப்படாதது; கையில் அகப்படாதது.

அப்படிக் கண்ணுக்குப் புலப்படாது, கைக்கு அகப்படாது மனத்தைச் சூழும் நுண்மையான அந்த அழுக்கு என்ன? அதுதான் எல்லாம் எனக்கே, எல்லாரும் என் சொற்படியே கேட்க வேண்டும் என்று நினைக்கிற நினைப்பாகிய அழுக்கு.

லாந்தர் விளக்கிலுள்ள கண்ணாடியெல்லாம் கரிய புகை சூழ்ந்து கொண்டு ஒளிப்பிழம்பை மறைத்து விடுகிறதல்லவா! அது போலவே, எல்லாம் நான், எல்லாம் எனக்கே என்ற இந்த அழுக்கு மனத்தை இருளாக்கி, உண்மை தெரியாமல் மறைத்து விடுகிறது.

இந்த மறைப்பு கற்றவர்களிடத்திலும் இருக்கிறது; கல்லாதவர்களிடத்திலும் இருக்கிறது. குழந்தைகளிடத்தும் இருக்கிறது; பெரியவர்களிடத்தும் இருக்கிறது! ஆண்கள் இடத்தும் இருக்கிறது; பெண்களிடத்தும் இருக்கிறது. சிற்சில சமயங்களில் நல்லவர் மனத்திலும் இருக்

கிறது. சான்றோர் மனத்திலும் கூட இந்த 'நான்' என்னும் அழுக்கு பற்றிக் கொள்கிறது.

அப்படித்தான் ஒருமுறை நாரதரை இந்த அழுக்கு பற்றிக் கொண்டது. 'நாராயணா'; 'ஹரே நாராயணா 'நாராயணா'; ஹரே நாராயணா' என்று பாடிக் கொண்டே நாரதர் வான வீதியில் வந்து கொண்டிருந்தார். அவர் கண்ணின் முன்னே துவரையம்பதி தோன்றிற்று.

'இதோ துவாரகையின் கோபுரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. 'கண்ணனைப் பார்த்து வெகு நாட்களாகி விட்டன. பார்த்து வருவோம்' என்று நினைத்துத் துவரையம்பதிக்கு நடக்கலானார்.

இடையிலே அவர் தன் மனத்தில் இப்படி நினைத்துக் கொண்டார். கண்ணனிடத்தில் எனக்குத் தான் எவ்வளவு அன்பு! எவ்வளவு பாசம்! எவ்வளவு பத்தி! என்னைப் போல் அன்பும் பாசமும், பண்பும் பக்தியும் கண்ணனிடம் கொண்டவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்' என்று நினைத்துத் தன்னைத்தானே வியந்து கொண்டார்.

அதற்குள் துவரையம்பதியும் நெருங்கி விட்டது. மாளிகையில் இருந்தபடியே கண்ணபிரான் நாரதரைக் கவனித்தான். அவர் மனத்தில் தன்னைவிட சிறந்தவர் இல்லை.

நான் தான் நிறைந்த அன்புள்ளவர் என்ற அழுக்கு உண்டாகிவிட்டதைக் கண்டு கவலைப் பட்டான்! "நாரதன் நம் அன்பன் அல்லவா? அவன் மனதில் தோன்றிய இந்த அழுக்கை அழிப்பது நம் கடமையல்லவா?" என்று கண்ணபிரான் கருணையோடு எண்ணினார்.

உடனே, வாயிற் காவலனைக் கூப்பிட்டு, "காவலனே! இதோ நாரதர் வந்து கொண்டு இருக்கின்றார். எனக்கு உடம்பு சரியில்லை. அவர் வந்தால், 'உடம்பு சரியில்லை; உள்ளே படுத்திருக்கிறார்' என்று சொல்லி உள்ளே அனுப்பி வை" என்று கூறிப் போர்த்திக் கொண்டு உடலெல்லாம் சுரத்தில் நடுங்குவது போலத் தன் அறையில் படுத்துக் கொண்டார்.

வந்த நாரதரிடம் காவலன், கண்ணன் கூறிய படி கூறி உள்ளே அனுப்பி வைத்தான். நாரதன் வருவதை ஓரக் கண்ணால் பார்த்த கண்ணன் சுரத்தில் வருந்துவது போல 'ஆ' 'ஊ' என்று கத்திக் கொண்டு புரண்டு புரண்டு படுத்தான்.

அதனைப் பார்த்த நாரதர் மிகவும் கலவரத் தோடு ஓடி வந்து "கண்ணா! கண்ணா! உனக்கு உடம்பு என்ன செய்கிறது? ஏன் இப்படி வருந்துகிறாய்?" என்று வருத்தத்தோடு கேட்டார்.

அது கேட்ட கண்ணன், 'அட போப்பா நாரதா! தலை வலியால் காலையிலிருந்து தவிக்கிறேன். ஏன் என்று கேட்பார் எவரும் இந்த மாளிகையில் இல்லை. ஐயோ! என்ன செய்வேன்' என்று கூறித் தன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொண்டு 'ஆ' 'ஊ' என்று கத்தினான்.

உடனே நாரதர், "கண்ணா! கவலைப் படாதே. இதோ நான் வந்து விட்டேன், யார் உதவா விட்டாலும் போகட்டும்; நான் உதவு வேன். என்ன மருந்து வேண்டும்? சொல். நான் கொண்டு வருகிறேன். என்ன செய்ய வேண்டும்? நான் செய்கிறேன். உன் தலை வலியை நானே போக்குகிறேன்" என்று சொன் னான்.

"அய்யோ நாரதா! உன்னால் முடியாதப்பா. வீணாக நீ ஏன் அலைந்து திரிய வேண்டும். என்னவோ என் தலைவிதி. நான் அனுபவிக் கிறேன்!" என்று தன்னைத்தானே கண்ணன் நொந்து கொண்டான்.

'கண்ணா என்னைப் பற்றி என்ன நினைக் கிறாய். என்னாலும் முடியாததா? அது என்ன அப்படிப்பட்ட மருந்து? சொல் எங்கிருந்தாலும் கொண்டு வந்து தருகிறேன். சொல் கண்ணா! சொல்!' என்று நாரதர் வேண்டினார்.

"நாரதா! நான் சொன்னால் கேட்க மாட்டாய். என்னிடம் உள்ள அன்பால் இப்படிப் பேசுகிறாய். உன்னால் அது முடியாது என்றாலும் கேட்க மாட்டாய். சரி. சொல்கிறேன் கேள்!' என்று கூறி நன்றாகத் திட்டமிட்டுக் கொண்டு பின்வருமாறு கண்ணன் கூறினான்.

"நாரதா! இதுதான் மருந்து, நன்றாகக் கேட்டுக் கொள். என்னிடம் உண்மையான அன்புள்ள ஒருவருடைய கால் தூசியைக் கொண்டு வந்து என் தலையின் இரு பொட்டிலும் தடவினால் இந்தத் தலைவலி போய்விடும்" என்று சொல்லி 'அய்யோ' 'அப்பா' என்று பழையபடியே புரண்டு புரண்டு இரு கைகளையும் தலையில் இறுகப் பிடித்துக் கொண்டு வருந்தினான்.

"என்ன கண்ணா? அன்பு உள்ளவர்கள் இந்த மாளிகையிலேயே இருக்கிறார்கள்' என்று சொல்லி நாரதர் ருக்குமணி தேவியிடம் போய், "அம்மா உன் திருவடிகளைக் கொஞ்சம் காட்டம்மா! உன் கால் தூசியைச் சிறிது எடுத்துக் கொள்ள வேண்டும்" என வேண்டினான்.

"ஐயா நாரதரே! என் கால் தூசியைத் தாங்கள் தொடுவது, தொடச் செய்வது எவ்வளவு பாவம்' என்று ருக்குமணி மறுத்தாள். 'அப்படிச் சொல்லாதம்மா, இந்தத் தூசு எனக்கல்லம்மா. கண்ணன் தலைவலியால் தவிக்

கிறான். அன்புள்ள ஒருவருடைய கால் தூசியைக் கொண்டு போய் அவன் தலையில் தடவினால் அந்தத் தலைவலி நீங்கும் என்று சொன்னார். அதற்குத்தானம்மா நான் கேட் டேன்' என்று ஏங்கினார்.

"அடப்பாவி நாரதா! உனக்கு என்ன கெட்ட எண்ணம்? என் கால் தூசியைக் கொண்டு போய் என் நாயகன் தலையில் போடுவதா? என்ன பாவம்! என்மீது உனக்கு எவ்வளவு கெட்ட எண்ணம். நான் தரமாட்டேன். போய்யா புத்தியில்லாதவரே" என்று அனுப்பி விட்டாள்.

அன்புள்ளவராகத் தான் கருதிய ஒவ்வொரு வரிடமும் சென்று திட்டு வாங்கி வாங்கி நாரதர் மிகவும் சோர்ந்து போய் விட்டார். 'அடடா தெரியாத்தனமாக இப்படி மாட்டிக் கொண் டோமே; கால்களும் களைத்து விட்டனவே; காலமும் கடந்து கொண்டு இருக்கின்றதே என்ன செய்வது' என்று புலம்பிக் கொண்டே யமுனை நதியில் ஒரு புன்னை மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தார்.

மாலைப் பொழுது நெருங்கிக் கொண்டு இருந்தது. பசுக் கூட்டங்களெல்லாம் ஊரை நோக்கித் திரும்பிக் கொண்டு இருந்தன. யமுனை நதிக்கரையில் நீர் மொண்டு கொண்டு ஆய்ச்சியர்கள் கூட்டம் கூட்டமாக வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது நீர் மொண்டு மீளுகின்ற ஆயர் சிறுமியருள் ஒருத்தி நாரதரைப் பார்த்து விட்டு 'அடியே! இதோ நாரதரடி, ஓடி வாருங்கள். நம் கண்ணனைப் பற்றிக்கேட்போம்' என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து, சோர்ந்து வாயில் புலம்பியபடி கிடந்த நாரதரைச் சுற்றிக் கொண்டு கண்ணனைப் பற்றி ஒவ்வொரு ஆய்ச்சியும் பலபல கேள்விகள் தொடர்ந்து கேட்டனர். 'ஐயோ ஐயோ ஏனம்மா என்னை இப்படித் தொல்லைப் படுத்துகிறீர்கள்; கண்ணனுக்கு உடம்பு சரியில்லை. மருந்து தேடிக் கொண்டு வந்தேன். உலகமெல்லாம் சுற்றி விட்டேன். எங்கும் கிடைக்கவில்லை. கை, கால்கள் களைத்து விட்டன! மனமும் சோர்ந்து விட்டது. தொல்லை கொடுக்காமல் போங்கம்மா என்று கூறித் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

'ஐயா! நாரதரே! உங்களுக்குக் கோடி புண்ணியம். என்ன மருந்து என்று சொல்லுங்கள்' என்று எல்லோரும் கேட்டுத் தொல்லைப் படுத்தினர்.

நாரதர் "சரி, தொல்லை செய்யாதீர்கள். சொல்லித் தொலைக்கிறேன். உங்களால் முடியாது" என்று கூறி மருந்தைச் சொன்னார். உடனே ஒவ்வொரு ஆய்ச்சியும் தங்கள் பாதங்களைத் தூக்கித் தூசுகளை வழித்தெடுத்துக் கொள்ளும்படி கூறினர்.

நாரதர், "உங்களுக்கு என்ன பைத்தியமா. உங்கள் கால் தூசி கண்ணபிரான் தலையில் பட்டால் பாபமல்லவா? உங்களுக்கு நரகமல்லவா கிடைக்கும்? உங்கள் புத்தி பேதலித்து விட்டதா?' என்று கூறிக் கால் தூசிகளைக் எடுத்துக் கொள்ள மறுத்து விட்டார். 'ஓய் நாரதரே எங்களுக்குப் பாவம் வந்தால் வரட்டும்; நாங்கள் நரகத்தில் கிடந்து துன்பப்பட நேர்ந்தாலும் நேரட்டும். கண்ணன் தலைவலி நீங்கினால் போதும். அதனால் இந்தப் பிறவி மட்டுமல்ல, இனிவரும் பிறப்புகளிலெல்லாம் நரகத்தில் இருக்கத் தயார்' என்று கூறி ஒவ்வொரு ஆய்ச்சியும் தங்கள் காலில் உள்ள தூசுகளைத் தட்டிஅள்ளிக் கொள்ளச்சொன்னார்கள். துண்டை விரித்துப் போட்டு ஆயர் சிறுமியரின் கால் தூசுகளையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு தலையில் வைத்துக் கொண்டு துவரையம்பதிக்கு வந்து சேர்ந்தார் நாரதர்.

புன்னகை செய்தபடியே வாயிலில் நின்று கொண்டு மாயன் நாரதரை வரவேற்றான்.

"கண்ணா! இதோ மூட்டை நிறையக் கால் தூசி கொண்டு வந்திருக்கிறேன். இதற்குள்ளே தலைவலி போய் விட்டதா?" என்று ஏக்கத்தோடு கேட்டார் நாரதர்.

கண்ணன் சிரித்துக் கொண்டே "ஆயர்பாடியில் ஆய்ச்சியர் திருவடியில் நீ தொட்ட போதே

என் தலைவலி போய் விட்டது. ஏனப்பா நாரதா! என்னிடம் அன்புள்ள ஒருவருடைய



கால் தூசிதானே கேட்டேன். உடனே ஊரெல்லாம் உலகமெல்லாம் சுற்றி வந்தாயே. உனக்கு

என் மேல் அன்பில்லையா? உன் கால் தூசு களைப் போட்டிருந்தால் அப்போதே என் தலைவலி போயிருக்குமே!'' என்று சொல்லி, 'கலகல' என்று சிரித்தான்.

அந்தச் சிரிப்பு ஒலியில் இருள் அகன்றது. ''கண்ணா! பிறவிகளெல்லாம் நரகத்துக்குப் போனாலும் என் கண்ணனுடைய தலைவலி நீங்கினால் போதும் என்று எண்ணிய ஆய்ச்சி யருடைய தன்னலமில்லாத தூய அன்புக்கு அருகதையில்லேன். என் ஆணவம் அழிந்து விட்டது'' என்று சொல்லிக் கலங்கிய நாரதரைக் கண்ணன் தழுவிக் கொண்டு தன்மயமாக்கினான்.

# 7. சொர்க்கம்—நரகம்

திருமணத்தில் பலர் கூடி உண்கிறோம். பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார், இரு வீட்டாருக்கும் வேண்டிய உற்றார் உறவினர், நண்பர்கள் இப்படிப் பலர் கூடிக் கலந்து குளிர்ந்து மகிழ்ந்து உண்கிறோம். இப்படியே சாவு வீட்டிலும் கூடி வருந்தித் துன்பத்தைப் பகிர்ந்து கொள்கிறோம்.

திருமணம், குடும்ப நிகழ்ச்சிகளில் சிறந்த இன்ப நிகழ்ச்சிகளுள் ஒன்று. சாவு, துன்ப நிகழ்ச்சிகளில் தலையாயது. இரண்டையும் யாரும் தனியே நடத்துவது இல்லை. கூடி ஆடி மகிழ்வதாக, கூடி அழுது வருந்துவதாக அவற்றை மக்கள் கொண்டாடுகிறார்கள்.

கூடிப் பகிரும் அனுபவத்தில் இன்பம் நிறைகிறது; துன்பமோ குறைகிறது. இது ஒரு வாழ்வியல் தத்துவம்; இறைவன் அருளோடு மானுட இனத்துக்கு அளித்த தலை சிறந்த நன்கொடை; கூடிப் பகிரும் வாழ்வில் இன்பம் குறையின் உலகம் வாழாது. அப்படிச்

சிறிது எண்ணிப் பார்க்கலாம். அப்படி எண்ணிப் பார்க்கும்போது தோன்றும் உண்மை இதுதான். அதாவது, கூட்டு வாழ்வில் இன்பம் குறைவதாகத் தோன்றின் எவரும் எவருடனும் கூடி வாழ மாட்டார்; பகிர்ந்து உண்ணத் தயங்குவர்; தனித்தே உண்பர்; உறங்குவர். மனைவி மக்களுக்குக்கூட எதுவும் கொடுக்க மாட்டார்கள். சமுதாயம் வாழாது; வளராது. கூடும்போது, கூடிக் கலந்து பகிர்ந்து அனுபவிக்கும் பொழுது இன்பம் பெருகுகிறது, நிறைகிறது என்பதால்தான் இன்று மானுடம் சமுதாயமாக வாழ்கிறது. கூடும்போது, கூடிக் கலந்து பகிர்ந்து வருந்தும் போது துன்பம் குறைகிறது, தேய்கிறது என்பதால் தான் மனிதன் ஒன்றுகூடிச் சமுதாயமாக வாழ ஆசைப் படுகிறான்.

பகிர்ந்து வாழும் வாழ்வு கொடை வாழ்வு; கொடுத்து வாழும் வாழ்வு கொடுப்பதால் இன்பம் வாழ்கிறது; வளர்கிறது. அது மட்டு மன்று; மானுட வாழ்வு நிலைப்பதும், நடப்பதும் கொடுக்கும் இயல்பு அவனிடம்— அவளிடம் இருப்பதால்தான். இன்ப வாழ்வைச் சுவர்க்க வாழ்வு என்பர். துன்பம், தொல்லை நிறைந்த வாழ்வு நரக வாழ்க்கைக்குச் சமம்.

பாட்டி ஒருத்தி எப்போதும்போல் மொட்டை மாடியில் சாயங்காலம் பிள்ளைகள் எல்லாம் ஆடி ஓய்ந்து வீட்டிற்கு வரும்போது

தன் பேரப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லத் தொடங்கினாள். பாலனும் வள்ளியும் மற்ற பிள்ளைகளுடன் மாடிக்கு ஓடிவந்து பாட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டனர்.

"என்ன கதை வேண்டும்?" என்றாள் பாட்டி. 'குரங்கு தராசு' கதை கேட்டான் பாலன். 'அது வேண்டா, "வேடன்-புறா' கதை சொல் பாட்டி" என்றான் பாலனின் நண்பன். "வீமன் நாகலோகம் போன கதை சொல் பாட்டி" என்றாள் ஒருத்தி.

"பாட்டி! பாட்டி! இன்றைக்கு எங்க ஆசிரியர் தருமபுத்திரர் சொர்க்கத்துக்குப் போன கதைசொன்னார்; சொர்க்கம் எப்படி இருக்கும் பாட்டி? அது எங்கே இருக்கு? அங்கே நாமெல்லாம் போக முடியுமா?" என்றாள் வள்ளி.

"எங்கம்மா என்னை நரகம் நரகம்னு" திட்டுறாங்க; சொர்க்க நரகக் கதை ஏதாவது சொல்லு பாட்டி என்றாள் வள்ளியின் தோழி.

சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான். மெல்ல இருள் சூழத் துவங்கிற்று. "சொர்க்க நரகக் கதை ஒண்ணு சொல்றேன்'னு பாட்டி கதை சொல்லத் தொடங்கினாள்:

இப்பொழுது பாபநாசம் என்று ஒரு ஊர் இருக்கிறதல்லவா! அதன் அருகே பொதியமலை இருக்கிறது. அந்த மலையில் அந்தக் காலத்தில்

நிறைய முனிவர்கள் தவம் செய்துகொண் டிருந்தாங்க.

"பாட்டி! பாட்டி! முனிவர் என்றால் யாரு பாட்டி?" பாலன் குறுக்கிட்டான்.

"போடா... அன்றைக்கு டி.வி. பார்க்க வில்லே" வசிஷ்டர் அவுங்கல்லாம் முனிவருங்க' நீ கதை சொல்லு பாட்டி" என்றாள் வள்ளி.

பாட்டி கதையைத்தொடர்ந்தாள். "பொதிய மலையிலே தவம் செய்த முனிவர்களில் அரு ளானந்த அடிகள் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு நிறைய சீடர்கள். அவர்களுக்குள் மலையப்பன் ஒருவன். முனிவர், சீடர்களுக்கு மெய்ஞானம் விஞ்ஞானம் எல்லாம் சொல்லிக் கொடுத்து வந்தார். ஒருநாள் சொர்க்கம் நரகம் பற்றிச் சொன்னார். பாவம் செய்தா நரகத்தில் துன்பப்பட வேண்டும்" அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

அப்பொழுது மலையப்பன் எழுந்து, கை கூப்பி வணங்கி, வாய்பொத்தியபடி, "அய்யா! ரொம்ப நாளா கேட்டுத் தெரிஞ்சுக்கணும் என்று நினைத்தேன். இன்றைக்கு நீங்களே சொல் லிட்டிங்க. சொர்க்கம், நரகம் என்றால் எப்படி இருக்கும்? அவை எங்கே இருக்கின்றன? நாம் போக முடியுமா?" என்று கேட்டான்.

"மலையப்பா! நீ கேட்டது எல்லாம் உனக்கு இன்றைக்கு இரவு தெரியும்." என்று முனிவர்

சொல்லிவிட்டு அருவிக்கரை நோக்கித் தியானம் செய்யப் போய் விட்டார்.

அன்று இரவு நல்ல நிலா. மலைப்பாறை ஒன்றில் படுத்தபடியே சொர்க்கம் நரகம் பற்றி நினைத்துக் கொண்டிருந்த மலையப்பன் அப்படியே தூங்கி விட்டான்.

''டேய் மலையா! வா நரகத்தைக் காட்டுகிறேன். சொர்க்கத்தையும் காட்டுகிறேன். நீயே பார்த்துக் கொள்'' என்று ஒரு குரல் கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தான். முனிவர் அவன் முன்னே போய்க் கொண்டிருந்தார். மலையப்பனும் பின் தொடர்ந்தான். இடையிடையே பஞ்சுச் சுருள்போல் அலை அலையாகப் பல உலகங்கள் வந்து கொண்டிருந்தன. முனிவர் மேலும் மேலும் கீழே போய்க் கொண்டிருந்தார். தொடர்ந்து விட்டுவிடாமல் நானும் அவர் பின்னேயே போய்க் கொண்டிருந்தேன். அதற்கு மேல் கீழே போக இடம் இல்லை என்ற நிலை வந்தபோது அவர் அங்கு நின்றார். அருகில் ஒரு கோட்டை தெரிந்தது. அதனை நெருங்கி என்னையும் உடன் அழைத்துக் கொண்டு அவர் சென்றார். நெருங்கிச் செல்லச் செல்ல, 'பசி பசி' 'தாகம் தாகம்' 'அய்யோ அய்யய்யோ...' என்ற கூக்குரல்களும் அழுகையும் காதில் கேட்டன. தாங்க முடியாத கொடிய சக்தி—நாற்றம் வீசியது. மூடியிருந்த கோட்டைக் கதவின் இடுக்கு வழியே மெல்ல என்னைப்

பார்க்கச் சொன்னார். அங்கு இருப்பன நிகழ்வன எல்லாம் மங்கிய ஒளியாயினும் நன்றாகத் தெரிந்தன.

மேசைகள் பல இருந்தன. ஒவ்வொரு மேசையிலும் வகை வகையான சோறுகள், வகைவகையான சிற்றுண்டிகள், வகை வகையான இனிப்புகள், வகைவகையான சுவை நீர்கள் வைக்கப்பட்டிருந்தன. தயிர்ச்சோறு. புளிச்சோறு, தேங்காய்ச் சோறு, காய்கறிச் சோறு, நெய்ச்சோறு இப்படிப் பலவகைச் சோறுகள், இட்டலி, தோசை, வடை, புட்டு, இடியாப்பம், பூரி, சப்பாத்தி, தேன்குழல், இப்படிப் பலவகை சிற்றுண்டிகள். அதிரசம். மைசூர் பாகு, பால்கோவா, லட்டு இப்படிப் பல இனிப்புக்கள். பால், பழச்சாறு, கரும்புச்சாறு, பாதாம் கீர், தேன் இப்படிப் புல சுவை நீர்கள். இவ்வளவு இருந்தும் எல்லோரும் ‘பசி பசி’ என்று கத்திக் கொண்டும் ‘தாகம் தாகம்’ என்று அழுது கொண்டும் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டும் இருந்தனர்.

“ஏன்?” என்று எனக்குத் தெரியவில்லை. வியப்பாக இருந்தது. எடுத்துத் தின்ன வேண்டியது தானே! எடுத்துக் குடிக்க வேண்டியது தானே!” என்று முணுமுணுத்துக் கொண்டே முனிவரை ஏறிட்டுப் பார்த்தேன். மௌனமாக அவர்கள் கைகளை உற்று நோக்குமாறு சுட்டி

னார் முனிவர். அப்போதுதான் அந்த உண்மை எனக்குப் புலப்பட்டது.

அவர்கள் கைகள் எல்லாம் நீட்டுவாதத்தால் மடக்கமுடியாமல் நோயுற்றிருந்தன. நீட்டிய கைகள் நீட்டியபடியே இருந்தன. கைகளால் தோசையை, இட்டலியை, வடையை எடுக்க முடிந்தது. ஆனால் கையை மடக்கித் தந்தம் வாயருகே வைக்க முடியவில்லை. அதனால் கோபங்கொண்டு தோசையை, இட்டலியை, வடையைக் கீழே போட்டு மிதித்தனர்; வாய் விட்டு அழுதனர். அப்படியே பால் குவளையை, பழச்சாற்றுத் தம்ளரை, தேன் கிண்ணத்தை அவர்களால் எடுக்க முடிந்தது. ஆனால் குடிக்க முடியவில்லை. கீழே கொட்டிவிட்டுக் கூக் குரலிட்டுத் திட்டினர். கீழெல்லாம் சகதியாகிப் போய், கொசு, ஈ, மொய்க்கலாயின. நிற்கவும் முடியாமல், அமரவும் முடியாமல், படுக்கவும் முடியாமல் பசியாலும் தாகத்தாலும் அவர்கள் பரிதவித்தனர்.


நரகம் பார்த்தது போதுமா? வா சொர்க்கத்தை காட்டுகிறேன்!'' என்று முனிவர் மேல் நோக்கிப் போனார். நானும் தொடர்ந் தேன். மேலே மேலே முனிவர் போய்க் கொண்டேயிருந்தார். நானும் விடாமல் தொடர்ந்தேன். யாழோசை மெல்ல வந்து கொண்டிருந்தது. இனிய மணம் காற்றில் பரவி

வந்து எங்களை வரவேற்றது. முனிவர் நின்றார். அங்கே ஒரு கோட்டை தெரிந்தது. அதன் கதவு திறந்தே இருந்தது. அருகில் சென்றேன். "உள்ளே போகாதே! வெளியில் நின்றபடியே நிகழ்வனவற்றைப் பார்! என்று முனிவர் சைகையால் எச்சரித்தார். நானும் வெளியில் நின்றபடியே திறந்து கதவின் வழியே உள்ளே நிகழ்வனவற்றைச் சற்று நோக்கினேன்.

நரக மக்களின் வாதநோயுற்ற கைகளை நினைத்துக் கொண்டு இந்தச் சொர்க்கத்தில் வாழ்கின்ற மக்களின் கைகளையும் கவனித்துப் பார்த்தேன். 'அய்யோ! அய்யய்யோ!' இவர்கள் கைகளும் நீட்டு வாதத்தால் நோயுற்றிருந்தன. ஆனால் எல்லாரும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருவர் கூட பசி, தாகம் எனக் கூறவில்லை. எனக்கு வியப்பாக இருந்தது. முனிவரைப் பார்த்தேன். சற்றுநேரம் பொறுமையாக இருக்குமாறு பணித்தார். சிறிது நேரத்தில் எல்லோரும் சாப்பிடத் துவங்கினர். ஒவ்வொருவரும் தோசை, இட்டலி எனத் தங்களுக்குப் பிடித்த ஒவ்வொரு உணவுப் பொருளை மகிழ்ச்சியோடு எடுத்தனர். எனக்கு மிகத் துயரமாக இருந்தது. 'அய்யோ! இவர்கள் கைகளும் நீட்டுவாதம் உள்ளனவாயிற்றே! எப்படி உண்பர்? என்று என் மனம் ஏங்கியது.

என்ன ஆச்சரியம்! என் கண்களால் நம்பவே முடியவில்லை. ஒரு பெரிய அற்புதம் நிகழ்ந்தது

கைகளின் நோய் ஒன்றும் நீங்கிடவில்லை. நீட்டிய கைகள் நீட்டியபடிதான் இருந்தன. ஆனால் அந்த நீட்டிய கைகளில் இருந்த உணவைத் தம் வாய்க்குக் கொண்டுவர முயன்று வருந்தாமல் மற்றவர் வாயில் வைத்து ஊட்டி மகிழ்ந்தனர். சுவை நீரைப் பிறர்வாயில் ஊட்டி



அவர் பருகி மகிழ்வதைப் பார்த்து மகிழ்ந்தனர். இப்படியே தத்தம் கையிலுள்ளதை இன்னொருவருக்கு ஊட்டி அனைவரும் உண்டு. அனைவரும் பருகி அனைவரும் மகிழ்ந்தனர்.

நான் முனிவரைப் பார்த்தேன்; அவர் புன்னகைத்தார். தாமரை மலர் மலர்ந்து

மணங்கமழ்வதுபோல் இருந்தது; மெல்லிய கதிரொளி தோன்றி எங்கும் பரவிப் பரவசம் ஊட்டியது; ,ஓம்! ஓம்! ஓம்! மனிதா கொடு-கொடுப்பதே இன்பம்-கொடுப்பவர் வாழுமிடமே சொர்க்கம்...ஓம்! ஓம்! ஓம்...! என்ற ஒலி கேட்டது.

சுள்ளென்று உடம்பில் சூடு பரவுவதை உணர்ந்தேன். கண் விழித்தேன். மலைப் பாறையில் படுத்திருந்தபடியே எழும் செங் கதிரவனையும், வீழ்கின்ற வெள்ளருவியையும் கண்டேன். 'கொடுப்பதில், பகிர்வதில் இன்பம் உள்ளது. அது வேசுவர்க்கப் பாதை; தடுப்பதில் தனக்கு மட்டுமே என மறைப்பதில் துன்பம் உள்ளது. அது நரகப் பாதை என்று என் நெஞ்சில் நினைவு ஒன்று எழுந்தது.'

என்று பாட்டி கதையை முடித்தாள். வள்ளி இதுவரை தான் மறைத்து வைத்திருந்த முறுக்கை அனைவருடனும் பகிர்ந்து கொண் டாள். பாலனும் தான் யாருக்கும் தெரியாமல் சட்டைப் பைக்குள் சுருட்டி வைத்திருந்த பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த கற் கண்டை உடைத்து எல்லோருக்கும் கொடுத் தான். பாட்டியும் ஒரு துண்டு தின்று விட்டு 'சொர்க்கம் போலே இனிக்கிறதே!' என்றாள்.

ஆம். கொடுக்கும்போது, பகிர்ந்து கொள் ளும்போது இன்பம், சொர்க்கம் நம்மிடமே,

நம்மைச் சுற்றியே திகழ்கிறது. எல்லாம் எனக்கே, வேறு எவருக்கும் எதுவும் தரமாட்டேன் என்று மறுக்கும்போது, மறைத்து வாழும்போது நம்மை அறியாமல் நாம் துன்பத்திற்கு உள்ளாகிறோம் நரகத்தை நோக்கி நடைபோடுகிறோம்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.''

# 8. முருங்கை மரம்

தம்பி! தம்பி!......யாரோ கூப்பிடும் குரல் கேட்கிறது.

யாரது.........

நான்தான் முருங்கை மரம்.

முருங்கை மரமா!...என் நினைவுகள் என்னை எங்கெங்கேயோ இழுத்துக் கொண்டு போகின்றன.

கிராமத்திலிருந்து எங்கள் தாத்தா ஒரு முருங்கைப் போத்துக் கொண்டு வந்தார். அப்போது நாங்கள் பட்டணத்தில் தெற்குத் தெருவில் குடியிருந்தோம். தோட்டத்தில் கிழக்கு மூலையில் ஆழக் குழி தோண்டி அதனை நட்டார். சுற்றிலும் மண் போட்டு நன்றாகக் காலாலும் கையாலும் அமுக்கி விட்டுப் பாத்தி கட்டித் தண்ணீர் ஊற்றினார். வெட்டுப்பட்டிருந்த மேல் முனையில் எங்கள் மயிலைப் பசு போட்ட சாணியை எடுத்து அப்பி வெட்டு முகம் தெரியாமல் மூடினார். நான் பக்கத்திலேயே இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

'என்னடா பாக்குறே, நம்ம ஊரு முருங்கை மரம், நம்ப தோட்டத்திலே பெரிசா காய்க் குழுலே அந்த மரம்.'

'ஏன் தாத்தா! அப்படின்னா.......அந்த மரத்தை இங்கே எடுத்துக்கிட்டு வந்துட்டியா? இனிமே அந்த மரம் காய்க்காதா?'

'அந்த மரம் அங்கேயும் காய்க்கும்—இது அதனுடைய கெளை. ஒரு கெளை இங்கே நட்டு வச்சா இங்கேயும் காய்க்கும். ஒனக்குத் தெரியுமா? என் தாத்தா கொழும்புச் சீமையி லிருந்து கொண்டாந்து கிராமத்து, நம்ப வீட்டிலே வச்ச மரம் இது. நம்ம ஊர்லெ இருக்கிற மரம் எல்லாம் அதன் கெளையிலிருந்து கௌச்சி, கௌச்சி வளர்ந்தவைதான்'

'அப்படியா! இது எப்போ காய்க்கும்?'

'டேய்! இது ஆடி மாசம், கணக்குப்பாரு. ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி ஆம் வைகாசி மாசத்திலே காய்ச்சிடும்.

'அப்படின்னா... எப்ப மொளைக்கும் தாத்தா?

'இன்னும் ஏழெட்டு நாளுக்குள்ளே துளிர் விடுண்டா. நீயே பாரேன்...! என்று சொல்லி அவர் ஊருக்குப் போய் விட்டார்.

நான் நாள் தோறும் பொழுது விடிந்தவுடன் ஓடிப்போய் முருங்கைப் போத்தைப் பார்ப்பேன். நான்கைந்து நாட்கள் ஒன்றும் தெரியவில்லை. ஐந்தாவது நாள் அதன் கணு ஒன்றில் வெளிர் பச்சைத் துளிர் ஒன்று மெல்ல எட்டிப் பார்த்தது. அந்தத் துளிரைத் சுற்றித்தொட்டுப்பார்த்தேன். முருங்கைப் போத்தைத் தடவித் தடவிப் பார்த்தேன். எனக்கு வேடிக்கையாகவும் வினோதமாகவும் இருந்தது. இப்படியே ஒவ்வொரு பக்கத்தில் ஒரு புதுத்தளிர் ஒன்று பட்டையின் உள்ளிருந்து மெல்லத் தலை காட்டும். எங்கள் மயிலைப் பசு, கன்று போட்டபோது பசு வயிற்றிலிருந்து கன்றுக் குட்டி தலைகாட்டியது போல அந்தத்துளிரும் பட்டையிலிருந்து வெளியே வரும். பழைய துளிர்கள் தளிர்களாக நீண்டு, காம்புகளாகப் பெருகிக் கிளைகளாக வளரத் தொடங்கிவிட்டன. ஆனால் நாள் தோறும் அந்த முருங்கை மரம் ஏதோ எனக்கொரு புது விதமாகத் தோன்றியது.

சில நாட்கள் முருங்கை மரத்தைப் பார்க்க முடியாமல் போய் விட்டது. எங்கள் ஊரிலிருந்து 'தாத்தாவிற்குச் சுகம் இல்லை. உடனே வரச் சொன்னாங்கன்னு' ஆள் வந்தான். உடனே அம்மா 'அப்பா! அப்பா'ன்னு அழத் தொடங்கினாங்க. அப்பா கண்ணிலும் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. நான் கவலையோடு ரெண்டு பேர் மூஞ்சையும் பார்த்தேன். ஏன்

அழறாங்கன்னு எனக்குத் தெரியலெ. எனக்குக் கூட நாலைந்து நாட்களுக்கு முன்னே ஒடம்பு சுகம் இல்லை. டாக்டர் மருந்து கொடுத்தார். அப்பாவும் அழலை; எல்லோரும் கிராமத்துக்குப் போனோம். அங்கே தாத்தா பேசாம படுத்துக் கெடந்தார். 'முருங்கைமரம் கௌ, கௌயா வளர்ந்திடுச்சி; தாத்தா'ன்னு சொல்ல, கிட்ட போனேன். ஆனா தாத்தா கண் விழிக்கலெ; பேசலெ... அப்புறம் தாத்தவை எங்கேயோ தூக் கிட்டுப் போனாங்க. மண்ணுக்குள்ளே போட்டுப் புதைச்சிட்டாங்க. தாத்தா மொளச்சி வரு வார்னு நினைச்சேன். அங்கே போய்ப் பார்க் கணும்னு ஆசை. ஆனா அந்த இடம் ஊர் லேருந்து ரொம்ப தூரம். என்னை யாரும் அழைச்சிக்கிட்டுப் போகலே. பட்டணத்துக்கு வரும்போது வண்டியிலிருந்தபடியே அந்தப் பக்கத்தை எட்டி எட்டிப் பார்த்தேன். ஒன்றும் மொளச்சமாதிரி தெரியலெ. இன்னும் ஏழெட்டு நாள்ளே தாத்தா மொளச்சிடுவார்னு நெனச்சிக் கிட்டே ஊருக்கு வந்துட்டேன்.

வந்து பார்த்தா முருங்கை மரம் வெள்ளை வெள்ளையாக அரும்பு விட்டிருந்தது. சில நாட்களில் பூத்துக் குலுங்கியது. பச்சைப் பாம்புக் குட்டிகள் போல, நீட்டி விட்ட இரும்புக்கம்பிகள் போலப் பிஞ்சுகள் தொங்க ஆரம்பித்தன. அப் போதுதான் அந்தப் புயல் காற்று வந்தது. எங்கள் வீட்டு முருங்கை மரம் அடியோடு

வேரோடு பெயர்ந்து விழுந்து விட்டது. அப்பா அப்படியே வெட்டி வேலைக்காரிக்குக் கொடுத்து விட்டார். எனக்கு ஒரே கவலையாகப் போயிடுச்சி. தாத்தா நெனப்பு வந்தது. சின்ன போத்தா வைச்ச நெனப்பு வந்தது. தாத்தாவை மண்ணுக்குள்ளே போட்ட நெனப்பு வந்தது. முருங்கை மரம் விழுந்த நெனப்பு வந்தது; அழுகை அழுகையாய் வந்தது. அழுது கொண்டே தூங்கிப் போயிட்டேன்.

"தம்பி!...தம்பி! என்னப்பா! நான் கூப்பிட்டு எவ்வளவு நேரமா நிக்கிறேன்!" என்ற முருங்கை மரத்தின் குரல் மீண்டும் கேட்டது.

'ஓ! முருங்கை மரமா. வா!...வா! ஒன்னதான் அப்பா தூக்கி எறிஞ்சிட்டாங்களே. தாத்தாவை மண்ணிலே போட்டுட்டாங்க. ஒன்னெயும் எறிஞ் சிட்டாங்க. தாத்தாவையும் இனிமே பாக்க முடியாதாம். தாத்தா வரமாட்டாங்களாம். நீயும் வர மாட்டியா? ஒன்னெயும் இனிமே பார்க்க முடியாது!'

'அடே தம்பி! ஏன் பார்க்க முடியாது? ஒங்க தாத்தாவோட தாத்தா கொழும்பிலேருந்து என்னெகொண்டாந்தாங்க; ஊர்த் தோட் டத்தில் வச்சாங்க; அப்புறம் ஊரெல்லாம் போத்துப் போத்தா வெட்டிக்கிட்டுப் போயி வச்சாங்க. இங்கேயும் ஒரு போத்துக் கொண்

டாந்தாங்க. இப்போ மரமா வளர்ந்துட்டேன்; வேரோடு விழுந்திட்டேன்; வேலைக்காரி எடுத்துக் கிட்டுப்போயி, அவ தோட்டத்திலே, அவ வேலெ செய்யிறவங்க தோட்டத்திலே யெல் லாம் நட்டுட்டா. மேல தெருவுக்கு அப்பா குடிபோகப் போறாங்களெ, அங்கெ நடுவதற்கும் ஒரு போத்து எடுத்து வச்சிருக்கா. இங்கே கூட வேரிலிருந்து நான் மொளெப்பேன். கவலைப் படாதேடா பையா! நான் வாழ்ந்து கொண்டே இருப்பேன். நான் அழியவே மாட்டேன். சின்னதா இருக்கிறது பெரியதா வளருகிறது-துளிர்ப்பது, கிளைப்பது, முறிவது எல்லாம் என்னை ஒன்றும் செய்யாதுடா! நான் எப்போதும் இருப்பேண்டா! கொழும்பிலே இருந்தேன்; இப்ப இங்கேயும் இருக்கேன். ஊர்லே இருக்கேன். நம்ப வீட்டிலே இருந்தேன்; இப்பவும் இங்கே இருக்கேன். இன்னும் பாரு! நீ பெரியவன் ஆனா அப்பவும் இருப்பேன். கவலைப்படாதேடா!' என்று முருங்கை மரம் சொன்னது.

"அப்படின்னா எங்க தாத்தாவை மண்ணுக் குள்ளே போட்டுட்டாங்களே அவரு மொளப் பாரா?'

'ஓ அவறா! மொளைச்சிருக்காரே; ஓங்க தாத்தாவோட தாத்தா கொழும்புலே இருந் தார்லே அவருதான் ஓங்க தாத்தாவா மொளைச்

சாரு. இப்ப நீயா மொளெச்சிருக்காரு; இன்னும் மொளெப்பாரு. ஒன்னெ பாத்து அம்மா சொன்



னாங்கலே. 'எங்க அப்பா தான் இவன்னு' ஒங்க அம்மாவோட அப்பா தானே தாத்தா. அவரு ஒனக்குள்ளே மொளச்சிருக்காரு. இனியும் மொளச்சிக்கிட்டே இருப்பாரு; தாத்தாவோட தாத்தாவோட தாத்தா எங்கெங்கோ மொளச்சி ருப்பாரு; மொளச்சிக்கிட்டே இருப்பாரு'

'டேய் கண்ணு! பொழுது விடிஞ்சுடிச்சுடா. எழுந்திரு குளிச்சிட்டுப் பள்ளிக் கூடம் போக னும்லே.' அம்மாவின் குரல் கேட்டு விழித்தேன்.

முருங்கை மரம் காணவில்லை. ஓடிப் போய்த் தோட்டத்தைப் பார்த்தேன். முறிந்துபோன முருங்கை மரத்தின் வேர் துளிர்த்திருந்தது. வீட்டிற்குள் ஓடி வந்து கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேன். தாத்தா என்னைப் பார்ப்பது போலவே என் கண்கள் என்னைப் பார்த்தன.

இன்னும் சில ஆண்டுகளில் பிறவியின் சங்கிலித் தொடர் அவனுக்குத் தெரிய ஆரம்பித்து விடும்.

# 9. முள்ளும் மலரும்

"அய்யோ தாத்தா" என்ற என் பேத்தியின் குரல், தோட்டத்தைச் சுற்றியபடியே வேப்பங் குச்சியால் பல் துலக்கிக்கொண்டிருந்த என் செவியில் விழுந்தது. "என்னம்மா?" என்று பரபரப்புடன் விரைந்து சென்றேன். தன் ஆள் காட்டி விரலைக் காட்டியபடி கண்ணீர் வழிய அழுதுகொண்டே என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"என்னம்மா! என்ன? விரலில் இரத்தம் வழிகிறதே! என்று பதட்டத்தோடு அணுகி அவள் விரலில் கசிந்துகொண்டிருந்த குருதியை மெல்ல வழித்துவிட்டுப் பார்த்தேன். ஊசி குத்தியது போன்ற சிறு காயம் இருந்தது. 'எப்படி இந்தக் காயம் வந்தது?" என்பதுபோல் அவளைப் பார்த்தேன்.

"புது ரோசாப்பூ தாத்தா, அழகா இருத் திச்சி, பறிச்சேன்; குத்திப்புடுச்சி; ஒரே வலியா இருக்கு. என்று தேம்பினாள்.

"அழாதே கண்ணு; இதோ உடனே வலி போயிடும்; சீக்கிரம் ஆறிடும்.' என்று ஒரு துளி

சுண்ணாம்பைத் தடவி அவளைப் பாட்டியிடம் அனுப்பிவிட்டுப் பழையபடி தோட்டத்தைச் சுற்றலானேன்.



பொந்திலிருந்து பச்சைப் பாம்பு தலை நீட்டுவதுபோல அறுத்துவிட்ட வாழைக்கன்று கள் குருத்துவிட்டிருந்தன. பளபளவென்று இளம் பச்சை வண்ணத்தில் அழகாக இருந்தன. வழவழவென்று மென்மையாக இருந்தன. தொட்டுப் பார்த்தேன். ஓரிரு குருத்துக் களிடையே சில கடிக்கப் பெற்ற கருநிற விளிம் போடு இருந்தன. பால் கறக்க வந்த கோனான் ஏமாந்த நேரத்தில் கன்றுக்குட்டி தின்றுவிட்

டிருக்கும். கடித்துத் தின்றிருந்த அந்த வாழைக் குருத்துக்களைப் பார்க்கும்போது வருத்தமாக இருந்தது,

பாவம் செய்யத் தெரியாத ஜென்மம்; துன்பத்தை எல்லாம் பொறுத்துக் கொண்டு துணை செய்யும் பிறவி என்று வாழையை நினைத்து என் மனம் முணுமுணுத்தது. 'முள்ளில் தான் பட்டாலும் தன் மேல் முள் பட்டாலும் வாழைக்குத்தான் துன்பம். முள்ளுக்கு ஒன்றும் துன்பம் இல்லையடா' என்று என் பாட்டி அடிக்கடி சொல்லி அங்கலாய்த்துக் கொண்டது நினைவிற்கு வந்தது.

தண்டை, இலையை, காயை, கனியை எல்லாவற்றையும், ஏன் தன்னையே முழுமையாக இந்த உலகுக்குத் தந்துவிடுகின்ற வாழை, எந்த உயிருக்கும் எப்படிப்பட்ட கெடுதலும் செய்ய இயலாத வாழை சின்ன கன்றுக்குட்டியிடமிருந்துகூடத் தன்னைக் காத்துக்கொள்ள இயலாத ஒரு பிறவியாய் அமைந்துள்ளதே என்று எண்ணி ஏங்கினேன்.

அதனை அடுத்து அரும்பெடுத்திருந்த முல்லைக்கொடி ஒன்று பந்தலில் படர்ந்திருந்தது; அதன் பக்கத்தில் வேலி ஓரமாகக் கப்பும் கிளையுமாக வளர்ந்திருந்த சுண்டைச் செடிகளில் நிறைந்திருந்த பூவுகளுக்கும் பிஞ்சுகளுக்கும் இடையில் கூரிய முட்கள் நீட்டிக் கொண்டிருந்தன. கன்றுக்குட்டி அதன்

பக்கம் போகவேயில்லை. அதனையொட்டி முள்ளிச் செடிகள் வேலிபோல் புதராய் மண்டியிருந்தன.

கேடொன்றும்றியாத, கேடெதுவும் செய்ய இயலாத வாழை காலை வெய்யிலில், இளங் காற்றில் என் கண் முன் அசைந்துகொண்டிருந்தது. மீண்டும் கன்று தின்று குறையாக இருந்த அந்தக் குருத்துக்கள் என் கண்ணில் பட்டன.

அடுத்திருந்த முல்லைக் கொடியைப் பார்த்தேன், அதுவும் கேடறியாததே. மணங்கமழும் மலர்களை வழங்கி மகிழ்வித்தது எளிய வெள்ளாடை பூண்டு காந்தியடிகளை நினைவூட்டியது. ஆனால் அதனைக் கன்றுக்குட்டி கடித்துத் தின்னவில்லை. ஏனெனில் அதன் வாய்க்கு எட்டாத உயரத்தில் அது படர்ந்து தன்னைக் காத்துக்கொண்டதால்.

அவற்றுக்கருகே இருந்த சுண்டைச் செடியைப் பார்த்தேன். சற்றுத் தொலைவிலிருந்த ரோசாச் செடியை நோக்கினேன். அவை தம்மைக் காத்துக்கொண்டு காயும் மலரும் தரும் ஆற்றல் பெற்றிருப்பதை நினைத்தேன்.

இவற்றுக்கப்பால் தோட்டத்தைச் சுற்றிப் புதராய் மண்டியிருந்த முள்ளிச் செடிகளைப் பார்த்தேன். அவற்றின் மலர்கள் மணப்பதுமில்லை; காய்கள் பயன் நல்குவதுமில்லை.

ஆனால் கழுகு மூக்கு போல் வளைந்த, கூரிய அவற்றின் முட்களோ அறியாமல் நெருங்குபவர்களின் சதையைக் குத்திக் கிழித்துவிட வல்லன என்பது என் அனுபவம்.

தோட்டத்தைச் சுற்றி ஆயிற்று. பல்லும் துலக்கியாயிற்று. அப்போது மாணவர் ஒருவர், "ஐயா!" என்றழைத்தபடி வந்தார்.

வாய் கொப்பளித்து, 'என்னப்பா! என்ன இவ்வளவு காலையில்?' என்று அவரைப் பார்த்தேன்.

நின்றபடியே கண் கலங்கினார். "ஆண்டு முழுவதும் திரட்டி வைத்திருந்த என் தேர்வுக் குறிப்புகள் அய்யா. நேற்றுக் காலையில் சொன்னேனே என் அறைத் தோழனாகத் தானிருக்கும். இன்று காலையில் ஒன்றுகூடக் காணவில்லை அய்யா. தேர்வு நெருங்கிவிட்டது. என்ன செய்வேன்" என்று திகைத்தார்.

வாழையை நினைத்துக் கொண்டேன். எந்தக் கேடும் செய்யத்தெரியாதவன். வந்தவர்க்கெல்லாம் சொல்லித்தருபவன், அந்த மாணவன். ஆனால் அவன் முதன்மை பெறக்கூடாது என்று அவன் தோழனே இப்படித் தவறான வழியில் முயல்வதை நினைந்து வருந்தினேன். "கவலைப் படாதே! வகுப்பு நடத்துவதற்குப் பல ஆண்டுகளாகத் தயாரித்துவைத்துள்ள பாடக் குறிப்புகள் உள்ளன. மாலையில் வா. அவற்றைப் பார்த்து உனக்குத் தேவையானவற்றை எழுதிக்

கொள்'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தேன்.

வாழையும் முல்லையும் ரோசாவும் முள்ளியும் என் நினைவில் சுழன்று கொண்டிருந்தன.

சிலர் வாழ்விக்க மட்டும் தெரிந்தவர்கள்; வாழத் தெரியாதவர்கள் வாழையைப்போல. சிலர் வாழவும் வாழ்விக்கவும் அறிந்தவர்கள். ரோசாசுண்டை போன்றவர்களோ தம் வாழ்வில், வளர்ச்சியில் பிறர் குறுக்கிடாதவாறு விழிப்பாகத் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் திறமை உள்ளவர்கள். இம்மனிதர்களை வாழையைப் போன்றோ, முல்லையைப் போன்றோ ரோசாவைப் போன்றோ முள்ளியைப் போன்றோ அவ்வளவு எளிதாக இனங் கண்டுகொள்ள இயல்வதில்லை; தோற்றத்தால் மணத்தால், நிறத்தால் இம்மரஞ் செடி கொடிகள் தங்களைத் தாங்களே இனம் காட்டிக் கொள்கின்றன. ஆனால், மனிதர்களோ அவ்வாறு தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதில்லை; பிறர் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு தருவதில்லை

வாழையும் ரோசாவும் முல்லையும் முள்ளியும் சேர்ந்து வளர்வதே தோட்டமாக அமைகிறது. அப்படியே நல்லோர்களும் வல்லோர்களும் பொல்லார்களும் கூடி இயங்குவதே இவ்வுலகம்.

ரோசாவும் சுண்டையும் வேலியின்றிகூட வாழ்ந்துவிடும். ஆனால் வாழைக்குக் கட்டாயம்

வேலி வேண்டும். முள்ளிக்கு அதுவே வேலி. அதற்கு இன்னொரு வேலிதேவையில்லை. ஆனால் வாழையைக் காக்க முள் வேலி தேவைப் படுகிறது; முள்ளிப்புதர் வேண்டியுள்ளது. வீட்டைக்காக்க, கூரிய பற்களை உடைய நாய் தேவைப் படுவதுபோல, நாட்டைக் காக்க, துப்பாக்கி ஏந்திய கொடிய படையாளன் வேண்டியது போல வாழையைக் காக்க முள்ளி யும் வேண்டியுள்ளது.


தோட்டக்காரன் புத்திசாலியே. என் பேத்தி தன் விரலைக் கிழித்துக்கொண்டதற்காக ரோசா வைக் குறை சொல்ல முடியுமா? முள்ளியில் என் காலைக் கிழித்துக்கொண்டதற்காக அதனைப் பழி கூற இயலுமா? அப்படித்தான் இந்த உலகமும். இங்கு எல்லோருக்கும் இடமுண்டு இறைவன் படைத்த எல்லா உயிர்க்கும் இட முண்டு. ஆனால் யார் யாரை, எது எதனை, எது எதற்குப் படைத்துள்ளான்? என்று காரண காரியத்தோடு பயன்படுத்தும் மெய்யறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் "விவேக ஞானம்" என்பர். இந்த ஞானமே முள்ளும் மலரும், தீங்கும் நலனும், வெம்மையும் தண்மையும் முதலிய இருமைகள் இறைவனின் நோக்கத்திற்குத் துணை செய்யப் படைக்கப் பெற்றன என்பதை உணர்த்தும். இத்தகு இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டலே மனித வாழ்தலின் பயனாகும்.

# 10. அருளால் எவையும் பார் என்றான்

"அம்மா! இதோ பார்! உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கேன்'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன் பாண்டிச்சேரிக்குத் தன் பள்ளித் தோழிகளுடன் கல்விப் பயணம் சென்றிருந்த என் கடைசி மகள் மங்கை வந்திருந்தாள். வந்ததும் வராததுமாகத் தன் தோள் பையைத் திறந்து தன் அம்மாவிடம் ஒரு படத்தை எடுத்துக்கொடுத்தாள் ''என்ன படம்?' என்ற ஆர்வத்தில் அருகில் சென்று பார்த்தேன்.

வெண்மையான பிளாஸ்டிக் அட்டையில் "அரவிந்தர்—அன்னை" இருவரும் அந்தப் படத்தில் தியான வடிவில் இருந்தனர். அரவிந்தர் முகம் சற்று நிமிர்ந்து நேருக்கு நேர் பார்ப்பது போல் அமைந்திருந்தது. அவர் விழிகள் மலர்ந்தும் மலராமலும் கிண்கிணி வாய்ப்பெய்த மணிகள் போல் இமை மெல்லத் திறந்து ஒளிர்ந்தன. உற்றுப் பார்ப்பவருக்கு

ஏதோ மௌன உபதேசம் செய்வன போல் அவை தோன்றின. பார்த்துக்கொண்டே இருக்கும் போது மனதில் ஓர் அமைதி நிலவு மாறு அவை நிகழ்ந்தன.



பக்கத்தில் அன்னையின் வடிவம். ஓரளவு குனிந்த தலை. கூரிய, ஆனால் கனிந்த பார்வை. பார்ப்பவரை அன்போடு தன்பால் அழைப்பன போல் அவை தோன்றின. அரவிந்தர் முகத்திலும் ஒரு மெல்லிய புன்னகைப் பொலிவு. அன்னை முகத்திலும் ஒரு அமைதியான

புன்னகைக் கனிவு. அங்கே ஞானம் பொலிந்தது. இங்கே அன்பு கனிந்தது.

"அம்மா! இவர்களுக்கு அன்றாடம் மலர் வழிபாடு செய்ய வேண்டுமாம்".... என்ற என் மகள் குரல் கேட்டு அவளைத் தலைநிமிர்ந்து பார்த்தேன். அவள் தொடர்ந்து தன் தாயிடம் பேசிக்கொண்டிருந்தாள்.

"பாண்டிச்சேரிக்குச் சென்றிருந்தோம் அல்லவா. அங்கு அரவிந்தர் ஆசிரமும் சென்றோம். எல்லோரும் அங்கே மலரிட்டு வணங்கினர். தேங்காய், பழம் ஒன்றும் இல்லை. பலப் பல மலர்களை வைத்து வந்தவர்கள் எல்லாம் வழிபட்டனர். தாமரை மலர், அல்லி மலர், மரமல்லி மலர், முல்லை மலர் இப்படிப் பல மலரிட்டு வழி பட்டனர். பின் அமைதியாகக் கொஞ்ச நேரம் அமர்ந்து தியானம் செய்து விட்டுச் சென்றனர். பேச்சு இல்லை. எந்த ஆடம்பர படாடோப நிகழ்ச்சிகளும் இல்லை. மலர் ஒன்று தான் அங்கே எங்கும் காணப்படு கிறது. பயணம் சென்ற நாங்கள் எல்லாம் மலர் வைத்து வழிபட்டோம். நான் மூன்று செந்தா மரை மலர்கள் வைத்து வழிபட்டேன். இங்கு நாமும் அன்றாடம் மலர் வைத்து வழிபட வேண்டும் அம்மா. எந்த மலராய் இருந்தாலும் வைத்து வழிபடலாம். ஒவ்வொரு மலரால் ஒவ் வொரு நன்மை உண்டாகுமாம். ஒருவகை மலர்

வழிபாட்டில் அன்பு பெருகுமாம். இன்னொரு வகை மலர் வழிபாட்டில் பகை நீங்குமாம். இப்படி அறிவுக்கு, அழகுக்கு, பொறுமைக்கு, அமைதிக்கு, ஒற்றுமைக்கு என்று ஒவ்வொரு வகை மலர் வழிபாடு உள்ளதாம். என்று நீண்ட சொற்பொழிவு ஒன்று செய்து அந்தப் படத்தைத் தன் அம்மா கையில் கொடுத்தாள்.

நான் அலுவலகம் சென்று மாலையில் சற்று நேரம் கழித்து மீண்டேன். "மேசையில் சிற்றுண்டி உள்ளது சாப்பிடுங்கள்" என்று சொல்லிய படியே அம்மாவும் பொண்ணும் பக்கத்தில் இருந்த மகளிர் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து மாலை நடைப்பயிற்சிக்காகச் செல்லத் தொடங்கினர். அவர்கள் கையில் ஒரு சின்ன பிரம்புக்கூடை இருந்தது. பிரம்புக்கூடை எதற்கு அம்மா? என்றேன். அன்றாடம் "அரவிந்தர், அன்னை" இருவருக்கும் மலர் வழிபாடு செய்ய வேண்டும் அப்பா. அங்குப் பல்கலைக்கழகவளாகச்சாலையின் இருமருங்கும் பல மலர்கள் பூத்திருக்கும். பறித்துக் கொண்டு வரப்போகிறோம் என்று என் மனைவி மீண்டும் நினைவுறுத்திவிட்டு அம்மாவும் பொண்ணும் நடைப் பயிற்சிக்குப் போய்விட்டனர்.

கைகால் முகம் கழுவிக் கொண்டு, வீட்டு நடையில், சாய்வு நாற்காலியில் படுத்தபடியே அருகில் இருந்த ஆழ்வார் பாசுரங்களை எடுத்துப் புரட்டி ஆண்டாள் திருப்பாவையைப்

பாடிப் படிக்கலானேன். "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்..." என்று தொடங்கிப்பாட்டையும் அதற்குப் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் உரையையும் படித்துக் கொண்டிருந்தேன். "இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா! எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட் செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்று... என்னும் பாசுரம் படித்துக் கொண்டிருந்தபோது கதவு தட்டும் ஒலி கேட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்தேன். என் மகளும் மனைவியும் நின்றுகொண்டிருந்தனர். என் மகள் கையில் இருந்த பிரம்புப் பூக்கூடை நிறைய மலர்கள் இருந்தன. உள்ளே வந்து அவற்றை ஒரு தாம்பாளத்தில் மெல்லக் கொட்டினாள். அம்மா வும் பெண்ணும் அவற்றை வகை வகையாய்ப் பிரித்தனர்.

மிளகு அளவே உள்ள சின்ன சின்ன மலர்கள் ஒரு வகை.

"அப்பா, இந்த மலர்களைப் பார்த்தீர்களா, மிக மிகச் சின்னவையாக இருக்கின்றன அல்லவா. இவை காலில் மிதிபடும் புல்லில் பூத்திருந்தன" என்றாள்.

அந்தச் சின்ன மலர்கள் பலநிறம். சில வெள்ளையாகத் தும்பைப் பூப்போல் இருந்தன.

சில ஊதா நிறம்; நீல வானத்தின் நிறம். சில செஞ்சிவப்பு மாலையில் மறையும் கதிரவன் போன்ற நிறம். இப்படி மூன்று நான்கு வண்ணங் களில் அவை இருந்தன. இப்படியே மஞ்சள் வெள்ளை நிறத்தில் சில சங்கு மலர்கள்; சிவப்பு வெட்சி, செம்பரத்தம் மலர்கள்; கள்ளி மலர், காட்டாமணக்கு மலர்கள் கூட இருந்தன. இப்படி அங்குக் கிடைத்த மலர்களை எல்லாம் வகை வகையாய்ப் பிரித்து "அரவிந்தர்—அன்னை" படத்தின் முன் ஒரு தாம்பாளத்தில் வைத்துத் தாயும் மகளும் சிறிது நேரம் தியானம் செய்தனர்.

அன்று இரவு சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போனேன்.

"அப்பா" என்று கூப்பிட்டுக் கொண்டே என் மகள் படுக்கையில் வந்து அமர்ந்தாள். "அப்பா! எல்லாக் கோயில்களிலும் தாமரை, மல்லிகை முல்லை, ரோஜா, செவ்வந்தி, நந்தியாவட்டம் என்ற இந்த மலர்களை மட்டும் தானே வைத்து இறைவழிபாடு செய்கின்றனர். இங்கே 'அரவிந்தர் அன்னை' வழிபாட்டில் புல்லில் பூத்த மலர், புதரில் பூத்த மலர். இப்படி எல்லா மலர் களையும் வைத்து வழிபடுகிறார்களே அப்படி வழிபடலாம் என்கிறார்களே ஏன் அப்பா அப்படி? என்று கேட்டுச் சிறிது நேரம் உட்கார்ந் திருந்தாள். எனக்குப் பதில் ஒன்றும் உடனே

சொல்லத் தோன்றவில்லை. கொட்டாவி கொட்டாவியாய் வந்தன. பார்த்து விட்டு என் மகள் எழுந்து தூங்கப்போய் விட்டாள்.

காலையில் நான்கு மணிக்கு விழிப்பு வந்து விட்டது. ஏன் அப்பா இப்படி எல்லா மலர்களையும் வழிபாட்டுக்குப் பயன் படுத்துகிறார்கள் என்ற என் மகளின் கேள்வி மனதில் எழுந்தது.

சின்ன மலர்களில் பெரிய மலர்கள். ஓரிதழ் மலர்கள். பல இதழ் மலர்கள்; வெள்ளை மலர்; சிவப்பு மலர்; ஊதா மலர்; மஞ்சள் மலர். தரையில் மலரும் மலர்; நீரில் மலரும் மலர்; குன்றில் மலரும் மலர், செடி மலர்; கொடி மலர்; மர மலர். குத்தும் முள்ளுக்கிடையில் மலரும் மலர்; இடிக்கும் கல்லுக்கிடையில் மலரும் மலர்; வீட்டு மலர்கள்; காட்டு மலர்கள்; காலை மலர்கள்; மாலை மலர்கள். இப்படி வடிகால் வண்ணத்தால், காலத்தால், இடத்தால் வேறுபட்ட பற்பல மலர்கள். ஆனால் எல்லாம் மலர்கள், எல்லாம் மென்மையானவை; அழகானவை; அமைதியானவை. கொடு முள்ளுக்கு இடையிலும் மென்மையானவை; கருங்கல்லுக்கு இடையிலும் மென்மையானவை. நாறுஞ் சேற்றுக்கு அருகிலும் அழகானவை; ஓடும் ஆற்றுக்கு அருகிலும் அழகானவை. ஊர்திகள் செல்லும் சாலை ஓரத்திலும் அமைதியானவை. மக்கள் கூடிக் கூடிக் குரலிடும் சோலைகளிலும் அமைதி

யானவை. அவை தோன்றிய இடங்களோ மண் தரை, சேற்றுக் குழி, கல்பாறை, மண்சாலை, மலை முகடு. தோன்றிய செடிகொடிகளோ அற்பமானவை; புல்பூண்டுகளில்கூட தோன்றியவை. சுற்றிலும் முள்ளுக்கு இடையில் தொட்டால் பால் சொட்டிப் புண்ணாக்கும் செடிகளிலும் மலர்ந்தன. ஆனால் எல்லா மலர்களும் தூய்மையானவை; மென்மையானவை; அழகானவை; அமைதியானவை.

இப்படித்தான் உலகில் பல்வேறு மக்கள் உள்ளனர். குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், முதியோர்கள், கறுப்பர், சிவப்பர், வெளுப்பர். கற்றவர்; கல்லாதவர்; தாழ்ந்த தொண்டு செய்வோர். உயர் அலுவலர் அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தம்பி தமக்கை; நண்பர்; பகைவர்; உற்றார் உறவினர் இப்படிப் பல்வேறுபட்ட மக்கள் பலதரத்தினர்; பல நிலையினர்; பல இயல்பினர்; பல இடத்தினர்; நம்மைச் சுற்றி உள்ளனர். எப்படிப் பல்வேறு வகையான செடி கொடி மரங்களில் தூய்மையான, மென்மையான, அழகான அமைதியான மலர்களைக் காண்கின்றோமோ அப்படியே தம்மைச் சுற்றி உள்ள ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஒரு தூய்மையான இயல்பினருக்கும் மென்மையான குணமிருக்கும்; அழகான பண்பிருக்கும்; அமைதியான செயலிருக்கும். அவை ஆழ்ந்த நீரில் உள்ள மலர்போல்

நெருங்கி அறிவதற்கு அரியதாக இருக்கும். மாலையில் உள்ள மலர்போல் எட்டுதற்கு முடியாதவாறு முள்ளுக்கிடையேயான மலர் போல இருக்கும். எப்படி இருந்தாலும் எங்கிருந்தாலும் அந்தத் தூய்மையான, மென்மையான, அழகான, அமைதியான மலர் போன்ற ஒரு நல்ல தன்மை ஒவ்வொரு மனிதரிடமும், ஒவ்வொரு உயிரிடமும் இருக்கும். அதைத் தேடிக் கண்டு கொண்டு அருளோடு போற்றி வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் நம்மிடமும் அந்தத் தூய்மை, மென்மை அழகு, அமைதி அமைந்து விடும். இதைத்தான் இந்த மலர் வழிபாடு உணர்த்துகிறதோ என்று எண்ணியபடியே படுக்கையை விட்டு எழுந்தேன்.

# 11. முகவரி எது?

இராம தீர்த்தர் கங்கைக் கரையில் அமர்ந்திருந்தார். அமைதியான மாலைப் போது. பகலுக்கும் இருளுக்கும் இடையே படர்ந்த செவ்வானம். கங்கையில் படகொன்றில் மாலைப் போதின் வண்ண ஜாலங்களை, கங்கையின் மெல்லலை ஓசையை அனுபவித்துக் கொண்டே ராஜப்பிரதானிகளோடு சென்ற காசிராஜனின் கண்ணில் தியானத்தில் அமர்ந்திருந்த தீர்த்தர் காணப் பெற்றார்.

இராமதீர்த்தரைக் காண வேண்டும், கண்டு உரையாட வேண்டும், என்று ராஜாவுக்குப் பல நாள் ஆசை. போன வரம் பாகிய ஞானத்தைப் பெற்றவர் அவர் என்பது அறிஞர் பலர் வழி ராஜா அறிந்திருந்தார். இப்போது இது நல்ல வாய்ப்பாக அவருக்குப் பட்டது.

யாரும் நடமாட்டம் இல்லாத அந்த அமைதியான இடம் நோக்கிப் படகைச் செலுத்துமாறு ராஜா குறிப்புணர்த்தினார். படகோட்டியும் குறிப்புணர்ந்து படகைச் செலுத்தி இராம தீர்த்தர் அருகே நிறுத்தினான்.

சலசலப்பு ஓசையில் தீர்த்தர் கண் விழித்தார். காசிராஜன் கைகூப்பியவாறு நின்றிருந்தான்.

'ராஜன்! எழு. என்ன இப்படி? இவ்வளவு தூரம்' என்பன போல் செய்கை காட்டி விழித்து நோக்கினார்.

ராஜனும் எழுந்து நின்று கைகூப்பி 'தவ யோகியே! தாங்கள் கடவுளைக் கண்டவர் என்று அனைவரும் கூறுகிறார்கள் நானும் காண வேண்டும் என்று விரும்புகிறேன். எனக்கு அவனைக் காட்டியருள்க' என்று ராஜன் வேண்டினான்.

'கடவுளைக் காண விருப்பமா? ஓ பார்க்கலாமே — தாங்கள் ஏன் சிரமப்பட வேண்டும். கடவுளே தங்களைக் காணவருமாறு வேண்டுவேன். தாங்கள் அருள் கூர்ந்து தங்கள் சரியான, நிலையான முகவரியைத் தாருங்கள்' என்றார் தவயோகி இராமதீர்த்தர்.

ராஜன் சொல்லத் தொடங்கினான். ஏதோ உடனே எழுதிக் கொள்ளப் போவது போல இராமதீர்த்தரும் ஏடும் எழுத்தாணியும் கையில் எடுத்துக் கொண்டு தயாரானார்.

'ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ கம்பீர......' என்று ராஜன் தொடர்ந்தான்.

எழுதத் தொடங்குவது போல் பாசாங்கு செய்த தீர்த்தர் 'நிறுத்துக' என்று ராஜனைப்

பணித்தார். அவனும் தான் சொல்லியதை நிறுத்திவிட்டு வியப்போடு பார்த்தான்.

"ராஜன்! சில ஆண்டுகளுக்கு முன் இங்கே தங்களைப் போல் ஆனால் தங்களைவிட முதிர்ந்த தோற்றமுடைய ஒருவர் வந்திருந்தார். அவரும் தன் பெயரை இப்படித்தான் தொடங்கினார். நீங்கள் தானா அது...?"

"இல்லை தவயோகியாரே; அவர் என் தந்தையார். காலமாகி விட்டார். இப்போது நான் ராஜனாகியுள்ளேன்."

'ஓ! அப்படியா!' மகிழ்வது போல் தீர்த்தர் தொடர்ந்தார். "தங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களா?

"இருவர் இருக்கிறார்கள். பெரியவன் புஜ பல பராக்கிரமத்தோடு உள்ளான். இப்போது பட்டங்கட்டினால் கூட ஆள வல்லவன்."

நல்லது, நல்லது. அப்படியானால் இன்னும் சில ஆண்டுகளில் அவன் ராஜன் ஆகிவிடுவான். அப்போது இந்த ராஜாதி ராஜ... விருதுகள் எல்லாம் அவனுக்குப் போய்விடுமே.'

ராஜனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. தீர்த்தர் தொடர்ந்தார்.

'கடவுள் உன்னைக் காண வருவார். அவருக்கு நான் உன் சரியான முகவரியைத் தர வேண்டும். அப்படி அப்பனுக்கு உள்ளது மக

னுக்கும், மகனுக்கு உள்ளது அவன் மகனுக்கும் மாறி மாறிப் போய்க் கொண்டிருக்கும் நிலையில்லா முகவரியைக் கடவுளுக்கு எப்படித்தருவது என்று தயங்குகின்றேன். தங்கள் நிலையான முகவரியைத் தாருங்கள்' என்று கெஞ்சினார் தீர்த்தர்.

அரசர் சற்று யோசித்து விட்டு இப்படி எழுதிக் கொள்ளுங்களேன். 'விசுவநாதேஸ்வரர் காசி மஹால்'... என்றார்.

'விசுவநாதேஸ்வரரா... இந்தக் காசியில் பாதிபேர் 'விசுவநாதா' என்றுதான் பெயர் வைத்துள்ளனர். அது சரி 'காசி மஹால் என்றீர்களே அரிச்சந்திர காட்டம் தாண்டி அப்பால் உள்ளதே அதுதானே.'

'ஆமாம் தவயோகியாரே! புதிய மஹால் தான். ஊருக்குள்ளிருந்த பழைய மஹால் கங்கை வெள்ளத்தில் மூழ்கிப் போய்விட்டது. தாங்கள் அறியாததா!

'ஆம், ஆம். நினைவிருக்கிறது. ஐயோ! எவ்வளவு உயிர்ச்சேதம். கங்கை அழுக்குகளை அப்புறப்படுத்துவது போல எழுந்தாள். அனைத்தையும் அழித்த பின்னர்தான் அடங்கினாள். அவளுக்கு என்னவோ அப்போது அழுக்குக்கும் அழகுக்கும் இருக்கும் வித்தியாசம் புலப்படவில்லை. அது சரி ராஜன். மீண்டும் மீண்டும் கேட்கிறேனே என்று வருத்தப்படாதீர்கள். ஏன் இப்படிக் கேட்கிறேன் என்றால் தாங்

களே ஒருவரைக் காணப் போக வேண்டும் என்றால் உடனேயா புறப்பட முடிகிறது. அதற்குமுன் உள்ள திட்டங்கள் என்ன, அதற்கு முன் யார்யாரைப் பார்ப்பதாகச் செயலாளர் தங்களிடம் வாக்கு வாங்கிக் கொடுத்துள்ளார். இப்படி, இவை எல்லாவற்றையும் யோசித்து விட்டுத்தானே புறப்படுவீர். தங்களைவிட எவ்வளவு பெரிய சாம்ராஜ்யம் கடவுளுடையது. நான் சொன்னாலும் உடனே வந்து தங்களை அவரால் பார்க்க முடிகிறதோ என்னவோ. சில காலம் கடந்தபின் அவர் வரும்போது பழைய மஹால் போல இந்தப் புதிய மஹாலும் அழிந்து விட்டிருந்தால்...' தீர்த்தர் நிறுத்தினார். ராஜனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

தீர்த்தர் தொடர்ந்தார். 'இந்தப் பெயர் நிலையானது இல்லை. இந்த இடம் நிலையானது இல்லை. இந்த உடல் நிலையானது இல்லை. உன்னில், உன்னிடம் உனக்குள் எது நிலையானது அதைச் சொல். நான் கடவுளுக்கு அதைச் சொல்லி வரச் செய்கிறேன்' என்றார்.

ராஜன் யோகியார் திருவடிகளில் வீழ்ந்து கிடந்து புலம்பினான். 'நான் ராஜன் இல்லை. காசிமஹால் என் இடம் இல்லை... என் முகவரி இன்னும் எனக்குத் தெரியவில்லை. பிரபுவே!' என்று கண் கலங்கினான்.

அவன் கண்ணீர் யோகியார் திருவடிகளில் முத்து முத்தாக உதிர்ந்து நனைத்தது.

"குழந்தாய்!" என்று ஓர் இனிய குரல் கேட்டது. ராஜன் தலைநிமிர்ந்தான். யோகியார் கைகள் இரண்டும் நீண்டு தரையில் கிடந்த அவனைத் தூக்கித் தழுவிக் கொண்டன.

'நீ ராஜன் இல்லை. காசி மஹால் உன்னுடையது இல்லை. இந்த உடம்புங் கூட உனக்குச் சொந்தமானது இல்லை. இவை எல்லாம் இல்லை இல்லை என்ற அறிவுங் கூட நீ இல்லை; உன்னுடைமை அல்ல. மணம் மலரிலிருந்துதான் வருகிறது. ஆனால் அந்த மலரே செடியாகி விடுவதில்லை. சுவை இலைகளிலிருந்து கிடைக்கிறது. இலைகளே மரங்களாகி விடுவதில்லை. 'நீ' நிலையற்ற இந்தக் காலம், இடம், கருவி, நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவன் இந்த, அந்த, எந்த... என்னும் கட்டுகளற்றவன். இங்கே அங்கே எங்கே என்ற இடங்களற்றவன். இப்படியன் அப்படியன் எப்படியன் என்ற தன்மைகளற்றவன் நீ—உன்னை நீ, உணர்ந்து கொள். தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம் என்று நிறுத்தினார்.

தெளிந்த நடையோடு படகுக்கரை நோக்கிச் சென்றான் ராஜன்.

"தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்'' என்ற தொடர் மீண்டும் தீர்த்தர் நாவில் நடமாடியது-தலைவனை அறியலாம் தலைவனை.... என்று தனக்குள்ளேயே சொல்லித் தியானத்தில் ஆழ்ந்தார். "ஊரு மிலார் பேருமிலார் உற்றார் பெற்றார் யாருமிலார் என்னை அறிவாரோ பைங்கிளியே'' என்ற தாயுமானவர் உயிர்வேட்கை அவர் அகச் செவியில் கேட்டது. மீண்டும் நா நடமாடியது.

அவன் யார்? ஓ அவனுக்கும் ஊர் இல்லையே. பேர் இல்லையே. உறவில்லை, நட்பில்லையே, பகையில்லையே. நானும் அவன் இனந்தான்-அவனும் என் இனந்தான். அவனை அறிந்தால் என்னை அறிவேன். என்னை அறிந்தால் அவனை அறிவேன். அவனை அறிவேன். அது ஒரு "நான்'' இது ஒரு "நான்'' "நான்'' நானை உணரும்; "நான்'' நானுள் கரையும். "நான்'' நானுள் மறையும். நான் தானாகும். ஓம் நான்! "நான்'' நான், நான் தான், நான் தான் நான் தான், நான் தான்... தானான் தானான் தானான்...

ராமதீர்த்தர் சமாதியில் ஆழ்ந்தார்.

# 12. ஒரு மாணவர்

பொழுது புலரும் சமயம், கரிச்சான் குருவிகள் கலகல எனப் பேசி ஓய்ந்த நேரம். காகங்கள் கீழ்த்திசை நோக்கிச் சிறகடித்துப் பறக்கத் துவங்கிய காலைப் பொழுது, அந்த வைகறையிலே, பொன் காலைப் போதிலே அலைவீசும் அரங்கத்துறை காவிரியாற்றிலே திருமால் அடியார்கள் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் திருமந்திரத்தை நெஞ்சுகள் நினைந்தவாறு நீராடிக் கொண்டிருக்கின்றனர்.

அப்படி நீராடிக் கொண்டிருக்கும் அடியார்களுள் ஒருவர், தற்செயலாகக் கரையை நோக்குகிறார். ஆங்கே அன்று உடுத்துக் கொள்வதற்காகத் தத்தம் ஆடைகளை முதல் நாள் தோய்த்துத் தூய்மை செய்து காய வைத்து மடித்து வைத்துள்ள சிறு சிறு பாசறைகளுக்குப் பக்கத்தே அரச காவலர் சிலர் வந்து நிற்கின்றனர்.

இவர்களைக்கண்ட அந்த அடியார் நெஞ்சம் துணுக்குறுகிறது. 'தன் ஆசான் இராமாநுஜர்க்குத் தீங்கிழைக்கும் சதி ஒன்று அரச

நிலையில் உருவாகிக் கொண்டிருக்கிறது' என்ற செய்தியை அவர் முன்னரே அறிந்திருந்ததே அதற்குக் காரணம். 'என்ன செய்வது, தன் ஆசிரியனை எப்படிக் காப்பது?' என்று கலங்குகிறது அவர் உள்ளம்.

அரச காவலரோ வலியர், தண்டேந்தி வந்துள்ளனர்; போரில் பழகியவர். அடியவர் திருக்கூட்டமோ அமைதியும் அன்பும் கொண்டது; உடலால் மெலிந்தது. எனவே காவலரைத் தடுத்து நிறுத்த இயலாது; அதற்காக ஆசிரியனை இழக்கவும் கூடாது. இப்படி எண்ணிக் குழம்பிய அவர் முகத்தில் திடீரென ஒரு தெளிவு தோன்றுகிறது; கண்கள் மலர்கின்றன; கால்கள் விரைந்து கரையேறிக் காவி உடை வைத்துள்ள பாறை அருகே நிற்கின்றன.

தன் ஆசானுக்கு உரிய காவி ஆடைகளை அந்த மாணர் அணிந்து கொள்கிறார். உடனே அரச காவலர் அவரைச் சூழ்ந்து கொள்கின்றனர். இந்தக் காட்சியை நீராடிக் கொண்டிருந்தவர்கள் காண்கின்றனர். இந்தக் காட்சியைக் கண்டு கரையேறி, ஏதோ சொல்ல இராமாநுசர் முயல்கிறார். காவி உடுத்து, காவலர் சூழக் கரையில் நின்ற அந்த அடியார் கண்கள் தன் ஆசானை நோக்குகின்றன.

'என்னைத் தடுக்காதீர்கள்; இந்த அரிய வாய்ப்பை எனக்கு அளித்தருள வேண்டுகிறேன்.

தங்களால் ஆக வேண்டிய பெரும்பணி ஆளவந்தார் தங்கட்கு அளித்துள்ள அரும்பணி உளது. அதனைத் தாங்கள் மேற்கொண்டு உலகை உய்விக்க இப்போது என்னை இவர்களோடு அனுப்பி வையுங்கள்' என்று வேண்டுவனபோல் அவர் கண்கள் ஒளிர்கின்றன. அந்த ஆசிரியர் இந்த மாணவனை, கூரத்தாழ்வானை மனதுள் வாழ்த்தி அனுப்பி வைக்கிறார்.

ஆழ்வான் அரச அவைக்கு அழைத்துச் செல்லப் பெறுகிறான். ஆங்கே அரசனுக்கு உண்மை தெரிகிறது. இராமானுசர் தப்பிய செய்தியும் அவர் இடத்தில் துன்புற ஆழ்வான் வந்துள்ளதையும் அறிகிறான். வைணவச் சான்றோனாகிய ஆழ்வான், 'சிவன் பெரியன்' என்று கூறுமாறு வற்புறுத்தப் பெறுகிறான். ஆழ்வான் மறுக்கிறான். அரச ஆணையை மறுத்த ஆழ்வானின் கண்கள் இரண்டும் பிடுங்கப் பெறுகின்றன. கண்களிலிருந்து குருதி கொட்டுகிறது. ஆனால் ஆழ்வார் நெஞ்சிலோ, 'ஆஹா! இறைவன் என்ன பாக்கியம் அருளினான். இந்த இடத்தில், என் நிலையில் என் குருநாதர் கண்களை இழந்து வைணவ உலகு குருடாகி விடாமல் அவர் இடத்தில் என்னை அனுப்பி அவரைக் காத்தருளிய இறைவனின் கருணையே கருணை' என்று குருபக்தி உணர்வு சுரந்து பாய்கிறது.

பாஷ்யகாரர் என்று வைணவரும் எம்பெருமானார் என்று உலகமும் போற்றிப் பரவும் இராமாநுசர் திருவரங்கத்திலிருந்து தப்பி மைசூர்ப் பகுதியை அடைகிறார். அங்கே கூரத்தாழ்வானுக்கு நேர்ந்த துன்பங் கேட்டுக் கன்றிழந்த பசு போலக் கதறிக் கண்ணீர் விட்டுக் கலங்குகிறார்.

ஆசிரியனின் உள்ளம் உருகுமாறு வாய்த்த, வாழ்த்த இந்த மாணவரின் இயற் பெயர் கூரேசன் என்பதாகும். காஞ்சிபுரத்தருகே வாழ்ந்த பெரிய செல்வர் இவர். இராமாநுசர் பால் பிள்ளைப் பருவம் தொட்டே பேரீடுபாடு கொண்டிருந்த இவர் அனைத்துச் செல்வத்தையும் துறந்து மனைவி ஆண்டாளுடன் இராமாநுசரின் அடியரானார். அவரை ஆட்கொண்ட எம்பெருமானாரும் கூரேசன்பால் கண்ட அகத் தூய்மை கண்டு பவித்திரமாகக் கொண்டாடினார்.

வைணவ வரலாற்றில், இந்திய இலக்கியத்தில், உலக மாணவ சரித்திரத்தில் ஓர் ஒப்பற்ற இடம் கூரத்தாழ்வானுக்கு என்றும் உண்டு. அவர்பால் எத்தனையோ குணம்பல குழுமிக் கிடப்பினும் 'ஒரு மாணவர்' என்ற தன்மை ஏற்றம் பெற்றிருக்கக் காணலாம்.

# 13. விளையாடறப்போ விளையாடு

"தாத்தா' தாத்தோ; பேரன் கார்த்தியின் குரல் அடுப்பங்கறையிலிருந்து கேட்கிறது. ஏதோ பிரசினை. தாத்தா! ஆத்தாவுக்குப் பொர ஏறிடிச்சி. சோறு தின்னிச்சில்ல. அப்போ பொர ஏறிடிச்சி, சிங்கப்பூர்ல இருக்கிற பெரியப்பா அதான் அருள் பெரியப்பா ஆத்தாவ நெனச்சிதாம். ஆத்தாவுக்குப் பொர ஏறிடிச்சாம். ஆத்தா சொல்லுது. தாத்தா! ஏந் தாத்தா! ஒனக்குப் பொர ஏறலயே! நீயும்தான் சாப்பிட்ட. ஒன்ன யாரும் நெனச்சிக்கலயா தாத்தா!'

"கார்த்தி! ஆத்தாவுக்குப் பொர ஏறிடிச்சா, ஏதாவது தொண தொணன்னு பேசிக்கிட்டு இருந்திருப்பா ஒங்க ஆத்தா. அதாம் பொர ஏறிடிச்சி. சாப்பிடறப்போ சாப்பிடணும். பேச றப்போ பேசணும். ஒங்க ஆத்தா இருக்காளே, சாப்பிடறப்போ பேசிக்கிட்டே சாப்பிட்டிருப்பா. அதனால பொர ஏறியிருக்கும். சாப்பிடறம்

இல்லடா கார்த்தி. அது வயித்துக்குள்ள தொண்ட வழியா போவுது. இதுக்குப் பக்கத்திலேயே மூச்சுக்குழாயும் இருக்குது. சாப்பிட்டுக்கிட்டே பேசினா, கோபப்பட்டா, எதயாவது நெனச்சிக்கிட்டா சாப்பிடறது தொண்டகிட்ட இருக்கிற மூச்சுக் குழாயில உழுந்திடும். ஒரு சொட்டு உழுந்தாக்கூடப் போதும். மூச்சுக் குழா உள்ள விடாது. வெளிய புடுச்சித் தள்ளும். அது தள்ளுற வேகத்தில உள்ளே போவது வெளிய வந்து உழுந்திடும். அதத்தான் நாம் பொற ஏறிடுச்சின்னு சொல்றம். இதத்தான் நாம் யாரோ நம்ம நெனச்சிக்கிட்டதா சொல்றம். அது தப்பு. சாப்பிடறப்போ நாம இன்னொருத்தர நெனச்சிக்கிறதனாலத்தான் இன்னொரு வேலய செய்றதுனாலத்தான் பொற ஏறிடுது. சாப்பிடறப்போ சாப்பிடணும். வேல செய்யறப்போ வேல செய்யணும். அப்பத்தான் சாப்பாடும் நல்லா செரிக்கும். வேலயும் நல்லா நடக்கும்.''

''ஆமாம் தாத்தா! நேத்து அண்ணன் பந்து வெளயாண்டுச்சி. அப்போ அண்ணனோட படிக்கிற கோபி வந்துச்சு. 'டேய் முத்து'ன்னு அவன் கூப்பிட்டான். அண்ணன் திரும்பிச்சி பாரு பந்து கீழே உழுந்திடிச்சி. அண்ணன் அவுட்டாயிட்டாடுச்சி. வெளயாடறப்போ நல்லா வெளயாடணும். நண்பர்கள்கிட்ட பேசறப்போ நல்லா பேசணும். வெளயாடறப்போ பேசக்

கூடாது. பேசறப்போ வெளயாடக் கூடாது. இல்லயா தாத்தா!

ஆமாண்டா கண்ணு! ஒங்க அப்பா இருக்கில்லடா சின்னவனா இருக்கறப்போ நெறய படிச்சிக்கடான்னு சொன்னேன்; அவனும் பள்ளிக் கூடம் போனான். காலேஜிக்குப் போனான். அங்கெல்லாம் மாணவர் சங்கமாம் அதுல தலைவன் ஆவணும்னு அல அலன்னு அலஞ்சான் அவங்க வாத்தியாரு வந்து எங்கிட்ட சொன்னாங்க.

''பையன் வகுப்புக்கு வரமாட்டங்கறான். வந்தாலும் படிக்க மாட்டங்கறான். உக்காந்த படியே எதயோ நெனச்சிக்கிட்டிருக்கிறான். கேள்வி கேட்டா எதயோ சொல்றான்.'' அப்படின்னு உங்க அப்பா வாத்தியாரு சொன்னார். இப்ப பாரு உங்க அப்பாவ! கல்யாணம் ஆகி வேலையும் கெடச்சிடுச்சி. இப்ப ஆபீஸுக்குப் புஸ்தகத்தை எடுத்துக்கிட்டுப் போறான்.

அடுப்பங்கறைக்கும் புஸ்தகத்த எடுத்துக்கிட்டுப் போறான். உன்னோட கூட வெளயாட முடியலியே. பரிட்ச பரிட்சன்னு அலயறான். பாவம்! குடும்பத்தயும் கவனிக்க முடியல. ஆபீஸுக்கும் ஒழுங்கா போக முடியல! படிக்கிறப்போ ஒழுங்கா படிச்சிருந்தா இப்ப கஷ்டப் படப் போறதில்ல. குடும்பத்தயும் நல்லா

கவனிச்சுக்கலாம். வேலயையும் நல்லா பார்க்கலாம். படிக்க வேண்டிய காலத்தில வேல வேலன்னு அலஞ்சான். வேல செய்யறப்போ படிப்பு படிப்புன்னு திரியறான்.

"ஒரு வேலய எடுத்தா அத ஒழுங்கா செய்யணும். தொடர்ந்து செய்யணும். வெற்றி கெடைக்கிற வரைக்கும் விடாம செய்யணும். எங்க வாத்தியாரு ஒருத்தரு. பால கணபதின்னு பேரு. அவுரு ஒரு நாளு, ஒரு கத சொன்னாரு. சோழவத்தியாபுரம்முன்னு ஒரு கிராமமாம். அங்க எல்லாரும் விவசாயம் செய்துதான் பொழச்சிக்குவாங்களாம். தண்ணி பாயாத புஞ்ச நெலம் நெறய இருந்திச்சி. அங்க, கீழ்த் தெருவுல கந்தசாமி, கோவிந்தசாமின்னு ரெண்டுபேருக்கும் ஊருக்கு அப்பால புஞ்ச நெலம் இருந்திச்சி. அதுக்குத் தண்ணி கிடைக்கலெ. கெணறு வெட்டித் தண்ணி எறச்சி தான் பயிர் வெக்கணும். ரெண்டுபேரும், நாகப் பட்டினம் வெவசாய ஆபீசுக்குப் போனாங்க,

போயி, தண்ணி எங்க ஊறுமுன்னு கண்டு புடிக்க அங்கிருந்து ஒருத்தர அழைச்சுக்கிட்டு வந்தாங்க. அவுரு வந்து ஊருக்கு மேற்க இருந்த கந்தசாமி புஞ்ச நெலத்தையும் பார்த்தாரு. ஊருக்குக் கிழக்க இருந்த கோவிந்தசாமி புஞ்ச நெலத்தையும் பார்த்தாரு. மண்ண எடுத்து ஆராய்ச்சிப் பண்ணினாரு. அப்புறம், ரெண்டு பேரையும் பார்த்து, அய்யா! நூறு அடி

தோண்டுனா தண்ணி கெடைக்கும்முன்னு சொன்னாரு.

உடனே, கிழக்க ஒருத்தரும் மேற்க ஒருத்தரும் போய் ஆள வெச்சி கெணறு தோண்டுனாங்க. ஏழு எட்டு நாள் தோண்டு னாங்க. கந்தசாமி தோண்டுன எடத்தில தண்ணி வந்திடுச்சி. ஆனா, கோவிந்தசாமி தோண்டுன இடத்திலே தண்ணி வல்ல. அளந்து அளந்து பாத்தாரு. நூறு அடி இருந்திச்சி. இருந்தாலும் தண்ணி வல்ல.

உடனே நாகப்பட்டினம் போய், அந்த ஆபீசரைக் கோவமா கேட்டாரு. என்னங்க ஆராய்ச்சி பண்ணீங்க நீங்க. நூறு அடி தோண்டுனா, தண்ணி வருமுன்னீங்க. நூறு அடி தோண்டிட்டேன். தண்ணி வல்லீங்க.'' அப்படின்னு கத்தினாரு, "இந்தாப்பா கோவிந்தசாமி! கோபப்படாதே! நான் போட்ட கணக்கு தப்பாது. வா போய்ப் பாப்பம்'' அப் படீன்னு ஜீப்ப எடுத்துக்கிட்டு, கோவிந்த சாமியையும் அழச்சிக்கிட்டு ஊருக்கு வந்தாரு. நேரா கோவிந்தசாமி புஞ்ச நெலத்துக்கிட்ட போனாரு. அங்க போனா அந்த ஆபீஸருக்கு அழுவறதா சிரிக்கறதான்னு தெரியல. ஏன்னா.... ஏழெட்டு இடங்களில பத்து அடி. பதினஞ்சி அடின்னு தோண்டித் தோண்டி வெச்சிருந்தாரு. எல்லாத்தையும் அளந்து காட்டினாரு. மொத்தம் நூறு அடி இருந்திச்சி. "அய்யா!

கோவிந்தசாமி! இப்படிக் கொஞ்சம் கொஞ்சமா ஏழெட்டு இடங்களுல தோண்டினா, நூறு அடி



கீழேஓடும் நிலத்தடிநீரு எப்படிய்யா கிடைக்கும்! ஒரே இடத்தில, விடாம தொடர்ந்து நூறு அடி தோண்டி இருந்தா, இன்னேரம் குபுகுபுன்னு தண்ணி வந்திருக்குமேன்னாரு,'' என்ன கார்த்தி கதை அப்படியா தாத்தா! அப்போ! ஒரு சமயத்தில ஒரு வேலயத்தான் செய்யணும். அதுவும் தொடர்ந்து செய்யணும். முழுக்கவனத் தோட செய்யணும். அப்பொதான் வெற்றி கிடைக்கும் இல்லயா தாத்தா!

''ஆமாண்டா கார்த்தி! நீ கெட்டிக்காரப் பையன்.''

'ஆமாண்டா கார்த்தி! ஒரு வேலையெ ஒரு சமயத்தில் செய்யறது சரி. இன்னொன்னு கூட நினைச்சுக்கணும். ஒவ்வொரு பதவியிலெ உள்ளவுங்க. அவுங்கவுங்க வேலையெ அந்தப் பதவி காலத்துலெ தப்பாமே செய்யணும். அந்த நேரத்திலெ அவர் சமுதாயத் தொண்டுன்னு போயிடக் கூடாது. அப்படித்தான் சமுதாயத் தொண்டு செய்யிறவர் காய்கறி வியாபாரம் செய்யக்கூடாது.''

''சரி தாத்தா—இப்பொ நான் வெளெயாடப் போறேன். சாயுங்காலம் ஆயிடுச்சி.'' ''சரி போடா. இன்னும் ஒன்று கேட்டுக்கோ.

பதவின்னு சொன்னேன்லெ. அதுலே இந்த மனிதப் பிறவிகூட ஒரு பதவிதான் நம்ம உள்ளே உயிர் இருக்குதில்லெ. அந்த உயிருக்குப் பல பதவி கிடைக்கிறது. அதுல இந்த மனிதப் பிறவி ஒரு நல்ல பதவி. இந்தப் பதவியிலெ நாம செய்ய வேண்டிய முக்கியமான வேலெ ஒன்னு இருக்கு,

என்ன தாத்தா அது!

அதுதான் கடவுளைக் கும்புடுறது. இந்த உலகம், நீ நான் எல்லாரையும் காப்பாத்துற வரு அவர்தான். அவரைக் கும்பிட்டா அவரைத் தெரிஞ்சுக்கலாம். அவர் மனம் போல நடந்துகிட்டா அப்புறம் நமக்குக் கவலையே கிடையாது. சரி நீ இப்பொ ஆடப் போ.''

# 14. இயற்கை சிரித்தது

கலகல' எனச் சிரிப்பொலி கேட்டது; மின்னல் 'பளிச் பளிச்' என மின்னியது. யார் சிரிக்கிறது? என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆனால், சிரிப்பொலி மட்டும் கேட்டுக் கொண்டே இருந்தது. எங்கிருந்து வருகிறது இந்தச் சிரிப்பொலி என்று மீண்டும் கண்களைச் சுழற்றிப் பார்த்தேன்.

கண்ணுக்கு முன்னே அடுக்கடுக்கான மலைத் தொடர்கள். அந்தத் தொடர்களுக்கு அப்பால் ஒரு கோபுரம் தெரிந்தது. இந்த மின்னல் வீச்சும், சிரிப்பொலியும் அந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து வருவது போல் தெரிந்தது. கோபுரத்தின் உச்சியை நன்றாக உற்றுப் பார்த்தேன். அங்கே ஒரு அழகான கை தெரிந்தது. அது என்னை அழைப்பது போல் குவிந்திருந்தது. கோபுரத்துக்கு எப்படிப் போவது என்று சற்றுத் தயங்கினேன். கண் முன்னே தொடர்ந்து படிகள் பல இருந்தன. படிப்படியாக மெல்ல மெல்ல ஏறி நடந்தேன். பக்கத்தில் பச்சைக் கிளிகள் கீச்சிட்டுக் கொண்டு பறந்து

திரிந்தன. நாகணை வாய்ப்பறவைகள் 'கீசு கீசு' என்று ஏதோ பேசி மகிழ்ந்தபடியே அங்கும் இங்கும் காணப்பட்டன.

மயில்கள் கவலையில்லாமல் ஆடிக் கொண்டிருந்தன. குயில்கள் இன்பமாகப் பாடிக் கொண்டிருந்தன. மான்குட்டிகள் இங்கும் அங்கும் துள்ளிக் குதித்தோடின. சின்னஞ்சிறு கன்றுக் குட்டிகள் தாய்ப்பசுவிடம் முட்டி முட்டிப் பால் குடித்தன. தாய்ப்பசுவும் தன் கன்றுக்குட்டியை நக்கிக் கொடுத்து மகிழ்ந்தது. நான் தொடர்ந்து படிப்படியாக ஏறி மேலே போய்க் கொண்டிருந்தேன். அந்தக் கலகல சிரிப்பொலியும் மின்னல் ஒளியும் குவிந்த கையும் என்னை வா வா, வா' வென்று அழைப்பன போல் தோன்றின.

நான் தொடர்ந்து நடந்தேன். இருமருங்கிலும் வேப்ப மரங்கள் பூத்துக் குலுங்கின. புன்னை மரங்களில் பச்சைப் பசுந்துளிர்கள் தோன்றிக் காற்றைக் குளிரச் செய்தன. மாந்தளிர்கள் செப்புத் தகடுகள் போல் பளபளத்தன. மல்லிகை மலர்கள் மணம் கமழ்ந்தன. ஆவாரம் பூக்கள் ஆங்காங்கே தங்கக் காசு மாலைகள் தொங்குவன போலக் காட்சி தந்தன. பாறைகளில் ஆங்காங்கே தேங்கிக் கிடந்த நீரில் கதிரவன் ஒளிபட்டு வைரம் போல் மின்னின. கோபுரத்தையடைந்தபோது குவிந்திருந்த மலர்க்கை என்னை அருகில் அழைத்து அணைத்

தது. சிரித்த செவ்வாய் என்னிடம் அன்பாகப் பேசியது. மின்னிய கண்கள் என்னைக் கருணையோடு பார்த்தன.

'நீங்கள் தான் சிரித்தீர்களா?''

'ஆம்' என்பதுபோல் ஒரு மௌனம்.

'ஏன் சிரிக்கிறீர்கள்'

'கல கல' எனப் பெரும் சிரிப்பொலியே கேட்டது.

'குழந்தாய்! சிரித்தது ஏனென்றா கேட்கிறாய்? அங்கே பார். நான் ஏன் சிரித்தேன் என்று உனக்கே புரியும் என்று சொல்லி என்னைப் பார்க்கச் சொன்னார். கிடுகிடு எனக் கதிரவன் சுழன்றான். காலம் உருண்டு விரைந்து கடந்தது எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கடந்தனவோ.


கண்முன் ஒரு பெரிய பட்டணம். முகப்பில் ஒரு பெரிய வாயில். அதில் தொந்திபுரம் என்று எழுதியிருந்தது. அங்கு மனிதர்கள் போன்ற உருவங்கள் பல தெரிந்தன. சின்ன சின்ன மாங்கொட்டை போலத் தலைகள், கோழிக் கால் போன்ற கைகள், ஆனால் பஞ்சு மூட்டை போன்ற தொந்திகள், அந்தத் தொந்தியை நிரப்புவதற்கு வாய் படாத பாடு பட்டது. பற்கள் தேய்ந்து போயின உதடுகள் அசைந்து அசைந்து சோர்ந்து போயின. வளைந்து, குறுகி, நெளிந்த குச்சுப் போன்ற கால்களினால்

அந்தத் தொந்தியைத் தாங்க முடியவில்லை தொந்திபுர வீதிகளில் மருத்துவ நிலையங்கள் பல இருந்தன. அவர்கள், அசைய முடியாமல் கிடக்கின்ற தொந்திபுர மக்கள் ஒவ்வொருவ ரிடமும் சென்றார்கள். நீங்கள் நடக்கவேண்டும், உழைக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்டது செரிக்கும், உயிரோடு சில காலம் வாழ முடியும் என்று அறிவுரை கூறினார்கள்.

நாங்கள் ஏன் உழைக்க வேண்டும்? எங்க ளுக்கு வேண்டிய உணவுகள் இருக்கின்றன. நாங்கள் ஏன் நடக்க வேண்டும்? எங்களுக்கு வண்டிகள் இருக்கின்றன என்று மறுத்துக் கூறினர். நீங்கள் நடக்காமல் இருந்தால், உங்கள் கைகள் உழைக்காமல் இருந்தால் உங்கள் தொந்திகள் வெடித்துவிடும். நீங்கள் செத்துப் போவீர்கள். அதனால்தான் சொல் கிறோம். வேலையில்லாவிட்டாலும் உழை யுங்கள்; எங்கும் போக வேண்டாவிட்டாலும் நடவுங்கள். இங்கிருக்கிற கல்லை அங்கே வையுங்கள்; அங்கே இருக்கிற கல்லை இங்கே வையுங்கள்; இதுதான் உடற்பயிற்சி. இங்கி ருந்து வேகமாக அங்கே செல்லுங்கள்; அங்கி ருந்து வேகமாக இங்கே வாருங்கள்; இதுதான் நடைப்பயிற்சி.

இப்படியே உடற் பயிற்சியும் நடைப் பயிற்சியும் செய்து கொண்டே இருங்கள். அப்போதுதான் நீங்கள் தின்று கொண்டே

இருக்கலாம் என்று சொன்னார்கள். அதைக் கேட்டுத் தொந்திபுர மக்கள் எல்லாம் குச்சிக் கால்களைத் தூக்கிதூக்கி வைத்து நடந்தார்கள்.



கோழிக் கைகளால் கற்களைத் தூக்கி தூக்கி வைத்து உழைத்தார்கள். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கலகல என்று நானும் சிரித்தேன். ஆனால், தொந்திபுர மக்களோ கோழிக் கைகளை இடுப்பில் ஊன்றிக் கொண்டு குச்சிக் கால்களில் தொந்தியைச் சுமந்து கொண்டு கண்ணீர் விட்டு அழுதார்கள். அண்ணாந்து

அந்தக் கருணைக் கண்களைப் பார்த்தேன். அதில் ஒரு மின்னல் புன்னகை தோன்றி என்னை இன்னொரு திசையைக் காணுமாறு குறித்தது. அந்தக் கண்கள் குறித்த திசையைப் பார்த்தேன்.

தொந்திபுரம் போலவே அந்தப் பக்கத்திலும் ஓர் ஊர் இருந்தது. இந்த ஊர் வாயிலில் நந்திபுரம் என்று எழுதி யிருந்தது. இங்கும் மனிதர்கள் போல் சில உருவங்கள் இருந்தன. தொந்திபுரத்து மக்களுக்கு இருந்தது போலவே இங்கும் குருவித் தலையர்களாக இருந்தனர். ஆனால், கைகளும் கால்களும் மட்டும் முறுக்கேறி நரம்பு புடைத்து, இரும்பு உலக்கைகள் போல் காணப்பட்டன. பிரிக்காத பிளாஸ்டிக் பைகள் போல வயிறுகள் ஒட்டியிருந்தன. மொத்தத்தில் கைகளும் கால்களும் ஏதோ ஒரு அட்டையில் ஒட்டி வைத்தது போல மேலும் கீழும் தொங்கின.

மாடுகள் போல் அவர்கள் உழைத்துக் கொண்டிருந்தார்கள். உழைத்து உழைத்து அவர்கள் சேர்த்த பொருளெல்லாம் வண்டியில் ஏற்றப் பட்டன. அந்த வண்டிகள் தொந்திபுரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. வண்டியில் ஏற்றிவிட்ட அந்த உருவங்கள் மயங்கி மயங்கி விழுந்தன. அதைப் பார்த்த மருத்துவர்கள் கைகளுக்கும் கால்களுக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும்; சத்தான உணவு

உண்ண வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள். ஆனால் மருத்துவர்கள் சொன்ன அறிவுரைகள் மயங்கிக்கிடந்தவர்கள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. வருத்தத்தோடு மீண்டும் அந்தக் கருணைக் கண்களைப் பார்த்தேன். சோகப் புன்னகையொன்று தோன்றியது. இன்னொரு திசையில் அவர் திரும்பிப் பார்த்தார்.

அவர் பார்த்த திசையை நானும் நோக்கினேன். அங்கும் ஓர் ஊர் இருந்தது. இந்த ஊர் வாயிலில் மந்திபுரம் என்று எழுதியிருந்தது. இங்கு உலவிக் கொண்டிருந்த உருவங்களுக்குக் குச்சிக் கால்களும் கோழிக் கால்களும் அட்டை வயிறும் அமைந்திருந்தன. ஆனால் தலையோ பரங்கிக்காய் அளவு பெரியதாய் இருந்தது. ஒவ்வொரு உருவமும் இரு கைகளாலும் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு அங்கங்கே இருந்தன. இருந்த இடத்தில் இருந்த படியே கைகளில் எதையோ வைத்துக் கொண்டு ஒரு கூட்டம் என்னவோ செய்தது. உடனே இன்னொரு கூட்டத்தில் பரங்கித் தலைகள் பிளந்து பிளந்து உடையிலாயின. இதைப் பார்த்து இன்னொரு கூட்டம் சிரித்துக் கொண்டு இருந்தது. அச்சத்தோடு அந்தக் கருணைக் கண்களைப் பார்த்தேன். அந்தத் தாமரைத் திருவாய் மெல்ல அசைந்தது.

'உயிர்கள் எதற்கும் இல்லாத சிந்திக்கும் திறனுள்ள மூளை கொடுத்தேன். மூளைகள்

இரக்கமற்று அரக்க நெறியில் போகாமலிருக்க அன்புள்ள இதயம் கொடுத்தேன். அன்பும் அறிவும் செயல்பட வேண்டும் என்பதற்காகப் பசிக்கின்ற வயிறு கொடுத்தேன். செயல்படுவதற்குத் துணை செய்வதற்காக உழைக்கின்ற கைகளையும் கால்களையும் கொடுத்தேன். இவையெல்லாம் ஒன்றாக இணைந்து சாதாரண மனிதன் மாமனிதனாக, தெய்வீக மனிதனாக உயர வேண்டுமென்று கருதி எல்லாம் அளித்தேன். ஆனால் சில மனிதர்கள் பரங்கித்தலையர்களாக மூளை கொழுத்து இதயமில்லாது போனார்கள். இன்னும் சிலர். பிறருழைப்பையுண்டு கொழுத்து உழைக்காத தவறினால் நடப்பதற்காக நடக்கிறார்கள். வேலையில்லாமல் கையையும், காலையும் காலையும் மாலையும் ஆட்டிக் கொண்டும் ஓட்டிக் கொண்டும் இருக்கிறார்கள்.

'இந்த வேடிக்கையைப் பார்த்து எத்தனையோ நாளாக வேதனையோடு நான் சிரிக்கிறேன். சிரித்துக் கொண்டே இருக்கிறேன். இன்று உன் காதில் கேட்டது போல் தெரிகிறது. நீ பார்த்தாய் அல்லவா? ஏன் சிரிக்கிறேன் என்று தெரிந்து கொண்டாயா?' என்று சொல்லி அந்தச் செவ்விதழ்கள் மூடிக் கொண்டன. அந்தக் கருணைக் கண்கள் மறைந்துபோயின. அந்தச் சிரிப்பொலியும் என்காதில் கேட்கவில்லை.

# 15. வெள்ளம் வந்துவிட்டது

இரவு எல்லாம் ஒரே புழுக்கம். காற்று கொஞ்சம்கூட இல்லை. தென்னந்தோப்பு அசையாமே அப்படியே நின்று கொண்டிருந்தது. மாந்தோப்பும் அப்படியே ஓர் இலை கூட அசையிலெ. தூக்கமே வரலெ. பொழுது எப்படா விடியும்னு ராத்திரி, எல்லாம் உட்கார்ந்து கிட்டே இருந்தேன். விடியற நேரம். ஐயையோ கொல்றானே! அய்யாமாரே ஓடி யாங்க! 'ஐயையோ கொல்றானே!' என்ற ஓலம் கேட்டது.

மாரியாயி குரல் அது. அவ புருசன் கருப்பனின் அடி தாங்காமல் கத்தும் குரல் அது. இன்றல்ல; நேற்றல்ல; ஐம்பது ஆண்டுகளாகக் கேட்டுக் கிட்டிருக்கிற கூக்குரல்தான் அது. மாரியாயி வீட்லெ காலையிலெ கேட்கும். காளியாயி வீட்லெ ராத்திரி கேட்கும். குப்பாயி வீட்லெ நடு ஜாமத்திலெ கேட்கும். எல்லாம் குடிதான்.

கருப்பன் இரயில்வேயிலெ காங்கிமேன் காளியாயி புருசன் குப்பன் பண்ணை ஆள் பெரிய

பண்ணை சாயுங்காலம் கொடுக்கும் காசை வாங்கி வழியிலெ ரெண்டு மொந்தை போட்டுக்கிட்டு வந்து கலாட்டா பண்றது அவன் வாடிக்கை.

குப்பாயி மவன் கோவிந்தன் ரொம்ப நாளா நல்லாத்தான் இருந்தான். எட்டாவது வரை படிச்சவன். அவன் பொண்டாட்டி பச்சையம்மா ஒரு கைக் குழந்தையைப் பெத்துப் போட்டுட்டு அவனை விட்டுட்டு ஓடிப் போனதிலேயிருந்து அவன் அப்படி ஆயிட்டான்.

பச்சையம்மா பச்சைக்கிளி மாதிரி இருப்பா. இவன் கோயில்காளை மாதிரி கொழு கொழுன்னு இருந்தான். கிராமப் பஞ்சாயத்துலெ வெட்டியான் வேலெ பார்த்துக் கிட்டிருந்தான். வெண்மணிக் கொடுமைக்குப் பிறகு கிராமப் பஞ்சாயத்துலெ உறுப்பினன் கூட ஆயிட்டான்.

யாரோ ஒருத்தன். அவன் பெண்டாட்டிக்குச் சொந்தம்னு பட்டாளத்திலேயிருந்து வந்தான். ஊர்த் திருவிழா இரண்டுநாள் தங்கி ஊர்த் திருவிழா பார்க்க வந்தவன் கோவிந்தனை வாழ் நாள் எல்லாம் அழுவச்சிட்டு அவன் பெண்டாட்டி பச்சையம்மாளோடு ராவோடு ராவா ஓடிப்பொயிட்டான். அன்னைக்கு, அந்த ராத்திரியிலே ஆரம்பிச்சதுதான். குடிச்சிட்டு ஓவென்னு அழுதுகிட்டு ஓடிப் போனவ மேலே உள்ள கோவத்தை எல்லாம் தன் ஆத்தாமேலே காட்டி

அடித்துத் தீத்துக்குவான். இதை எல்லாம் ஐம்பது வருசமா கேட்டுக் கேட்டுப் புளிச்சிப் போச்சு; மனமும் மரத்துப் போச்சு. பொழுது விடியிராப்லெ இல்லை. காலாற நடக்கலாம்னு குடிசையைச் சாத்திட்டு வெளியே வந்தேன்.

வெறிச்சினு கிடந்த அறுவடையான வயல் களைப் பார்த்தேன். வெடித்துப் பாளம் பாள மாகக் கிடந்தன. அப்படியே வரப்பில நடக்க லானேன் இடை இடையே எலி புடிக்க வெட்டி வெட்டி வரப்பு உடைந்து இருந்தது. வரப்புலெ ஏறியும், வயலுலெ இறங்கியும் நடந்துகிட்டே ரயில்வே லயன் கிட்டே வந்துட்டேன். ஆறு மணி கால வண்டி சென்னையிலிருந்து வர்ரது 'ஊ' இன்னு ஊளையிட்டுக்கிட்டு ஒத்தைக் கை காட்டியைத் தாண்டிப் போச்சுது. கொஞ்ச நேரம் நின்னு வேடிக்கை பார்த்தேன். ஐம்பது வருசமா இப்படிப் பார்த்துக்கிட்டேதான் இருக் கேன். நானும் அப்படியே இருக்கேன். இந்தப் பக்கம் போற ரயில் வண்டியும் அப்படியே தான் இருக்கும். இந்தச் சேரியும் அப்படியேதான் இருக்கு.

"என்ன தாத்தா!... எங்கே ரயில்வே லயனைப் பார்த்துக்கிட்டே நிக்குறீங்க...?"


தோளைத் தொட்டுக்கிட்டுப் பேசறது யாருன்னு திரும்பிப் பார்த்தேன். கோவிந்தன் மவன் கோபாலு, சென்னைக்குப் படிக்கப் போனவ.

என்னடா பயலெ கோவாலு எப்ப வந்தெ — இந்த ரயிலிலா... படிப்பு எல்லாம் முடிஞ்சிப் போச்சா?

முடிஞ்சி போச்சி தாத்தா — வேலெ கூட கிடைச்சிருக்கு — வாத்தியாரு வேலெ — நம்ம ஊர்லெதான். அப்பா, ஆயா நல்லா இருக்காங் களா?

ஏண்டா முட்டா பயபுள்ளெ! ஊருக்குத் தான் வந்துட்டேலே — ஊட்டுக்குப் போனா தெரியுது — எல்லாம் நல்லாத்தான் இருக் காங்க. போடா — போ. பட்டணத்திலேருந்து என்னடா வாங்கியாந்தே — பைகனமா இருக் குதே — வாசனை மூக்கைத் தொளைக்குதே — பலாச்சுளையா — எனக்கு வேண்டாம்பா — உன்னைக் கஷ்டப்பட்டு வளத்த உன் ஆயா வுக்கும் — புத்திகெட்டு கிடக்கிற ஒன் அப்ப னுக்கும் கொடு. நல்லது தின்னு, நல்லது கேட்டு நல்லது பார்த்து அவளுக்கு எத்த னையோ வருசமாச்சு. ஒன்னை நம்பித்தான் இருக்கா.

நான் ‘டேய் கோவாலு!’ என்று எதையோ நினைத்துக் கொண்டு கத்தினேன். டேய்! ஒன்னெ நம்பி ஒன் அப்பன், ஆயா மாத்திரம் இல்லெடா — என் தலை மாதிரி நரைச்சுப் போன இந்தச் சேரியும் தாண்டா ஒன்னெ நம்பி இருக்கு என்றேன்.



அவன் திரும்பி என்னைப் பார்த்தான் — தீர்க்கமாகப் பார்த்தான் — நான் அதுக்குத் தானே திரும்பி இங்கேயே வந்திருக்கேன் — என்பது போல அந்தப் பார்வை தோன்றிற்று. என் கண்கள் குளமாயின. மனது குளிர்ந்தது. என்றோ காவிரியாற்றில் பொங்கி வந்த வெள்ளம் என் நினைவுக்கு வந்தது.

# 16. இன்னும் வாழணும்; இன்னும் படிக்கணும்

"சோமசுந்தரம்! இன்றைக்குத் தேனூர் முதியோர் பள்ளி விழா நிகழ்ச்சி இருக்குதில்லெ. முன்னறிவிப்பு அனுப்பிட்டிங்களா?"

'காலையிலெ முதியோர் சங்கத் தலைவர் சாம்பசிவனார் வந்து போனாருங்க. எல்லாம் தயார் செஞ்சுட்டோம். ஐயாவைச் சாயுங்காலம் அழைச்சிக்கிட்டு வந்திடுன்னு சொல்லிப் போனாரு. ஒங்களை நேரில் பார்த்துச் சொல்லத்தான் வந்தாரு. நீங்க கலெக்டர் கூட்டத்திற்குப் போயிருந்திங்க. கொஞ்ச நேரம் இருந்து பார்த்துட்டு என்னிடம் சொல் லிட்டுப் புறப்பட்டுட்டாரு."

மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. வெப்பம் மட்டும் தணிந்தபாடில்லை. கடிகாரச் சிறிய முள் மூன்று மணியை நெருங்கிக் கொண் டிருந்தது. நான்கு மணிக்காவது புறப்பட்டால் தான் தேனூரை ஐந்து மணிக்கு அடையலாம்.

தேனூர் காவிரிக்கரை ஓரத்தில் அமைந்திருந்த ஒரு சிற்றூர். தென்னந் தோப்புகள், வயல்வெளிகள், தூங்குமூஞ்சி மரம் நிற்கும் நெற்களம், கிழக்கே ஒரு தாமரைக்குளம், சின்ன பிள்ளையார் கோயில், கிழக்கே மேற்காக ஒரு தெரு, முப்பது முப்பத்தைந்து வீடுகள். பக்கத்தில் ஒரு சேரி. பத்துப் பதினைந்து வீடுகள். அவ்வளவுதான். ஆனால் அத்தனை வீட்டிலும் அத்தனை பெரியவர்களும் படிக்காத பாமர மக்கள். பட்டணத்தில் வாழும் படித்தவர்களிடம் கொத்தடிமைகளாகப் பரம்பரையாக உழைத்து மெலிந்து போனவர்கள். இங்கு, ஒரு முதியோர் பள்ளி மையம் தோற்றுவிக்க வேண்டும் என்று பக்கத்து நகரத்தில் எழுத்தாளராகப் பணி புரியும் ராமையா எடுத்த முயற்சிதான் இன்று ஒரு முதியோர் பள்ளி இங்கு நிகழக் காரணம். இந்த எண்ணங்களுடன் முக்கிய கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திட்டு விட்டு முகம் கழுவிக் கொண்டு தயார் ஆனேன். வாயிலில் ஜீப் சத்தம் கேட்டது. மணியைப் பார்த்தேன். சரியாக நான்கு ஆகியிருந்தது. மோசஸ் காலம் தவறாத நல்ல காரோட்டி. நானும் சோமசுந்தரமும் ஜீப்பில் ஏறி அமர்ந்தோம்.

பட்டணத்து நெரிசல்களில் நின்று நின்று ஹாரன் முணுமுணுக்க ஒருவாறு கடந்து நெடுஞ்சாலை வழியே வந்து கிளைப்பாதை ஒன்றில் ஜீப் திரும்பியது. நல்ல இதமான காற்று.

கண்ணுக்கு இனிய காட்சி தரும் தென்னந் தோப்புக்கள். பசிய துளிர் தளிர்த்துக் கொண்டிருக்கும் வேப்ப மரங்கள். தேனூரை நெருங்கிக் கொண்டிருந்தோம். என் மனதில் ஒரு புதிய எண்ணம் தோன்றியது.

"இரண்டு ஆண்டுகளாக முதியோர் பள்ளி இங்கு நிகழ்ந்து வருகிறது. இங்கு வரும் போதெல்லாம் எல்லா விழாவிலும் நானே பேசுகிறேன். இன்று, இந்த விழாவில் இந்த ஊர் மையத்தில் கற்றுக் கொண்டிருக்கிற முதியோர் சிலரைப் பேசச் சொல்ல வேண்டும். முதியோர் பள்ளியில் அவர்கள் பெற்ற அனுபவத்தைப் பற்றிக் கேட்க வேண்டும்" என்று எண்ணினேன்.

அதற்குள் தேனூர் தாமரைக்குளம் வந்து விட்டது. பிள்ளையார் கோயிலுக்கு முன் இருந்த ஒரு புல்வெளியில் ஒரு மேடை அமைத்துச் சிறிய பந்தல் ஒன்று போட்டிருந்தனர். எல்லாரும் தயாராக எங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். ஒலி பெருக்கி மின்விளக்கு எதுவும் வேண்டாம். மாலை ஏழு மணிக்குள் கூட்டத்தை முடித்து விடலாம். அதுவரை வெளிச்சம் இருக்கும். அது போதும். கலந்து கொள்ளும் முதியவர்கள் பெரும்பாலும் முப்பது முப்பத்தைந்து பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். எனவே, ஒலி பெருக்கிக்கும் தேவை இருக்காது. மாலை, மரியாதை எல்லாம் எனக்கு

வேண்டாம். சிக்கனமாக, எளிமையாக ஆனால் எல்லோருக்கும் பயன்படும்படியாக விழாக்கள் அமைய வேண்டும். முதியோர் பெறும் பயனே இவற்றின் முக்கிய நிகழ்ச்சிகள் என்பது என் எண்ணம்.

மேடையில் அமர்ந்தேன். நிகழ்ச்சி நிரல் மேசை ஒன்றில் என் முன்னே வைக்கப் பெற்றிருந்தது. பார்த்தேன். எப்போதும் போல் இறைவணக்கம், வரவேற்புரை சிறப்புச் பேச்சாளராகிய என்னுரை, பிறகு நன்றி உரை; நாட்டு வாழ்த்து என்றிருந்தது. வரவேற்புரை முடிந்ததும் தலைவர் சாம்பசிவனார் சிறப்புச் சொற்பொழிவாற்ற என்னை அழைத்தார். கூட்டத்திற்கு வந்திருந்தோரை எல்லாம் மெல்லத் தலை நிமிர்ந்து ஒரு நோட்டம் விட்டேன். பச்சையப்பர் என்னும் முதியவர் தூய வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டு பச்சைக் கரையிட்ட துண்டு போட்டுக் கொண்டு கூட்டத்திற்கு நடுவில் அமர்ந்திருப்பதைப் பார்த்தேன்.

நரைத்த உரோமத்தோடு அகன்றிருந்த அவர் மார்பில் அந்தப் பச்சைக் கரையிட்ட வெள்ளைத் துண்டு காற்றில் மெல்ல அசைந்து கொண்டிருந்தது. பக்கத்தில் அவருடைய மனைவி வள்ளிப் பாட்டி கெம்பு வண்ணப்புடவை கட்டிக் கொண்டு அவர் அருகில் அமர்ந்திருந்

தார். முன்னே கருப்பையா—பின் வெள்ளைச் சாமி, ரங்கய்யன், பச்சையம்மாள் இப்படிப் பலர்.



'பெரியோர்களே! தாய்மார்களே! இன்னைக்கு நான் பேசப் போறதில்லெ. நீங்க எல்லாம் ரெண்டு வருஷமா மாலையிலெ வந்து படிச்சிக்கிட்டிருக்கீங்க. இந்த மையம் இந்தப் பக்கத்து ஊர்களில் உள்ள மையங்களைவிட சிறந்த மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அப்படின்னா நீங்க எல்லாம் கல்வியிலெ, படிப்பிலெ நிறைய முன்னேறியிருக்கீங்கன்னு பொருள். அப்படி என்ன முன்னேற்றம் நீங்க அடைந்திருக்கீங்கன்னு ஒங்க வாயாலேயே

கேட்க ஆசைப்படுகிறேன். அதனாலே இந்த ஆண்டு விழாவிலே நீங்கதான் பேசப் போறீங்க. கொஞ்சம் நேரம் ஆனாலும் பரவாயில்லை. முன்னிலாக் காலந்தான், நீங்களே பேசுங்க. நிறையப் பேசுங்க. மொதல்ல நம் பச்சையப்பர் பேசப் போறார். என்ன பச்சையப்பரே நான் சொன்னது சரிதானே, வாங்க பச்சையப்பர் அவர்களே — வந்து பேசுங்க.

'என்னய்யா! என்னைப் போயி நாயைக் குளிப்பாட்டி நடுவீட்லெ வைச்ச மாதிரி. ஏதோ பெரிய அய்யா சொல்லிப்புட்டிங்க, மாட்டேங் குறது தப்பு. அதோடு அப்பப்ப இங்கே வந்து எங்களுக்குப் பாடமும் சொல்லிக் கொடுத்திருக் கீங்க.' மாதா பிதா குரு தெய்வம் என்பாங்க; நீங்க குரு— எங்க தெய்வம். ஒங்க வார்த் தையைத் தட்டக் கூடாது. நான் பேசறேன் என்று எழுந்து வந்து மேடையில் நின்று பச்சையப்பர் பேச ஆரம்பித்தார்.

'அய்யா! இந்த முதியோர் கல்வி எதுக்குடா அறுபது எழுபது வயசு வரை இந்தக் கிராமத் தில் ஆனா ஆவன்னா தெரியாமெ ஒழைச்சிப் பொழைச்சாச்சி. கல்யாணம் செய்துகிட்டு, குழந்தை குட்டிகளைப் பெத்து, பேரன் பேத்தி எடுத்துத் தாத்தாவா கூட ஆயிட்டேன். வீடு போ போங்குது; காடு வா வாங்குது. இப்ப படிச்சு என்னடா புண்ணியம்னு மொதல்லெ

நெனச்சேன். அய்யா அப்புறம் நீங்க வந்து கெஞ்சி கெஞ்சிக் கூப்பிட்டீங்க. சரி வயல் வேலைக்குத்தான் போக முடியலெ, இங்குத்தான் போயி உட்காருவோமேன்னு வந்தேனுங்க!

'தொடக்கத்திலெ 'டப்பா டமாரம்; பட்டம் படம்னு படிக்கிறது ஒரு பக்கம் சிரிப்பா இருக்கும்— இன்னொரு பக்கம் அழுகை அழுகையாய் வரும். அப்புறம் படிப்லெ ஒரு ருசிங்க. 'ஆனா ஆவன்னா' எழுத்து எல்லாம் கத்துக்கிட்ட உடனே— ஆஹா! இந்த அறுபத்தைந்து வருஷமா விஷயங்களை எல்லாம் என்னைச் சுத்தி இருக்கிற கழனிக்காடு— தென்னந்தோப்பு தாமரைக்குளம்— பிள்ளையார் கோயில், என் பொண்டாட்டி பேரு— என் சின்னப் பேரன் முத்தன் பேரு எல்லாம் எழுதி எழுதிப் பார்த்தப்பொ எவ்வளவு மகிழ்ச்சியா இருந்துது. எல்லாப் பொருளும், எல்லா விஷயங்களும், எல்லாரும் ஆனா ஆவன்னாக்குள்ளே அடங்கியிருப்பது போல, அவை எல்லாம் அவர் எல்லாம் என் கையில் இருக்கிற பல்பத்துக்குள்ளேயிருந்து வெளி வருவது போல ஒரே ஆச்சரியமா இருந்துச்சு. நினைச்சதை, பார்த்ததை, கேட்டதை எல்லாம் எழுத ஆரம்பிச்சுட்டேன்.

ஊரிலேயிருந்து என் பேரன் பேத்திங்க விடுமுறையில் இங்கே எங்களைப் பார்க்க வந்தாங்க. அவுங்க என்னைப் பார்த்து, நான்

அவுங்க பேரை எல்லாம் எழுதுவது பார்த்து 'ஓ! தாத்தா— நீங்க நல்லா எழுதியிருக்கிறீங் களே'ன்னு சொல்லி மகிழ்ந்தாங்க. அவுங்களிடம் வள்ளுவர் பற்றி, கம்பர் பற்றி எல்லாம் கேட் டேன். அவர்களுக்குச் சொன்னேன்: 'கற்க கசடறக் கற்க' நிற்க அதற்குத் தக' என்ற திருக்குறள் சொல்லி— வள்ளுவர் நல்லவராகத் தான் நின்று நம்மையும் நிற்கச் சொல்கிறார்னு சொன்னேன். என் பேத்தி, டாக்டருக்குப் படிக்கும் என் பேத்தி ஆச்சரியப்பட்டுப் போயிட் டாள்.

இப்போதெல்லாம் மூலை முடுக்கிலே ஒதுங்கிக்கிறது இல்லை. படிச்சவங்களைப் பார்த்தா அவுங்களோடு பேசணும்னு தோணுது. என்னென்ன படிச்சிருக்காங்கன்னு கேட்கத் தோணுது. எனக்குத் தெரிந்ததை எல்லாம் இத்தனை வருஷமாக நான் பட்ட பாடெல்லாம் அவுங்களிடம் எடுத்துச் சொல்லணும்னு தோணுது. அனுபவம் இல்லாத அவுங்க படிப் புக்கு, படித்த என் அனுபவத்தைச் சொல்ல ணும்னு தோணுது. 'ஆனா ஆவன்னா' அது தான் பம்பு செட்டு. பூமிக்குள்ளே பல வருஷமா ஒடுங்கிட்டிருந்த நீர் ஊத்துக்கண்ணைக் கண்டு பிடிச்சுத் திறந்து வெளியே கொண்ணாந்து வயலுக்கு எல்லாம் பாய்ச்சிற பம்பு செட்டு 'ஆனா ஆவன்னா' என் மனசுக்குள்ள முணு முணுத்துக் கிட்டிருந்த முட்டி மோதிக்கிட்டிருந்த

எவ்வளவோ விஷயங்களே இப்பொ என்னாலெ வெளியே கொண்ணாந்து எழுத முடியுது. பிறர் எழுதியதைப் படித்துச் சரிதானா என்று நெனக்க முடியுது.

'ஆமாம்; நெனக்க முடியுது—அப்போ எல்லாம் என்னென்னவோ நெனப்பேன். திடீர்னு பாதி சாமத்திலெ சில நெனப்புகள் வரும். காலையிலெ அதை எல்லாருக்கும் சொல் லணும்னு நெனப்பேன்; மறந்து போயிடும். இப்பொ அப்படி இல்லெ. ராத்திரியே எழுதி வைச்சுடறேன். காலெயிலெ அதைப் படிச்சுக் காட்டறேன். என்னவ—வள்ளியாத்தா கேட்டுக் கேட்டுச் சந்தோசப்படறா—அந்தக் காலத்துலெ—சின்னஞ் சிறுசா நாங்க இருந்த அந்தக் காலத் துலெ மனசுன்னா என்னான்னு தெரியாது. ஏதோ தின்னுகிட்டே வாழ்ந்துட்டோம்; குழந்தை குட்டிகளைப் பெத்துட்டோம்.

இப்போதான் மனசு தெரியுது. மனம் இன்னா என்னான்னு தெரியுது. ஒருத்தர் மனசு இன்னொருத்தருக்கு நல்லா தெரியுது. அவ எழுதறதை என்கிட்டே படிச்சுக் காட்டுவா. நான் எழுதுறதை அவகிட்ட படிச்சுக் காட்டு வேன். என் பெரிய பேரன் காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவன். அவனும் அவன் காதலிச்சுக் கட்டிகிட்டவளும் போன மாசம் வந்திருந்தாங்க. எங்களே பார்த்திட்டு, 'என்ன தாத்தா! எங்கள்

காதலைவிட உங்கள் காதல் நல்லா இருக்கே' என்று சொல்லிச் சொல்லிச் சிரிச்சான். அவ கூட, அவன் காதல் பொண்டாட்டிகூட ஒங்க காதல்தான் உண்மையான காதல் பாட்டி. மனசாலே மட்டும் காதலிக்கிற உங்கள் காதல் மிக உயர்ந்த காதல்; முதியோர் காதல் என்று சொல்லிப் பூரிச்சுப் போச்சு.

"போதுங்களா.... என் பொண்டாட்டி வள்ளி கூட பேசுவா—கூப்பிடுங்க ஐயா."

வள்ளிப் பாட்டியை அழைத்தேன். அந்த அம்மா புதுப்பெண் போல நாணிக் கோணிக் கொண்டு மேடைக்கு வந்தார்கள்.

"என்னய்யா பேசறது—அவரு எப்பவும் இப்புடித்தான். தான் செய்யறதையெல்லாம் நானும் செய்யணுங்கறாரு. பாரதி பாடிய பெண்கள் விடுதலைக் கும்மிப் பாட்டைப் பார்க்காமே எழுதணும்னு எனக்குப் பரீட்சை வைச்சிடுறாரு. அய்யா! மொதல்லெ அவருதான் இங்கே படிக்க வந்துகிட்டிருந்தாரு. முன்னெல்லாம் சாயுங் காலத்திலெ தோட்டதிலெ உட்கார்ந்து தென்னை ஓலை விளக்க மாத்துக்குக் கிழிச்சுகிட்டு இருப்பேன். அப்பொ இவரு பக்கத்துலெ உட்கார்ந்து ஒவ்வொரு ஓலையா எடுத்துக் கொடுப்பாரு. நான் எது செய்தாலும் எனக்குத் துணையா இருப்பாரு. அப்படித்தானுங்க

நானும். இப்பொ அவரு சாயுங்காலம் படிக்க வந்த உடனே எதுவும் தனியா செய்யப் புடிக்கலெ. அழுகை அழுகையா வந்துடுச்சு. சரி சாயுங்காலம் அவரோட வந்து நானும் படிக்கலாம்னு நெனச்சேன். காலேஜ் பசங்க ஆணும் பொண்ணுமா படிக்கிறதை சினிமாவிலே பார்த்த நெனப்பு வந்துச்சு. ஆசையை மனசுக்குள்ளேயே போட்டுப் பூட்டிக்கிட்டேன்.

''ஒருநாள் இவரு ''கல்வியில்லாத பெண்கள் களர் நிலம்; அந்நிலத்தில் புல் விளைந்திடலாம். நல்ல புதல்வர்கள் விளைவதில்லை!''- ன்னு ஐயா சொன்ன பாட்டு ஒண்ணைச் சொல்லி என்னையும் படிக்க முதியோர் பள்ளிக்கு அழைச்சாரு. எனக்குச் சந்தோசம்னா சந்தோசம். படிக்க வந்தேன். கத்துக்கிட்டேன். அப்ப எல்லாம் புதுப்புடவை, புது சினிமான்னா ஆசையா இருக்கும். இப்பொ அதுலெ எல்லாம் ஆசை இல்லெ. யாராவது நல்ல புத்தகம் வாங்கி வருவாங்களான்னு பார்த்துக்கிட்டேயிருப்பேன். அப்படி வாங்கி வந்தா அதை அப்படியே வாங்கிப் படிச்சிடுவேன். அல்லி அரசாணி மாலை, புலந்திரன் தூது, பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை.

கும்பேசுவரர் கோயில் திருவிழாவுக்குப் போனபோது தெருவுலெ போட்டு வித்துக்கிட்டிருந்தாங்க— அதையெல்லாம் படிக்கிறேன்.

ஊர்லெ இருந்து அப்பப்ப வர்ர என் பேரப் புள்ளைங்களுக்குக் கதை கதையா சொல்றேன். இப்பொ என்னைச் சுத்தி குழந்தைங்க 'கதை சொல்லு பாட்டி; கதை சொல்லு'ன்னு உட்கார்ந்துக்குறாங்க. ஏன்தான் வாழுறோம்னு இருந்த எனக்கு இன்னும் வாழணும், இன்னும் படிக்கணும், இன்னும் குழந்தைகளுக்குக் கதை கதையாச் சொல்லணும்னு ஆசையா இருக்கு. பொழுது போச்சுதுங்க. நிறுத்திக்கிறேன் ஐயா— என்று பேச்சை முடித்தாள்.

என் முயற்சி நல்ல பலன் தந்துள்ளது என்ற மகிழ்ச்சியில் ஊருக்கு மீண்டேன்.

## இந்நூலாசிரியரைப் பற்றி



பிறப்பு : **6-10-1932**

67 அகவையான இந்நூலாசிரியர் **டாக்டர் பொன். சௌரி ராசனார்** திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பல்லாண்டு பணி செய்தவர்; சிறந்த எழுத்தாளர்; ஆராய்ச்சி, கவிதை, புதினம், சிறுகதை முதலிய நூல்கள் முப்பத்தைந்துக்கு மேல் எழுதியவர். இவர் தம் முதல் நூல், **'கட்டுரை மணிகள்'** தமிழ் வழங்கும் இந்தியக் கல்விக் கழகம் பலவற்றில் பாட நூலாகும் சிறப்புப் பெற்றது. குழந்தைக் கவிதைத் தொகுப்பு, **'மழலை மலர்கள்'** தமிழகத் தொடக்கப் பள்ளிகளுக்கெனத் தமிழக அரசால் ஏற்கப் பெற்றது. புதினங்களுள் ஒன்றாகிய, **'தாயகம்'** தமிழக அரசின் முதற் பரிசைப் பெற்றது. இவர்தம் சிறுகதைகளில் சில மொழிபெயர்க்கப் பெற்றுத் தெலுங்கு, கன்னட இலக்கிய ஏடுகளில் வெளிவந்துள்ளன. கல்வி, இலக்கியக் கழகம் பலவற்றில் உறுப்பினராக, தலைவராக, செய லாளராகத் தமிழக, இந்திய அளவில் அமைந்து கல்விச் சிந்தனை யும், செயற்பாடும் வளர உதவியவர்.